475

T. N. L. A. Debates

Official Report

Vol. 35 No. 4

1987 (C)

V211,31 N87
N87.35.4
98796

வெளியீடு 10-11-1987 Issued 10-11-1987

529/AL/88

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### செயலக வெளியீடு

475

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
### OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை மார்ச் 31, 1987—தொகுதி 35 எண் 4

Tuesday the 31st March 1987—Volume 35 No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3] [Price Rs. 3

D
V211,31 N87
N87.35-4
78796

## உள்ளடக்கம்.

31—3—1987.

| | |
|---|---|
| | பக்கங்கள் |
| **1. கவன ஈர்ப்பு—** | |
| (அ) தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் தொழிற்சாலையைத் திறப்பது | 473—475 |
| (ஆ) வடலூரிலுள்ள எஸ்.ஐ.எல். தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீரால் பாதிப்பு | 476—478 |
| (இ) நிதி திரட்டியதற்காக மின் வாரிய ஊழியர்கள் மீது எடுத்துள்ள நடவடிக்கை | 478—482 |
| (ஈ) திருக்கோயில் முதுநிலைப் பணியாளர் சங்கத்தினர் உண்ணாவிரதம் | 482—485 |
| (உ) ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மாணவர்களுக்கான முன் தேர்வு பயிற்சி மையக் கட்டடத்தில் பழுது | 485—487 |
| **2. அறிக்கை அளித்தல்—** | 488 |
| பொது நிறுவனங்கள் குழு | |
| **3. வரவு-செலவுத் திட்டம், 1987-88, பொது விவாதம்—** | 15—123 |
| தொடர்ச்சி | 488—517 |
| திரு. கி. மனோகரன் | 518—555 |
| திருமதி டி. யசோதா | 555—597 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 597—5[illegible] |
| **4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**1987, மார்ச் 31, செவ்வாய்க்கிழமை**

**பங்குனி 17, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு-2018.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை"

பொருள் வரும் வழிகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லானே செயல் செய்ய வேண்டும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) குறியிடப் பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. கவன ஈர்ப்பு.

### (அ) தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் தொழிற்சாலையைத் திறப்பது

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தர்மபுரி மாவட்டம், மொரப்பூர் வட்டம், தொட்டம் பட்டியிலுள்ள லாஸ்கோ ஸ்டீல் வார்ப்பட உருக்காலையை நிர்வாகத்தாலும், அங்கத்தினர்களாலும் நடத்த இயலாது மூன்றாண்டுகளாக மூடிக்கிடக்கும் நிலையில், சில தனியார் கம்பெனிகள் எடுத்து நடத்த முன்வருவதால் அதில் பணியாற்றிய 600 தொழிலாளர் நலனையும், நிதி அளித்துள்ள அரசு வங்கிகள், பொது மக்கள் நலனையும் கருத்தில் கொண்டு மேற்படி ஆலையைத் திறக்க அரசு நடவடிக்கை எடுப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

திருவாளர்கள் தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் நிறுவனம் (முன்னாள் லாஸ்கோ ஸ்டீல்) ஆண்டிற்கு 50,000 டன்கள் சிறப்பு அல்லாய் மற்றும் எஃகு தயாரிப்பதற்காக 1962-ம் ஆண்டு துவங்கப் பட்டது. இந்நிறுவனம் அமெரிக்காவிலுள்ள லாட்ரோப் ஸ்டீல் நிறுவனத்துடன் Latrove Steel Limited நிதி மற்றும் தொழில் நுட்பத் தொடர்பு கொண்டது. வள ஆதாரங்கள், நிதி நிலைமை மற்றும் உற்பத்தி முதலியவற்றால் நட்டம் அடைந்தது. 1968-ம் ஆண்டு இந்நிறுவனம் மூடப்பட்டது. இந்நிறுவனத்தை மீண்டும் புனரமைப்பது பற்றி ஆராயப்பட்டது. இந்நிறுவனத்தின் நிர்வாகத்தை டிட்கோ (TIDCO) நிறுவனம் ஏற்று 1971-ம் ஆண்டு மீண்டும் திறந்தது.

2. 1974-ம் ஆண்டில் இந்நிறுவனத்தைத் தேசிய மயமாக்குவது எனக் கொள்கை அளவில் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அதற்குத் தக்க இந்நிறுவனத்தை தேசிய மயமாக்குவதற்கான மசோதா ஒன்று தயாரிக்கப்பட்டு சட்டப் பேரவை முன் வைக்கப் பட்டு நிறைவேற்றப்பட்டது. இம்மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. ஆனால் குடியரசுத் தலைவர் இதற்கான ஒப்புதலை அளிக்கவில்லை. ஆகவே இந்நிறுவனத்தை தேசிய மயமாக்கும் செயற்குறிப்பு கைவிடப்பட்டது. தொடர்ந்து இந்தத் தொழிற்சாலை நட்டத்தில் இயங்கி வந்ததால், இதனை நடத்தி வந்த டிட்கோ நிறுவனம் இதனை நடத்த இயலாது என விலகிக் கொண்டது. டிட்கோ நிறுவனத்திற்கு மட்டுமே, அது இந்நிறுவனத்தை நிர்வகித்த காலக்கட்டத்தில் இந்த நிறுவனம் சுமார் ரூ. 71.15 லட்சங்கள் தரவேண்டியுள்ளது. இதற்கிடையில் டிட்கோ நிறுவனம், திருவாளர்கள் தர்மபுரி காஸ்டிங்ஸ் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பை மீண்டும் 4—4—1984 முதல் அதன் பழைய நிர்வாகக் குழுவிடமே ஒப்படைத்தது.



3. இந்நிலையில் இந்த நிறுவனத்தைப் புனரமைக்க, தேசிய மயமாக்குவது, அரசு எடுத்து நடத்துவது குறித்து எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் ஏற்கனவே முயற்சிக்கப்பட்டு பயன் அற்றுப் போய்விட்டன. இந்நிலையில் இந்த நிறுவனத்தைப் புனரமைப்பது மற்றும் திறப்பதற்கான வாய்ப்புகள் ஏதுமில்லை எனத் தெரிகிறது. தனியார்கள் யாராவது நடத்த முன்வந்தால் வரவேற்கத் தக்கதே.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த லாஸ்கோ ஸ்டீல் நிறுவனம், அரசுத் துறை, பொது மக்கள் மற்றும் பொது நிதி நிறுவனங்கள் ஆகியோரால் ஏறக்குறைய ரூ. 2½ கோடி, ரூ. 3 கோடிக்கு முதலீடு செய்யப் பட்டு நிறுவப்பட்டது; அந்தத் தொழிற்சாலையை 3 ஆண்டுகளாக மூடியிருக்கிறார்கள். அமைச்சருடைய கவனத்திற்கும் நாங்கள் நேரடியாகக் கொண்டு வந்திருக்கிறோம். பிறகு, அந்த நிறுவனத் தின் பங்குதாரர்கள், அதாவது ஷேர்ஹோல்டர்ஸ் எடுத்து நடத்து வதற்கு முன்வந்து அவர்களிடத்திலே ஒப்படைத்திருக்கிறார்கள். அவர்களும் ஏறக்குறைய 2½ ஆண்டுக்காலமாக ஒன்றும் செய் யாமல் அந்த நிறுவனம் நடப்பதற்கு ஏதுவான நடவடிக்கை எடுக்கப்படாமல் மூடிக் கிடக்கிறது. சில தனியார்கள் நடத்து வதற்கு முன் வந்திருக்கிறார்கள். அவர்கள் அமைச்சரை நேரிலே சந்தித்து அந்த நிறுவனத்தை நடத்துவதற்குச் சில வழிகளைக் கேட்களிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களிடத்திலே நேரிடையாகத் தொடர்பு கொண்டு அந்த நிறுவனம் சிறப்பாக நடப்பதற்குத் தக்க நடவடிக்கை மேற் கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர் களே, இந்த நிறுவனம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டும் சரிவர நடத்த இயலவில்லை. இப்பொழுது தனியார்கள் முன்வருவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித் தார்கள். அவர்கள் வந்தால், அவர்களை வரவேற்று, அவர் களுக்கு, நடத்துவதற்குத் தேவையான சலுகைகளை அளித்து, ஒப்படைக்க அரசு தயாராக இருக்கிறது.

**(ஆ) வடலூரிலுள்ள எஸ்.ஐ.எல். தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் பாதிப்பு.**

**திரு. ஏ. தங்கராசு:** பேரவைத் தலைவர் அவர்களே, "தென்னார்க்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடி தொகுதியில் உள்ள வடலூர் எஸ்.ஐ.எல். கம்பெனியிலிருந்து வெளிவரும் ஆசிட் கலந்த கழிவு நீர், அருகாமையிலுள்ள ஐய்யனேரியில் கலந்துவிடுவதால் அப்பகுதி விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. பல ஆடு மாடுகள் இறந்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

தென்னார்க்காடு மாவட்டம், வடலூரில் உள்ள திருவாளர்கள் சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் இரண்டு தொழிற்சாலைகளாக, இன்ஸுலேட்டர் மற்றும் இன்ஸுலேட்டர் பிட்டிங்ஸ் ஆகியவற்றைத் தயாரித்து வருகின்றது. முதல் தொழிற்சாலை மாதம் ஒன்றிற்கு இன்ஸுலேட்டர் 1,000 மெட்ரிக் டன்னும், வார்ப்படம் 175 மெட்ரிக் டன்னும் மற்றும் போர்ஜிங்ஸ் 18 மெட்ரிக் டன்னும் தயாரிக்கிறது. க்வார்ட்ஸ், ஃபெல்ட்ஸ்பார், களிமண், அலுமினா டால்மைட், பெண்டோனைட், இரும்பு வளையம், ரோலிங் மாஸ் முதலிய மூலப் பொருட்கள் செய்முறையில் உபயோகிக்கப்படுகிறது.

அன்றாடம் மற்றும் செய்முறைகளுக்கும் தினசரி உபயோகப்படுத்தப்படும் நீரின் அளவு முறையே 100 கிலோ லிட்டர் மற்றும் 2,160 கிலோ லிட்டர் ஆகும். அன்றாடக் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரின் அளவு முறையே 85 கிலோ லிட்டர் மற்றும் 1,810 கிலோ லிட்டர் ஆகும்.

இரண்டாவது தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 400 மெட்ரிக் டன் இன்ஸுலேட்டர் தயாரிக்கிறது. உபயோகப்படுத்தும் நீரின் அளவு அன்றாடத் தேவை மற்றும் செய்முறைக்கு முறையே 13





கிலோ லிட்டர் மற்றும் 1,200 கிலோ லிட்டர் ஆகும். தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றக்கூடிய அன்றாட மற்றும் தொழிற்சாலைக் கழிவுநீரின் அளவு முறையே 9 கிலோ லிட்டர் மற்றும் 1,000 கிலோ லிட்டர் ஆகும்.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26-வது பிரிவின்கீழ் இவ்விரு தொழிற்சாலைகளும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதி பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளன.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தர நிர்ணயத்திற்கு உட்பட்டு தொழிற்சாலைக் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து வெளியேற்ற வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இவ்விரு தொழிற்சாலைகளுக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. துத்தநாகப்பூச்சு பிரிவிலிருந்து உற்பத்தியாகின்ற தொழிற்சாலைக் கழிவு (10 கிலோ லிட்டர்) அழுத்த வடிகட்டி மற்றும் அமிலக் கழிவுகளிலிருந்து உற்பத்தியாகிறது. மண்பாண்டப் பொருள் பிரிவிலிருந்து உற்பத்தியாகின்ற தொழிற்சாலைக் கழிவு இரு மண் தொட்டிகள் மூலம் படிய வைக்கப்பட்டு வெளியேற்றுவதற்கு முன் துத்தநாகப்பூச்சுப் பிரிவு தொழிற்சாலைக் கழிவு நீருடன் கலந்து வெளியேற்றப்படுகிறது. இவ்வாறு வெளியேற்றப்படும் தொழிற்சாலைக் கழிவுநீர் வெளிர் நிறத்திலும் மிதக்கும் திடப்பொருள்கள், முழுவதும் கரைந்த திடப்பொருள், துத்தநாகம், மாங்கனீசு மற்றும் ஈயம் கலந்ததாகவும் இருக்கும்.

3—3—1987 அன்று தொழிற்சாலையை பார்வையிட்டபோது தொழிற்சாலைக் கழிவுநீர் தொழிற்சாலைக்கு வெளியே ஒரு ஓடையில் கலக்கப்பட்டு அவ்வோடை முழுவதாக அய்யன் ஏரியில் கலப்பது தெரியவந்தது. தொழிற்சாலைக் கழிவுநீரை பாசனத்திற்காக விவசாயிகளால் நெல் வயலுக்குத் திருப்பப்படுவதும் தெரியவந்தது.

இத்தொழிற்சாலை தற்போதுள்ள சுத்திகரிப்பு முறையை மேலும் உயர்த்த கருத்துரு ஒன்றை அளிக்குமாறு கோரப்பட்டது. இத்தொழிற்சாலைகளுக்கு அனுமதி இன்னும் புதுப்பிக்கப்படவில்லை. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

**திரு. ஏ. தங்கராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அந்தக் கம்பெனியை 3—3—1987 அன்று பார்வையிட்டதாகவும் அந்தக் கழிவு நீர் பாசனத்திற்குத் திருப்பி விடப்பட்டு விவசாயிகளால் பயன்படுத்தப்படுவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்லியிருந்தாலும் அந்தக் கம்பெனிக்கு மாசு கட்டுப்பாடு வாரியம் இன்னும் அனுமதி வழங்கவில்லையென்பதையும் சொல்லி இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளின் நிலங்களும், குடிநீரும் பல்வேறு வகைகளிலே பாதிக்கப்படுகின்றன. அந்த அய்யன் ஏரிக்கு மேல் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களுடைய நிலங்கள் பாதிக்கப்பட்டுவிட்டன. இந்த நிலையில் உடனடியாக அந்தக் கழிவு நீரைச் சுத்தப்படுத்தி அந்த விவசாயிகளைப் பாதுகாக்க இனிமேலாவது அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கழிவு நீர் வெளியாகின்ற காரணத்தினால் விளைநிலங்கள் பல பாதிக்கப்படுகின்றன என்பது அரசுக்குத் தெரியும். இதுபோன்ற மோசமான நிலைமைகளைத் தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வாரியத்திற்கு அரசு அறிவுறுத்தியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையை அரசு ஏற்று நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (இ) நிதி திரட்டியதற்காக மின் வாரிய ஊழியர்கள்மீது எடுத்துள்ள நடவடிக்கை.

**திரு. வி. பி சிந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மின் ஊழியர்களில் சிலர் அவர்களின் தொழிற் சங்கம் வெளியிட்ட சிறப்பு மலருக்கு விளம்பரம் பெற்றார்கள் என்பதற்காக 46 ஊழியர்கள் மீது எடுத்த ஒழுங்கு நடவடிக்கைகளைக் கைவிட வேண்டுமென்று தொழிலாளர் துறை ஆணையரின் உத்தரவிற்குப் பிறகும், மற்றும் சென்னை உயர்நீதி மன்றம் தடை உத்திரவு போட்ட பிறகும், தமிழ்நாடு மின்வாரியம் தன்



முயற்சியைக் கைவிடாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை.

பொது மக்களை வற்புறுத்தி, பலவித தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காகவோ அல்லது மற்ற காரணங்களுக்காகவோ நிதி திரட்டுவது, வாரியத் தொழிலாளர்களின் ஒரு குறிப்பிட்ட பகுதியினரின் வழக்கமாக இருந்து வந்துள்ளது. வாரியக் களப்பணியாளர்களின் தயவு தேவைப்படுவதால் இத்தகைய வேண்டுகோள்களை பொது மக்களால் நிராகரிக்க முடிவதில்லை. இத்தகைய நடவடிக்கைகள் பொதுமக்களுக்குத் தொல்லை தருவதோடு நில்லாமல், வாரியத்தின் மற்றும் அரசாங்கத்தின் நற்பெயரைப் பொதுமக்கள் கண்ணோட்டத்தில் களங்கப்படுத்தியுள்ளன.

2. நுகர்வோரிடமிருந்து வந்த புகார்களின் அடிப்படையில் வாரிய ஊழியர்கள் பொதுமக்களிடமிருந்து எந்த உருவிலும், எந்தப் பெயரிலும், எந்த முறையிலும் எந்தவிதமான நிதியும் திரட்டக்கூடாது எனத் தெளிவாகத் தெரிவித்து 12—7—1983 அன்று மின்வாரியம் சுற்றறிக்கை ஒன்று வெளியிட்டது. சிறப்பு மலர்களில் விளம்பரங்கள் அச்சிடுவதற்கான கட்டணம் என்ற பெயரிலும் இத்தகைய நிதி வசூலிக்கும் முறை திறமையாகக் கையாளப்படுகிறது. எனவே, இத்தகைய சிறப்பு மலர் விளம்பரவாயிலான நிதிகளும் இவ்வுத்தரவின்கீழ் அடங்கும் எனக் குறிப்பாக இந்தச் சுற்றறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டது. இவ்வுத்திரவுகள் மீறப்பட்டால் கடுமையான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

3. தெளிவாகவும் ஐயமில்லாவகையிலும் சொல்லப்பட்ட இவ்வுத்திரவுகளையும் மீறி, வாரிய ஆணைகளை வெளிப்படை யாக இகழும் வகையில் பொதுமக்களிடம் நிதி வசூலிப்பதை வாரியத்திலுள்ள குறிப்பிட்ட யூனியன்கள் தொடர்ந்து செய்து வந்துள்ளன.

4. எனவே, சி.ஐ.டி.யூ. நடத்திய 5-வது மாநில மாநாட்டை முன்னிட்டு வெளியிடப்பட்ட சிறப்பு மலருக்கென நுகர்வோ ரிடமும், பொதுமக்களிடமும் விளம்பரக் கட்டணங்கள் வசூலித்ததற்காக மேற்சொன்ன யூனியனைச் சார்ந்த 41 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

5. இந்த யூனியன் இன்னொரு யூனியனுடன் (தமிழ்நாடு மின்சார வாரியக் கணக்காயர் மற்றும் களத் தொழிலாளர் சங்கம்) சேர்ந்து, தொழிலாளர் ஆணையர் முன் ஜூலை 1985-ல் ஒரு தொழில் தகராறை எழுப்பியது. தொழிலாளர் ஆணையர், ஒழுங்கு நடவடிக்கைகளைக் கைவிடுமாறு வாரியத்தைப் பணித்துள்ளார் என்ற இந்தச் சட்டமன்ற உறுப்பினர் கூற்று சரியல்ல. இந்த விவகாரத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டதால் தொழிலாளர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை வாரியம் "விரைவுபடுத்தப்பட வேண்டாம்" என்றுதான் தொழிலாளர் இணை ஆணையர் கேட்டுக் கொண்டார். இவ்வேண்டுகோளை வாரியம் ஏற்றது. இதன் காரணமாக விசாரணைகள் தொடங்கப் பட்ட போதிலும் இறுதி ஆணைகள் பிறப்பிப்பது ஒத்திப்போடப் பட்டது. இதற்கிடையில் வேறொரு யூனியனைச் சார்ந்த இரு தொழிலாளர்கள் ரிட் மனுக்களை (எண் 8552 மற்றும் 8835/85) கொடுத்தனர். இவ்வழக்கில் உயர்நீதிமன்றம் இந்நடத்தை முறைகேடானது என்று கருத்து தெரிவித்து தள்ளுபடி செய்தது. இத்தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. 26—9—1986 தேதியிட்ட தீர்ப்பிற்கு இணங்க யூனியன்கள் கொடுத்துள்ள தொழில் தகராறில் தொழிலாளர் துறையின் விசாரணையோ, புலனாய்வோ இனித் தேவையில்லை எனக்கருதி தொழிலாளர் ஆணையர் 9—1—1987 அன்று உத்திரவு (பத்தி 5-ல் குறிப்பிட்ட தொழிற் தகராறில்) பிறப்பித்து இத் தகராறை முடித்து வைத்துவிட்டார்.



6. தொழிற்சங்க மலர் வெளியீட்டின் மூலம் விளம்பரம் பெற்றதாக 41 மின்வாரிய ஊழியர்கள்மீது, வாரியப் பணி யிலிருந்து வேலை நீக்கம் செய்வதற்காகக் "காரணம் காட்டும் விளக்க நோட்டீஸ்" அனுப்பப்பட்டுள்ளது. இதில் ஆறு மின்வாரிய ஊழியர்கள் உயர்நீதி மன்றத்தை அணுகி இடைக்காலத் தடை பெற்றுள்ளனர். எனவே இந்த ஆறு நேர்வுகளிலும் மேல் நடவடிக்கை எடுப்பதை வாரியம் ஒத்திப்போட்டுள்ளது. இவ்விடைக்காலத் தடையாணையானது இதர 35 பேர்களுக்குப் பொருந்தாது என்பதால் அவர்கள் மீதான நடவடிக்கை, மின்வாரியத்தால் தொடரப்படுகின்றது.

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் டெல்லி உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு ஒன்றில் தொழிற்சாலைக்குள்ளே நடைபெறக்கூடிய முறை கேடுகளைப்பற்றி நிர்வாகம் நடவடிக்கை எடுக்கமுடியும் என்றும், தொழிற்சாலைக்கு வெளியே நடக்கிற எந்த நடவடிக்கை யானாலும் அடிதடி உட்பட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க முடியாது, போலீசோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ தான் அதுபற்றி நடவடிக்கை எடுக்கமுடியும் என்றும் தெரிவித்திருப்பது அரசினுடைய கவனத்திற்கு வந்துள்ளதா? அந்த அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு போட்டுள்ளது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்த கோர்ட் தீர்ப்பு என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப் படவில்லை. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் கோர்ட் தடை விதித்ததினால் 6 பேர்கள் மீது உள்ள விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட விரோதமான அந்த நடவடிக்கையை மின் வாரியம் தொடருமோயானால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அந்த வசூலில் ஈடுபடுவார்கள் என்பதை நாங்கள் கடிதம் மூலம் தெரிவித்துள்ளது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் தொழிலாளர் துறை ஆணையர் இந்த ஒழுங்கு நடவடிக்கையைக் கைவிட வேண்டுமென்று எழுதியிருப்பதாகவும் அதன் பின்பும் வாரியம் ஒழுங்கு நடவடிக்கையைத் தொடருவதாகவும் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தொழிலாளர் ஆணையர், அந்த நடவடிக்கையைக் கைவிடவேண்டுமென்று சொல்லவில்லை என்று வாரியம் தெரிவிக்கிறது. மேலும் மின்சார வாரியம், விளம்பரத் திற்காகப் பணம் வாங்கக்கூடாது என்று போட்ட உத்தரவின்மீது தொடுக்கப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் மின்சார வாரியத்தினுடைய உத்திரவு நியாயமானது என்று சொல்லி யிருக்கிறது. அதன்மீது மேல் முறையீடு (Writ Appeal) செய்திருக்கிறார்கள். அது நிலுவையில் இருக்கிறபோது எந்த அபிப்பிராயமும் என்னால் சொல்லமுடியாது.

**திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதிப் பிரகாரம் இரண்டு கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அமருங்கள்.

(முற்பகல் 10-10)

**(ஈ) திருக்கோயில் முதுநிலைப் பணியாளர் சங்கத்தினர் உண்ணாவிரதம்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா அவர்கள் ஒரு பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் சார்பாக, திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. என், எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு திருக்கோயில் முதுநிலைப் பணியாளர் சங்கம் அதன் கோரிக்கைகளை வலியுறுத்தி, திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் முன்பும் மற்றும் தமிழகத்தில் பல இடங்களிலும் உண்ணாவிரதம் இருப்பதால்



ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாடு முதுநிலை திருக்கோயில் பணியாளர்கள் சங்கம், ஆலயப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு, அகவிலைப்படி, மற்றும் கருணைத்தொகை வேண்டி 2—2—1987-ம் நாள் முதல் தொடர் உண்ணாவிரதம் போன்ற கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

2. இத்தமிழ்நாடு முதுநிலைத் திருக்கோயில் பணியாளர்கள் சங்கம் அரசினால் அங்கீகாரம் பெறப்பட்டதன்று. மேலும், ஆலயப் பணியாளர்களின் பணி நியமனத்திற்கான கல்வித் தகுதிகள் ஆகியவை அரசு பணியாளரைப் போன்று வரையறுக் கப்பட்டவை அல்ல. மேலும் அவர்களது பணியின் தன்மையும், அரசு பணியாளரைப் போன்றவையல்ல. மேலும், அவர்களது கல்வித் தகுதி, பணியின் தரம் வெகுவாக அரசுப் பணியாளர்களிட மிருந்து மாறுபட்டுள்ளன. ஆனால் ஆலய ஊழியர்கள் வேறு பல சலுகைகள் பெறுகின்றனர். உதாரணமாக, திருவிழாக் காலங்களில் மரியாதை பெறுதல், ஓய்வு பெறும் வயது 60 போன்ற வையாகும். இது தவிர, ஆலயப் பணியாளர்களுக்கு ஆண்டு தோறும் ஒரு மாத ஊதியம் போனசாக வழங்கப்பட்டு வருகிறது.

3. எனினும், இந்த அரசு முதன்முறையாக, இந்த நிலைமையை மாற்றி ஆலய ஊழியர்களுக்கும் சம்பள விகிதங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட வேண்டும் என்று கருதி வெவ்வேறாக இருக்கும் அவர்களது சம்பள விகிதங்களைச் சீராக்க மூவர் குழு ஒன்று அறநிலையத்துறை ஆணையர் மூலம் நியமிக்கப்பட்டது. இவ்வாணையரின் குழு ஆலயப் பணியாளர்களின் ஊதிய விகித மாற்றம், இன்ன பிற பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையைச் சமர்ப்பித்தது. இப்பரிந்துரைகளைப் பரிசீலித்து முடிவெடுக்க ஆணையர் மற்றும் அரசு செயலாளரைத் தலைவராகக் கொண்ட

குழு ஒன்றை அரசு நியமனம் செய்தது. இக்குழு பன்முறை கூடி ஆணையரலுவலக மூவர் குழு அறிக்கையைப் பரிசீலனை செய்து தகுந்த பரிந்துரைகளை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது.

4. துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் நிலையில் நிர்வாக அதிகாரிகள் உள்ள திருக்கோயில் பணியாளர்களின் 125 ஊதிய விகிதங்களை 20 ஆகக் குறைத்து, 1—4—1986 முதல் அமுல் படுத்தி அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது. இவ்வாணைகளினால் சுமார் 2,640 ஆலயப் பணியாளர்கள் பயனடைகின்றனர். இதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ. 20 லட்சம் ஆகிறது.

5. தற்போது சீரமைக்கப்பட்டுள்ள திருந்திய சம்பள விகிதங்கள் முதல் நிலை முதல் நான்காம் நிலை வரையிலுள்ள திருக்கோயில் பணியாளர்களுக்குப் பொருந்தாது. ஆகையால், இப்பணியாளர்கள் பயனடையும் வகையிலும், அவர்களது அவாவினை நிவர்த்தி செய்யும் வகையிலும், கருணைப் பணிக்கொடையாக ரூ. 200 (ரூபாய் இருநூறு மட்டும்) ஒரே தவணையாக அவர்களுக்கு வழங்கலாம் என்று இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையருக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

6. மேற்படி திருந்திய ஊதிய உயர்வு வடபழனி அருள்மிகு வடபழனியாண்டவர் ஆலயம், திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி ஸ்வாமி ஆலயம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் ஆலயம் மற்றும் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

7. இவை அல்லாமல், திருக்கோயில் பணியாளர்களுக்கு 1—3—1986 மற்றும் 1—5—1986 தேதிகளில் அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட அகவிலைப்படி தவணைகளை முறையே 1—9—1986 மற்றும் 1—11—1986 தேதிகளிலும், 1—7—1986 முதல் 4 விழுக்காடாக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அகவிலைப்படி தவணையினை, 1—1—1987 லிருந்தும் முதுநிலை ஆலயப்பணியாளர்களுக்கு வழங்கப்பெறலாம் என்றும் அரசு அறிவித்துள்ளது.





8. மேலும் ஊதியத்தை நிர்ணயிக்கும்போது குறைந்த பட்ச பயன் (minimum fixation benefit) நிர்ணயிப்பது பற்றியும் அரசு ஆலோசித்து வருகிறது.

9. இதனைத் தொடர்ந்து தற்போது முதுநிலை திருக்கோயில் பணியாளர்கள் போராட்டத்தை நிறுத்தி சுமுகமான முறையில் பணியாற்றுகின்றனர் என்ற விபரமும் தெரிவிக்கப்படுகிறது.

**(உ) ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மாணவர்களுக்கான முன் தேர்வு பயிற்சி மையக் கட்டடத்தில் பழுது.**

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, "நந்தனம், சென்னை-35-ல் இயங்கி வரும் ஐ.எப்.எஸ்., ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். பதவிகளுக்காக முன்தேர்வு பயிற்சி மையத்தில், வகுப்பு அறைகளும் விடுதியும், நிர்வாக அலுவலகமும் உள்ள கட்டடம் எந்த நேரமும் இடிந்து விழும் ஆபத்தான நிலையிருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்கள் ஐ.ஏ.எஸ். முதலிய தேர்வுகளை எழுதி வெற்றி பெற, தகுந்த பயிற்சி அளிப்பதற்காக, மாநில அரசு நடத்தி வரும், சென்னை முன் தேர்வு பயிற்சி மையம் தற்போது நந்தனத்தில், ஒரு தனியார் கட்டிடத்தில் உள்ளது. இம்மையத்தில் 60 மாணவர்கள் பயிற்சி பெறலாம் தற்பொழுது 46 மாணவர்களும் 6 மாணவிகளும் பயிற்சி பெற்று வருகின்றனர். மையம் தற்பொழுது உள்ள கட்டிடம் மிகவும் பாழடைந்த நிலையில் உள்ளதால், உயிருக்கும், சொத்துக்கும் ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. கட்டிடச் சொந்தக்காரர் பழுது பார்க்கும் பணிகளைச் செய்ய முன்வரவில்லை. எனவே, அந்த மையத்தைத் தனியார் கட்டிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு மாற்றுவது, தவிர்க்க முடியாத ஒன்றாகும். எனினும், மாற்று இடவசதி பெற இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகள் பயன

ளிக்கவில்லை. மையத்திற்கு இடம் கோரி ஆதிதிராவிடர் நல இயக்குநர் செய்தித் தாள்களில் பிரசுரம் செய்தார். எனினும் அதுவும் பயன் அளிக்கவில்லை.

2. இப்பயிற்சி மையத்தினை உடனடியாக வேறு கட்டிடத்திற்கு மாற்ற, தற்போது அரசு தீவிர முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. விரைவில் மையம் வேறு இடத்திற்கு மாற்றப்படும்.

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே. நம்முடைய அமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்ற விவா அறிக்கையில் அந்தக் கட்டிடம் நிச்சயமாகப் பழுதுபட்டு ஆபத்தான நிலையில் இருப்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நான் அந்த இடத்தைப் போய்ப் பார்த்திருக்கிறேன். தேசத்தில் மிகப் பெரிய பதவிகளான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பதவிகளுக்கு நம்முடைய இளைஞர்களைத் தயார் செய்கின்ற அந்த மையத்தின் கட்டிடம் மிகவும் மோசமாக இருப்பது மட்டும் அல்லாமல். துப்பறியும் நாவலில் வரும் பேய் மாளிகை போல் இருக்கிறது. எந்த இடத்தில் பார்த்தாலும் கட்டிடம் இடிந்து விழும் நிலையில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள், அந்த வீட்டு உரிமையாளர் ரிப்பேர் செய்ய மறுக்கிறார் என்று சொல்கிறார். ரிப்பேர் செய்ய முடியாது. ஒரு பகுதி இடிந்து, எந்த நேரம் வேண்டுமானாலும் எஞ்சியவை விழும் அபாய நிலை இருக்கிறது. நம்முடைய ஆதிதிராவிடர் நலத் துறை இயக்குநர் விளம்பரம் செய்திருக்கிறார்கள் எனினும் அதற்குப் பயன் இல்லை என்று சொல்கிறார்கள். ஒருவேளை, ஆதிதிராவிடர் நலத்துறை விளம்பரம் செய்ததால் அதற்குப் பயன் இல்லையோ என்ற அச்சம் எற்படுகிறது. ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி, முறையாக ஒரு கட்டிடத்தைப் பெற்று, நல்ல atmosphere இருக்கக்கூடிய கட்டிடத்திற்கு அந்தப் பயிற்சி நிலையத்தை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடம் உண்மையிலே பாதிக்கப்பட்டிருக்கிறது. கட்டிட உரிமையாளரிடம் சொல்லியும் அவர் ரிப்பேர் செய்யவில்லை. ஆனால் ஒவ்வொரு இடத்திலும் அதிகாரிகள் இடம் தேடுகின்ற நோத்திலே கட்டிடம் கிடைக்க



வில்லை. இப்பொழுது மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சருக்கு ஒரு கோப்பு அனுப்பப்பட்டு இருக்கிறது. இன்னும் ஒரு வாரத்திற்குள் கட்டாயமாக அண்ணா நகர் பகுதியில் இருக்கிற அரசுக் கட்டிடத்தில் அந்த மையம் மாற்றப்படும் என்பதை இங்கே சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன்.

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்குள் மாற்றப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஒருவேளை கிடைக்கவில்லையென்றால், நம்முடைய எம்.சி. ராஜா ஹாஸ்டலிலே summer vocation விடும்போது, அங்காவது இதை மாற்றிவிட்டு. சைதாப்பேட்டையில் பெருவழித் துறை மற்றும் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் அதிகமான அளவில் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அந்த இடத்தைப் பெற்றாவது நிரந்தரமான கட்டிடம் கட்டுவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். இன்றைக்கிருக்கிற ஹாஸ்டலைப் பார்த்தால் ஹாஸ்டல் மாதிரி இல்லை. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வு எழுதக் கூடியவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்படவில்லை. லைப்ரரி கிடையாது. அப்படிப்பட்ட வசதிகளையும் அமைக்கக்கூடிய அளவு புதிய கட்டிடத்தைக் கட்ட அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக நிரந்தரமான ஒரு கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்து கொண்டிருக்கிறது. அதன்மீதும் நடவடிக்கை எடுத்து வருகிறது. குறிப்பிட்ட ஒரு வாரத்திற்குள் நான் குறிப்பிட்ட இடம் கிடைக்காவிட்டாலும், தனியாரிடம் கேட்டிருக்கிறோம். அதைப்போலவே அரசு வீட்டு வசதித் துறையிடம் கேட்டிருக்கிறோம். கட்டாயமாக அந்த இடம் மாற்றப்படும், அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படும்.

[1987 மார்ச் 31

## 2. அறிக்கை அளித்தல்.

### பொது நிறுவனங்கள் குழு.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்களின் கீழ்க்காணும் அறிக்கைகளை அக்குழுவின் தலைவரின் சார்பாக நான் இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982—83 மற்றும் 1983—84 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகம்) அறிக்கைகளில் வேளாண்மைத் துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் நாற்பத்தொன்பதாவது அறிக்கை.

(ஆ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983—84 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகம்) அறிக்கைகளில் கைத்தறி துணிகள் கதர்த்துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பதாவது அறிக்கை.

## 3. வரவு-செலவுத் திட்டம், 1987-88, பொதுவிவாதம்—(தொடர்ச்சி).

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் நிதியமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கை பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஏற்கனவே பல உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதையொட்டி எனது கருத்துக்களையும் தெரிவிப்பதற்கு முன்பு அண்மையில் அரியலூர் பக்கத்திலே நடந்த இரயில்வே விபத்தில், குண்டு வெடிப்பு காரணமாக ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த தோழர்களுக்கும், தோழியர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் என் சார்பாகவும் ஆழ்ந்த அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவர்களை இழந்து வாடுகின்ற குடும்பத்திற்கு எனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





தவறாக அவை கருதாது என்ற காரணத்திற்காக நான் தெரிவிக்க விரும்புகிறேன், உணர்வோடும், உரிமையோடும். இத்தகைய பெரிய விபத்து நடந்த இடத்தில் நமது மாநில முதல்வரவர்கள் சென்றிருக்க வேண்டுமென்பது என் ஆசை. அதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் உள்ளம் தேறுதல் பெறுவதற்கும், அதன் மூலம் அவர்களது கவலை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைவதற்கும்— மற்றைய அமைச்சர்களை நான் குறை கூறவில்லை, அவர்களைவிட முதல்வரவர்கள் சென்றிருப்பார்களேயானால் அது பெருமளவிற்கு வரவேற்கப்பட்டிருக்கும் என்ற எனது கருத்தை இந்த நேரத்தில் இந்த அவையில் நான் தெளிவோடு பகிர்ந்து கொள்கிறேன்.

இரண்டாவது, அண்மையிலே நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற கேரள அரசிற்கும், அதேபோல் மாபெரும் வெற்றி பெற்ற மேற்கு வங்க அரசிற்கும், அதேபோல் பரூக் அப்துல்லாவின் தலைமையிலே இயங்குகின்ற அரசிற்கும் என் சார்பாகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நமது நாவலர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கின்ற அறிக்கையை நான் விரிவாகப் படித்துப் பார்த்தேன். சிலயிடங்களில் அவரது இயலாமை வெளிப்படுத்தப்பட்டிருப்பது பரிதாபத்திற்குரியது. ஆனால் அதற்கு உற்சாகம் ஊட்டுகின்ற வகையில் நாம் அனைவரும் பணியாற்றுவது இன்றியமையாதது என்றுதான் கருதுகிறேன்.

உதாரணமாக நிதிநிலை அறிக்கையின் 3-வது பத்தியில் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய நமது நிதியமைச்சரவர்கள் "இந்தியா முழுவதையும் பாதிக்கக்கூடிய வகையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை பொருளாதாரம், அதன் காரணமாக ஏற்படும் பணவீக்கம், கட்டுக்கடங்காமல் அகில இந்திய அளவில் ஏறிக்கொண்டேவரும் விலைவாசி ஏற்றம், கடன் பளு, உயர்ந்து கொண்டே வரும் வட்டி விகித அளவு முதலியவை தமிழக அரசின் பொருளாதாரக் கட்டுக்கோப்பையும், தமிழக மக்களின் பொருளாதார வாழ்வையும் பெரிதும் பாதிக்கவே செய்கின்றன. என்றாலும், திட்டங்களை இலக்குக்குமேல் நிறைவேற்றுவதிலும், வளர்ச்சித் திட்டங்களை முடித்து வைப்பதிலும்,

[திரு. கி. மனோகரன்] [1987 மார்ச் 31

நலிந்தோர்க்கான நல்வாழ்வுத் திட்டங்களைப் பலவகைகளிலும் நிறைவேற்றுவதிலும். ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே தொல்லையுறுவோர்க்கு உதவித் தொகை வழங்கும் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் தமிழக அரசு பெரும் பொறுப்பு ஏற்று, கடமைகளை முறைப்படி ஆற்றி வருகிறது." என்று குறிப்பிட்டார்கள்.

(முற்பகல் 10-20)

மொத்த இந்தியத் துணைக் கண்டத்தின் பொருளாதாரத்தைப் பற்றிய படப்பிடிப்பைச் சுருக்கமாக நமது நிதியமைச்சரவர்கள் இங்கே விளக்கிப் பேசியிருக்கிறார்கள். இங்கே அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற பட்ஜெட்டின் பற்றாக்குறை ஏறத்தாழ 131 கோடி ரூபாய்க்குப் பக்கத்திலே இருக்கிறது. அதற்கு முன்னாலே மைய அரசு சமர்ப்பித்த பட்ஜெட்டில், அதன் பற்றாக்குறை ஏறத்தாழ 6,000 கோடி ரூபாய் முதல் 7,000 கோடி ரூபாய் வரை. மத்திய அரசுக்குக் கிடைத்த வருவாய் 56,932 கோடி ரூபாய். உங்களுக்குத் தெரியும். அதிலே இராணுவத்திற்கு கணக்கிட்டுப் பார்க்கும்போது ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ஏறத்தாழ 14,000 கோடி ரூபாய். இராணுவத்திற்காக இவ்வளவு செலவு செய்ய வேண்டுமா என்று கேள்வி கேட்கக்கூடிய நாட்டுப் பற்றற்றவன் அல்ல நான். ஆனால் இந்தத் தொகை 14,000 கோடி ரூபாய் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவும், நிர்வாகச் செலவு என்ற வகையில் மத்திய அரசு செலவழித்துக் கொண்டிருக்கிற தொகை 15,000 கோடி ரூபாய் என்பதும், I.M.F. (International Monetary Fund) என்கின்ற நிறுவனத்திடமிருந்து பெற்ற பணத்திற்கு வட்டியாகச் செலுத்த வேண்டிய தொகை 1986-ல் மட்டும் 780 கோடி ரூபாய் என்பதும் உலக வங்கி நிறுவனத்திடமிருந்து இந்திரா அம்மையார் உயிரோடு இருந்த காலத்தில் மத்திய அரசுக்கு அனுமதிக்கப்பட்ட தொகை 5,000 கோடி ரூபாய் என்பதும், அதிலே 4,000 கோடி ரூபாய் மட்டும் பெற்றுவிட்டு 1,000 கோடி ரூபாயை அவர் வாங்காமல் விட்டுவிட்டார் என்பதும் நமக்குத் தெரியும், நினைவுபடுத்துகிறேன்.



1987 மார்ச் 31] [திரு. கி. மனோகரன்]

Asian Development Bank மற்றும் அகில இந்திய நிதி நிறுவனத்திடமிருந்தும் நீண்டகாலத் தவணையாகவும் குறுகிய காலத் தவணையாகவும் மத்திய அரசு ஏராளமாகப் பணத்தைப் பெற்றிருக்கிறது.

அதோடு இன்னொன்றையும் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக deficit financing என்ற திட்டத்தில் நோட்டுகள் அச்சடிக்கின்ற வகையில் ஏறத்தாழ 14,000 கோடி ரூபாய் பெற்றிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக ஐந்தாண்டுகளுக்கு என்று ஒதுக்கப்பட்ட தொகைதான் இந்த 14,000 கோடி ரூபாய். ஆனால் இரண்டாண்டுகளுக்குள்ளாக இந்த 14,000 கோடி ரூபாயும் செலவிடப்படக் கூடிய ஆபத்து இருக்கிற deficit financing என்ற பயங்கரமான பாதைக்கு இந்தியத் துணைக் கண்ட அரசை திருப்பிவிட்டுவிடக் கூடுமோ என்ற அச்சம் நிச்சயமாக எனக்கு ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையின் காரணமாக, இப்படிக் கோடிக்கணக்கில் கடனாகப் பெற்றிருக்கிற மத்திய அரசு, 1987-88 ஆம் ஆண்டுக்கு, தொடர்ந்து வாங்கிய கடனுக்கான வட்டிச் செலவு என்ற முறையில் பல கோடி ரூபாய் செலவழிக்க வேண்டிய கட்டாயத்திலும் நெருக்கடியிலும் இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் இந்த அவையில் அறிவிக்க விரும்புகிறேன்.

வாங்கிய தொகைகள் இப்படிப் பெருகிக்கொண்டே இருக்கின்றன. அவை கோடிக்கணக்கான பணம் என்பதை மறந்துவிடாதீர்கள். விஞ்ஞான மேதைகள் மட்டுமல்ல; அரசியல் விஞ்ஞானம் பேசும் மேதைகள் மட்டும்ல்ல; பொருளாதார மேதைகளும் சொல்லுகின்ற கருத்தைச் சொல்கிறேன். ஒரு பயங்கரமான பணவீக்கத்திற்கு இது வழி செய்யும் என்ற கருத்தை அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். அதன் மூலம் ஏற்படுகின்ற பணவீக்கம் மிகப் பயங்கரமானது. பணவீக்கம் என்பதை மிகச் சுலபமாக விளக்கி

[திரு. கி. மனோகரன்] [1987 மார்ச் 31

விட முடியும். அதற்கு ஆங்கிலத்தில் சொல்வதாக இருந்தால் Too much money cheses too few goods— ஏராளமான பணம், கொஞ்சமான உற்பத்தி என்று பண்டப் பொருள்களைத் தூரத்துகிற காரணத்தால் பண்டப்பொருள்கள் விலை கட்டுக்கடங்காமல் உயர வழி இருக்கிறது.

அதற்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால் ஷியாங்கே சேக் என்பவன் சீனாவை ஆண்டுக்கொண்டிருந்த நேரத்தில் பணத்தின் மதிப்பு வெறும் காகிதக் குப்பையாக மாறி, கடைவீதிக்குச் சென்று காலணி தா அல்லது சொக்காய் தா என்று கேட்டால் தந்திருக்கிற தொகையைச் சொல்லி, அந்தத் தொகைக்காக கொடுத்த ரசீதை வாங்குகிற முறை முற்றிலும் மாறி, சாக்கு மூட்டைகளில் கரன்சிகளை அடுக்கி, அந்த மூட்டைகளைச் சுமந்துகொண்டு போய், இவ்வளவு பணம் என்று கொடுக்க, பணத்தைப்பற்றி கவலையில்லை, கொடுத்துவிட்டு போ என்று சொல்ல, அந்த மூட்டைகளைப் போட்டுவிட்டு சாமான்களை வாங்கிச் செல்கிற அளவுக்குப் பணத்தின் தரம், பணத்தின் உயர்வு, பணத்தின் மதிப்பு, பணத்தின் மரியாதை வெகுவாகச் சரிந்துவிட்டது என்பதை வரலாறு படித்த நண்பர்கள் மறந்திருக்க முடியாது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

இந்த நிலை இந்த இந்தியத் துணைக்கண்டத்திற்கும் ஏற்படும் என்று நான் வாதாடவில்லை. அது வரக்கூடாது என்பதில் நாம் ஒவ்வொருவரும் அக்கறை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவகாசங்கள் இருக்கக்கூடும். எங்களது சாதனைகள் இவ்வளவு என்று பேசுகிற வாய்ப்புகள் ஒவ்வொரு அரசுக்கும் இருக்கக்கூடும். நான் மறுக்கவில்லை. என்னைப் பொறுத்தவரையில் நான் Orthodox student of Economics அல்ல என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். Deficit financing என்பதோ அல்லது deficit budget என்பதோ பாவ காரியம் அல்ல, என்ற கருத்து படைத்தவன் நான். உங்களுக்குச் சொல்வேன், House of commons -இல் மூன்று முறை தொடர்ச்சியாக deficit பட்ஜெட் சமர்ப்பித்த பெருமை வின்ஸ்டென் சர்ச்சிலுக்கு உண்டு. அப்படிச் சமர்ப்பிப்பது பாவம் அல்ல. ஆனால் நோட்டுக்களை அடிக்கிற நேரத்திலும் நிதிநிலையைப் பற்றாக்



1987 மார்ச் 31] [திரு. கி. மனோகரன்]

குறையாக வைக்கின்ற நேரத்திலும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவேண்டிய சில உண்மைகளைக் கணக்கில் எடுக்காமல் ஏதாவது அறிக்கைகளை விட்டு அதன்மூலம் மக்கள் மனதில் கிளர்ச்சி ஏற்படுத்துவதற்காகச் செய்யப்படுகிற காரியங்கள் தவிர்க்கப்படவேண்டிய ஒன்று என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இன்னொன்றைக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன். 1950 ஆம் ஆண்டு ஏற்றுமதியின் மூலம் இந்தியத் துணைக்கண்டம் பெற்ற சதவீதம் 2.2. இது 1950-ல். 1960-ல் எந்த அளவுக்குக் குறைந்து போயிற்று என்றால் 1·05 என்ற அளவுக்குக் குறைந்து போயிற்று. 1981-ல் அதைவிடக் குறைந்து 0.49 என்ற அளவுக்கு வந்தது.

ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் அதாவது உருவாக்கிய பொருட்களை அனுப்புவதில் 1950-ல் இந்தியாவின் ரேங்க் அதாவது இருந்த இடம் 19. 1960-ல் இந்தியாவின் ரேங்க் 21. 1971-ல் இந்தியாவின் ரேங்க் அதாவது இடம் 31. 1979-ல் இந்தியா 46-வது இடத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது என்ற சோகமயமான நிலையை நமது நிதியமைச்சர் அவர்களுக்கு நான் சமர்ப்பிக்க விரும்புகிறேன். இது பரிசீலிக்கப்பட வேண்டும் என்ற காரணத்திற்காகவும் இதன் மூலம் ஒரு நாட்டின் பொருளாதாரம் அழிந்து போகுமோ, முடமாகிவிடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டிருக்கிற காரணத்திற்காகவும்தான் நான் இதைச் சொல்கிறேனே தவிர மற்றல்ல.

வரியே போடக்கூடாது என்று நான் வாதாடவில்லை. தாராளமாக வரி போடலாம். தாளக் கூடியவர்களுக்கு வரி போட்டுவிட்டு, தாங்கமுடியாமல் இருக்கிற ஏழைகளின் மேல் முற்றிலுமாக நீங்கள் வரி போடக்கூடாது என்று நான் வாதாடவில்லை. அவர்களைக் காப்பாற்றத்தக்க வகையில் நீங்கள் போடுகிற வரிச்சுமை அமையவேண்டும். அந்த அளவுக்கு வரி குறைய வேண்டும் என்றுதான் நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அதனால் பாதிக்கப்படுகிற மக்கள், ஏழை மக்கள், நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் ஆகியோர்தான். நம்முடைய நிதியமைச்சர் கொண்டுவந்திருக்கிற வரிகளில் ஒன்று எந்த அளவுக்கு ஏழை மக்களைக் காப்பாற்றும், நடுத்தர மக்களைக் காப்பாற்றும் என்பதைப்பற்றி அவர்கள் பதிலில் சொல்வார் என்று நான் எதிர்பார்க்கிறேன்

[திரு. இ. மனோகரன்] [1987 மார்ச் 31

செங்கல்லுக்கு வரி போட்டிருக்கிறீர்கள், நியாயம்தானா? மரத்திற்கு வரி போட்டிருக்கிறீர்கள், முறைதானா? வெல்டிங் மாத்திற்கு வரி போட்டிருக்கிறீர்கள், முறைதானா? வெல்டிங் கம்பிகள் போன்றவற்றின் மேல் போடப்பட்டிருக்கும் வரிவிகிதம் பெருமளவுக்கு ஏறி இருக்கிறது. தேவைதானா? இவைபற்றி யெல்லாம் மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் தனது உரை யிலே எனக்குப் பதில் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன் இந்தச் சந்தர்ப்பத்தில்.

நான் நிதியமைச்சராக இருந்த நேரத்தில்—இந்த அவை தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நான் சொல் கிறேன்—தேங்காய்க்கு வரி போட்டேன். என்னோடு பக்கத்திலே இருந்த மாண்புமிகு அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்கும் இது தெரியும். அப்போது தேங்காய் வியா பாரிகள் சங்கத்தின் சார்பாக அனைவரும் முதலமைச்சரிடம் சென்று தயவுசெய்து இந்த வரியை ரத்து செய்யுங்கள் என்று கேட்டார்கள். என்னையும் அணுகிக் கேட்டார்கள். நான் அவர்களுக்குச் சொன்னேன், இதன் மூலம் கிடைக்கிற மொத்த வருமானம் 2 கோடி ஆயிற்றே, இதைக்கூட பெற முடியாதா என்று. அப்போது திறமையாக அவர்கள் எனக்குப் பதில் சொன்னார்கள். After all ரூ. 2 கோடிதானே, இதை நீங்கள் இழக்கக்கூடாதா என்று கேட்டார்கள். நான் முதல்வரிடம் சென்றேன்—இன்னொன்றும் சொன்னார்கள். அப்போது எதிர்க் கட்சித் தலைவராக இருந்தவர் கலைஞர் அவர்கள். அவர்களும் கேட்டார்கள் வரியை ரத்து செய்யுங்கள் என்று. காங்கிரஸ் கட்சித்தலைவராக இருந்தவரும் ரத்து செய்யக் கேட்டார்கள். கடைசி உறுப்பினராக இருந்த திரு. லத்தீப் அவர்களும் இந்த மன்றத்திலே, ரத்து செய்யுங்கள் தேங்காய்க்கான வரியை என்று கேட்டார்கள். நான் யோசித்துச் சொல்கிறேன் என்றேன். அப்போது மேலவை இருந்தது. அந்த மேலவையிலும் கேட் டார்கள். எனக்கு நன்றாய் நினைவு இருக்கிறது. இராம கிருஷ்ண தேவர் பேசும்போது கூடச் சொன்னார். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது தேங்காய்க்கு வரி போடப்பட்டது. அப்போது நமது முதலமைச்சர் அவர்கள் அன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராக இருந்தார். அவரைச் சந்தித்து தயவுசெய்து இந்த வரியை



1987 மார்ச் 31] [திரு. இ. மனோகரன்]

ரத்து செய்யுங்கள் என்று கேட்டார்கள்—நல்ல நேரத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள்—ரத்து செய் யுங்கள் என்று அன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராக இருந்த நமது முதல்வர் அவர்களைக் கேட்டார்கள். முதல்வர் அவர்கள் என்னைக் கேட்டார், என்ன செய்யலாம் என்று. அவர்கள் இப்படிச் சொல்லுகிறார் களே என்றேன். எப்படி இதற்குச் செய்வது என்று கேட்டேன். அந்தச் சங்கத்தின் சார்பாக அவர்கள் உங்களை அணுகியபோது நீங்கள் அவர்களுக்கு உறுதி அளித்து, கலைஞரை சந்தித்து அந்த வரியை ரத்து செய்ய ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி அதை ரத்து செய்து காட்டினீர்கள். ஆக அத்தகைய அவர்தான் இன்றைய முதலமைச்சராக இருக் கிறார்கள். ரத்து செய்யுங்கள் என்று எல்லோரும் கேட்டுக் கொண்ட நேரத்தில் என்னிடம் சொன்னார். வரியை ரத்து செய்யுங்கள் பரவாயில்லை என்றார். அப்படி இதய பூர்வமாக உதார குணத்தோடு, நல்ல எண்ணத்தோடு போடப்பட்டிருக்கிற வரிகள் நியாயம் அற்றது என்று தெரியுமானால் அந்த வரியை ரத்து செய்வதில் தவறு இல்லை என்று சுட்டிக் காட்டிவிட்டு நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், செங்கல் மீது போடப்பட்டிருக்கிற வரி, மரத்தின் மீது போடப்பட்டிருக் கிற வரி, வெல்டிங் கம்பிகளுக்கு போடப்பட்டிருக்கிற வரிகளை நீங்கள் ரத்து செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன். நிச்சயமாக முதலமைச்சர் அதற்கு இசைவு தருவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

இன்னொன்று, வரி விதிப்பு முறைகளைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள். நேரம் எனக்குக் குறைச்சல். ஒரு மணி நேரம் தான் எனக்குத் தரப்பட்டிருப்பதாக நான் நினைக்கிறேன். ஆக அதற்குள்ளாக என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். நான் நிதியமைச்சராக இருந்த நேரத்தில் இன்றைய முதலமைச்சர்தான் எனக்குச் சொன்னார். Rationalisation of tax -க்கு என்று ஒரு குழு அமைக்க அந்தக் குழுவிற்கு திரு. தைவார் அவர்கள் தலைவராக இருக் கட்டும் என்று அவருடைய தலைமையிலே போட்ட குழு—

[திரு. கி. மனோகரன்] [1987 மார்ச் 31

என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால்—மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிற ஒன்று பலமுனை வரிகளை ரத்து செய்ய வேண்டும். ஒரு முனை வரிகள் சீராக அமல் நடத்தப்பட வேண்டும் என்பது. நான் அந்தக் கருத்தை இங்கே இருக்கிற நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அப்படி பலமுனை வரிகளை நீங்கள் பட்ஜெட்டிலே போட்டிருக்கிறீர்கள். ஆகவே அது உங்கள் கவனத்தில் இருக்கட்டும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல் இன்னொன்றையும் செய்திருக்கிறீர்கள். தர்ம காரியம் அல்ல என்பதற்காகச் சொல்கிறேன். ஓட்டலின் மீது போடப்பட்டிருக்கிற வரி எந்த அளவுக்கு ஏழை நடுத்தர மக்களை பாதிக்கும் என்பதை மறந்து விடக் கூடாது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஓட்டலுக்குச் சென்று தோசை கொண்டு வா என்றால், மேசையிலே இருந்த தோசை இன்றைக்குத் தோளில் ஏறிக்கொண்டது. இட்டிலி இடுப்பு எலும்பை முறித்துக் கொண்டிருக்கிறது. வடை தனது வலிமையைக் காட்டிக் கொண்டிருக்கிறது. காப்பியும் தேநீரும் எந்த அளவுக்கு விலை உயர்ந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது குறிப்பிட்டவர்களுக்கு என்றால் பரவாயில்லை. ஏழை எளிய மக்களுக்காக நாங்கள் இருக்கிறோம், அவர்களைக் காப்பாற்றுவதற்காகவே இருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிற அரசு இந்தக் காரியத்தில் ஈடுபடக் கூடாது என்பதற்காகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, சரக்கு வாகனங்கள் மீது நீங்கள் வரியைப் போட்டிருக்கிறீர்கள். தயவுசெய்து நமது நாவலரைப் பார்த்துக் கேட்டுக் கொள்கிறேன். இது உந்து வண்டிகளை அல்லது பளு வான சுமைகளை ஏற்றி வருகிற அந்த வண்டி, அதன் உடைமையாளர்களுக்கு அல்லது உரிமையாளர்களுக்கு வேண்டுமானால் உதவியாக இருக்கலாம். வேண்டுமானால் அவர்கள் பாதிக்காமல் இருக்கக்கூடும். ஆனால் மறந்து விடாதீர்கள், அந்த பார வண்டிகளை ஏற்றி வருகிறார்களே அவர்களை அது பெரிதும் பாதிக்கும். அந்தச் சுமை ஏழை மக்களின் தலையில், அந்த பளு எளிய மக்களின் தலையில்தான் வந்து விழுமே தவிர பண



1987 மார்ச் 31] [திரு. கி. மனோகரன்]

காரர்களின் தலையில் விழ நியாயம் இல்லை. அவர்கள் தலையில் வேண்டுமானால் செண்டுகள் விழக்கூடும். ஆனால் ஏழை எளியவர்களின் தலையில் குண்டுகள் விழக் கூடாது என்று நான் இந்த நேரத்திலே மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு நாவலர் அவர்கள் நான்கு நாட்களுக்கு முன்பு பேசும்போது எனது அருமை நண்பர் சுப்பராயன் அவர்களுக்கு ஒரு கேள்வியை விடுத்தார். வரியே இல்லாத அரசு இயங்க முடியுமா என்று கேட்டார். எங்காவது வரியே போடாத அரசு இருக்கிறதா, அப்படி இருக்கிறதென்றால் அந்த நாட்டின் மூக வரியை எனக்குத் தருவீர்களா என்று கேட்டார். நான் மாண்புமிகு நாவலர் அவர்களின் கருத்தோடு ஒன்றுகிறேன். முதலாளித்துவ முகாமின் முன்னோடிகளும், நிலத் திமிங்கலங்களும் சேர்ந்து உருவாக்கிய வளையத்தின் உள்ளேதான். இந்த அரசு இன்றைக்கு வட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது. இந்த அரசு என்று நான் சொல்லவில்லை. பொதுவாக இருக்கிற மாநில அரசுகளுக்கு 'பொலிட்டிக்கல் வில்" என்று சொல்லப்படுகிற அந்தத் துணிச்சல் இருக்குமானால், வளையங்கள் உடைக்கப்படுமானால், நிச்சயமாக நான் தெரிவிக்க விரும்புகிறேன். வரியே போடாத நாட்டை உருவாக்க முடியுமென்பதில் எனக்கு நிச்சயமான நம்பிக்கை உண்டு. அதற்கு அடிப்படை தேவை The basic structure must be changed.. அதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறதா என்று நான் கேட்டு தெரிந்து கொள்ள விரும்புகிற அதேநேரத்தில் நாவலர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். யோசனைகளை நான் முன்னாலேயே சொன்னேன்.

The Opposition has its say and the ruling Party has its way என்று குறிப்பிட்டார்கள். கருத்துக்களைச் சொல்ல முடியுமே தவிர, உங்கள் மீது சுமத்துவதற்கும் நான் ஓரளவிற்கு முயற்சிக்க முடியுமே தவிர, மற்றபடி உங்களைக் கட்டுப்படுத்துவதற்கோ, செய்யக்கூடாது என்று தண்டிப்பதற்கோ அந்த உரிமை எனக்கு இல்லை. அந்த உரிமையைப் பெற்றவர்கள் இந்த நாட்டின் ஜனநாயகத்தின் இறுதி எஜமானர்களாக இருக்கிற மக்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சுவையான ஒன்றை நாவலர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். சொல்ல வேண்டியவைகளைத் தான் நான் சொல்ல முடியுமே தவிர மற்றல்ல. 'இலண்டன் பினான்ஷியல் டைம்ஸ்'-ல் சின்ன குறிப்பு ஒன்று வெளியாகி இருக்கிறது. அதை அவர்களுடைய கவனத்திற்கு வைத்தால் அது பயனுள்ளதாக இருக்குமென்று கருதுகிறேன். அந்தப் குறிப்பு இது தான். Walking through the jungle, a lion spied a mouse, .............. காட்டிலுள்ளே நுழைந்து கொண்டிருக்கிற போது ராஜகம்பீரமாக ஒரு சிங்கம் ஒரு சுண்டெலியைப் பார்த்தது.

..........sitting sadly by a bush ........
பரிதாபத்தோடு அது அந்தப் புதரில் பதுங்கிக் கொண்டிருக்கிறது.

.......... and he asked the mouse what was wrong ............

இந்தச் சிங்கம் அந்தச் சுண்டெலியைப் பார்த்து ஏன் சோகமயமாய் இப்படி உட்கார்ந்து கொண்டிருக்கிறாய் என்று கேட்டது. அதற்கு சுண்டெலி பதில் சொல்லிற்று. "I am so small", the mouse replied ........ நான் மிகவும் சின்ன உருவம் படைத்தவனாக இருக்கிறேன் என்று சொல்லிவிட்டு, .... "The other animals look down upon me'

மற்ற மிருகங்கள் எல்லாம் என்னை கேவலமாகப் பார்க்கின்றன என்று சொல்லியது. அதற்கு சிங்கம் பதில் சொல்லிற்று. "I can help you' நான் உனக்கு உதவத் தயாராக இருக்கிறேன். அதற்கு ஒன்றை நீ செய்யவேண்டும்.

"Just stop being a mouse and be a lion instead' நீ சுண்டெலியாக இருப்பதை நிறுத்திவிட்டு சிங்கமாக மாறு. The mouse was very grateful. சுண்டெலி மிகவும் மகிழ்ச்சியுற்றது. "I shall certainly do ........" சுண்டெலி சொன்னது, நிச்சயமாக நான் அதைச் செய்கிறேன்." ...... what you suggest நீ என்ன சொல்கிறாயோ, நீ என்ன அபிப்பிராயத்தை வைக்கிறாயோ, அதை நிச்சயமாக நான் செய்கிறேன் என்று சொல்லிவிட்டு, "But, how to stop being a mouse" ........ கேட்டதற்கு சிங்கம் சொன்னது.





"That?" said the lion as he walked imperiously, ........ சென்ற ராஜகம்பீர நடையோடு அந்தச் சிங்கம் சொல்லிவிட்டு சென்றதாம், "It is for you to decide." அதைத் தீர்மானிக்க வேண்டியது நீயே தவிர நானல்ல. யோசனை சொல்ல வேண்டிய பொறுப்பு என்னுடையது. அதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு உன்னுடையது. வருகிறேன், வணக்கம், என்று சொல்லிவிட்டுச் சென்றதாக 'பினான்ஷியல் டைம்ஸ்'-ல் நான் படித்தேன். அதை மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு நாவலர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, யோசனை நடைமுறைக்கும் ஏற்றதாக இருக்கவேண்டும் என்பது தான் இதிலிருந்து தெரிகிறது.

**திரு. கி. மனோகரன்:** தயவுசெய்து அமைதியாக இருங்கள். நான் பேசி முடித்தபிறகு நீங்கள் என்ன தகராறுகளை வேண்டுமானாலும் செய்யுங்கள். நான் அமைதியாக சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். இதை நான் தெரிவிப்பதற்கு என்ன காரணமென்றால் தயவுசெய்து நிதியமைச்சர் அவர்கள் உணர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நடைமுறைக்கு சாத்தியமாக இருக்கவேண்டுமென்று நமது மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் கேட்டார்கள். மூன்று ஆண்டுகளுக்குள்ளாக 30 லட்சம் வீடுகள் என்றால் ஒரு ஆண்டிற்கு 10 லட்சம் வீடுகள். நான் நமது அமைச்சர் திருநாவுக்கரசு அவர்களைப் பார்த்து கேட்டேன். 1986 ஆம் ஆண்டில் எத்தனை வீடுகளைக் கட்டினீர்கள் என்று. அதற்கு அவர் சொன்னார் 2 லட்சம் வீடுகள் என்று. 30 லட்சம் வீடுகளை எப்படிக் கட்டப் போகிறீர்கள்? இதைப்பற்றி எனது அருமை நண்பர் அப்துல் சமத் அவர்கள் பேசும்போது சொன்னார். இது நடைமுறைக்கு வருகிறதோ இல்லையோ, நடைமுறைப்படுத்த முடியுமோ, இல்லையோ, எனக்குத் தெரியாது. ஆனால் அதன் உன்னதமான லட்சியங்களுக்காக இதை நான் பாராட்டுகிறேன் என்று சொன்னார். உன்னதமான லட்சியங்கள் கற்பனைகளாக மாறிவிடக் கூடாது.

[திரு. கி. மனோகரன்] [1987 மார்ச் 31

(முற்பகல் 10-40)

உதாரணத்திற்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். அரேபியன் சீ, இந்துமாக்கடல், அட்லாண்டிக் ஓசியன், பிளாக் சீ போன்ற கடல்களில் எல்லாம் உள்ள தண்ணீரில் பாதியை குடிதண்ணீர் வசதி பெற்ற ஒன்றாக அமைப்பதற்கு நான் திட்டம் தீட்டியிருக்கிறேன் என்று சொன்னால், அது உன்னதமான லட்சியமாக இருக்கக்கூடும். ஆனால் அந்த லட்சியங்களிலே பதிந்திருக்கிற, புதைந்திருக்கிற கற்பனைகளை மறந்துவிடக் கூடாது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். இது வறட்சி காலம் என்ற காரணத்திற்காக, அனைவருக்கும் புரியும் என்று நான் நம்புகிறேன். மாலை நேரத்தில், கொஞ்சம் காற்று வாங்குவதற்காக நான் திருவல்லிக்கேணி கடற்கரைக்குச் செல்கிறேன், என்று வையுங்கள். காற்று லேசாக அடித்துக்கொண்டிருக்கிற நேரத்தில் நான் அப்படியே அந்த மணற்பரப்பிலே படுத்துக்கொண்டிருக்கிறேன் என்று கருதிக்கொள்ளுங்கள். நான் மேலே இருக்கிற நீல நிற ஆகாயத்தைப் பார்க்கிறேன். கண் சிமிட்டி விளையாடுகின்ற தாரகைக் கூட்டங்களைப் பார்க்கிறேன். பார்த்தவுடன் எனக்கு ஒரு ஆசை. இந்த நீல நிற வானத்தில் பாதி தங்கக் கூரையாக மாறி விடக்கூடாதா? மேலே இருக்கிற அந்தக் கண் சிமிட்டுகிற அந்த நட்சத்திரக் கூட்டங்கள் எல்லாம் கீழே முத்துக்களாக உதிர்ந்து விழக்கூடாதா என்று. இதற்கு ஒரு திட்டம் தீட்டுவேன் என்றால், அது ஒரு உன்னதமான திட்டம், நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நடைமுறைக்கு வருகிற ஒன்றா? அது கற்பனைக் களஞ்சியம் அல்லவா என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். வீடுகளே கட்ட முடியாது என்று நீங்கள் நினைக்கிறீர்களா வீடுகளே கட்ட முடியாதா?

**திரு. கி. மனோகரன் :** வீடுகள் கட்ட முடியாது என்று சொல்லவில்லை. என் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய. . . . (குறுக்கீடு).



1987 மார்ச் 31]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்கவும். வானத்திலே இருக்கிற நட்சத்திரங்கள் முத்துக்களாக கீழே கொட்டாதா என்ற அந்தக் கற்பனையும், ஏழை எளியவர்களுக்கு 30 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்க முடியாதா என்ற இந்த ஆசையும், இரண்டும் ஒன்று தானா? இரண்டு லட்சியங்களும் ஒன்றுதானா என்று மட்டும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (கரகோஷம்).

**திரு. கி. மனோகரன் :** கரகோஷத்திற்கு நன்றி. எப்போதும் திரு. சண்முகம் அவர்கள் இடைமறித்து, எனது பேச்சை திசை திருப்பி, அதன் மூலம் சில கரகோஷங்களைப் பெறுவது வாடிக்கை. அவர் அந்த வாய்ப்பை இழந்துவிடக் கூடாது என்பதில் எனக்கு அக்கறை உண்டு. வீடு கட்ட முடியாதா என்று கேட்டார். நான் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்குச் சொல்கிறேன், நீங்கள் நினைத்தால் உங்களுக்கென்று வீடு கட்டிக்கொள்ள முடியும். வீடு கட்ட முடியாது என்று நான் வாதாடவில்லை. 131 கோடி ரூபாயை பற்றாக்குறையாக வைத்துக்கொண்டு இருக்கிற ஒரு அரசு, இந்தியத் துணைக் கண்டத்தின் ஒட்டுமொத்தமான பொருளாதாரத் துடிப்பில் பிணைப்பில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிற ஒரு அரசு, மூன்று ஆண்டுக்காலத்தில் 30 லட்சம் வீடுகளைக் கட்டி முடிக்க முடியும் என்று சொல்வது கற்பனை. நடந்தால் நல்லது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பிரச்சினைகளிலேயிருந்து நழுவி, தனிப்பட்ட முறையில் நானும் அவர்களும் வீடு கட்டிக்கொள்வதைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் அதைப் பற்றிச் சொல்லவில்லை. 30 லட்சம் வீடுகள் கட்டுவதற்கான வாய்ப்புகள் 3 ஆண்டுகளில் இல்லை, என்றார். 'உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்' என்றும் திருவள்ளுவர் சொல்லி இருக்கிறார். அதையும் நினைவிலே வைத்துக்கொள்ளுங்கள். அதற்கு மேலாக ஒன்றைச் சொல்கிறேன். அந்த வீடுகள் கட்டுவதற்கான திட்டங்கள் தயாராகிக்கொண்டுதான் வருகின்றன.

**திரு. கி. மனோகரன் :** 'உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல்'. நல்லது. ஆனால் அது நடைமுறைக்கு வரவேண்டும் என்பது என்னுடைய ஆசை. அந்த நடைமுறைக்கு சாத்தியக்கூறுகள்

1987 மார்ச் 31]  [திரு. கி. மனோகரன்]

இருக்கிறதா என்பதை எண்ணிப்பார்க்க இந்த அவை கடமைப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு) அடிக்கடி நீங்கள் குறுக்கிடுகிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, சத்துணவைப் பற்றிக் கூட இப்படித்தான் சந்தேகப்பட்டார்கள். அதுபோன்று, இந்த வீடு கட்டும் திட்டம் வரும்போது, அவர்கள் புரிந்து கொள்வார்கள்.

**திரு. கி. மனோகரன்:** சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். அதற்காக எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள், நிதிநிலைமைக்காக என்று எனக்குத் தெரியும். அதற்காக மத்திய சர்க்காரை நீங்கள் அணுகி இருக்கிறீர்கள் என்றும் எனக்குத் தெரியும். மத்திய சர்க்கார் அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் எனக்குத் தெரியும். அதை நிறைவேற்ற முடியாது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நீங்கள் கூட இருந்துதான் அதைச் செய்தீர்கள். அதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. திட்டத்திலேயே இப்போது சேர்த்திருக்கிறார்கள். 'மாஸ் ஹவுசிங் ஸ்கீம்' என்று ஒரு திட்டத்தை அமல்படுத்த, மத்திய அரசாங்கமே 'ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேசன்' என்று அமைத்து 100 கோடி ரூபாய் போட்டு, ஆயிரம் கோடி நிதி திரட்டி,—அவர்களே இந்தத் திட்டத்தை வரவேற்று, இந்த வரவு-செலவுத் திட்டத்திலே அறிவித்திருக்கிறார்கள். அதற்கான நிதி ஆதாரங்களை எப்படித் திரட்டுவது, எப்படி இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவது என்பதைப் பற்றி எல்லாம் ஏற்கனவே அரசாங்கம் திட்டமிட்டுத்தான் இந்த அறிவிப்பைச் செய்திருக்கிறது.

**திரு. கி. மனோகரன்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே. அதற்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை. எனது நேரத்தை பாழாக்கவும் விரும்பவில்லை. வறட்சி இன்றைக்கு கடுமையாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் லைனில் ஒருவர் . . .

**திரு. கி. மனோகரன்:** நான் என்னுடைய லைனில்தான் பேசுகிறேன்.



1987 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் லைனில் உள்ள ஒருவர் பேச விரும்புகிறார்.

**திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள் ஆரம்பத்தில் பொருளாதார தத்துவங்களை எடுத்துச் சொன்னார்கள். இப்போது வீடு கட்டுகிற திட்டத்தை எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். நான் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பணத்தைப் பற்றி நாம் நினைத்துக்கொண்டு இருக்கும் போது அது ஒரு பெரிய தடையாகத்தான் தெரியும். அது ஒரு அடையாளம்தானே தவிர அது மக்கள் இடத்திலே தேங்கி கிடக்கின்ற உழைப்பை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கோடிக்கணக்கான மக்களுடைய உடலில் இன்றைக்கு உபயோகம் இல்லாமல் இருக்கின்ற உழைப்பைத்தான் வீடுகளாக நாம் ஆக்க விரும்புகிறோம். அதற்கு ஏற்ற யோசனையை நாம் சொல்லலாமே தவிர அதை வேண்டாம் என்றோ, நம்மால் முடியாது என்றோ சொல்லுவது நம்முடைய இயலாமை ஆகும். ஆகவே மக்கள் உழைப்பை வீடுகளாக மாற்றுகிற திட்டத்தை நம்மால் செயற்படுத்த முடியும்.

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியைப் பற்றி ஒரு சில வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன். வறட்சியின் கொடுமையைப் பற்றி இங்கே பேசிய அத்தனை பேரும் மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். நான் தெளிவாக்க வேண்டிய தேவை இல்லை. எனக்கு இருக்கிற வருத்தம் எல்லாம்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமான விஷயத்தைப் பற்றி பேசுகிறேன். நாம் 2 பேரும் தனியாக பேசுவது என்பது வேறு. இப்போது இந்த அவையில் பேசுகிறேன் (சிரிப்பு)—பெருமளவுக்கு வறட்சி ஏற்பட்டு இருப்பது எல்லோருக்கும் தெரியும். நான் முதலமைச்சரை குற்றம் சாட்டுவதாக அவர்கள் கருதக்கூடாது. ஒரு வாரத்திற்குள்ளாக 2 முறை பாரத இளைய பிரதமர் மாண்புமிகு திரு.

[திரு. கி. மனோகரன்] [1987 மார்ச் 31

ராஜீவ் காந்தி அவர்கள் தமிழகத்திற்கு வந்தார்கள். அவரை ஹெலிகாப்டரில் அழைத்துக்கொண்டு போய் இந்த வறட்சிப் பகுதிகளைச் சுற்றிக் காட்டுவதற்கு நீங்கள் விரும்பவில்லை என்று நான் சொல்லவில்லை. (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிப்பாக செல்ல இருக்கிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்.

**திரு. கி. மனோகரன்:** அது எனக்குத் தெரியாதா (சிரிப்பு). அவர்கள் மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஒரு வாரத்திற்குள்ளாக நீங்கள் காட்டி இருப்பீர்களானால் விளைவு கொஞ்சம் சாதகமாக அமைந்து இருக்கும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக நான் இதை சொல்லுகிறேனே தவிர வேறு அல்ல.

நள்ளிரவு 12 மணிக்கு மேல் குல விளக்குகள் குடங்களை ஏந்திக்கொண்டு தண்ணீருக்காக குழாயடியில் நிற்கின்ற பரிதாப மான காட்சியை நான் பார்க்கிறவன் என்ற முறையில் உங்களுக்கு இதை தெரிவிக்க விரும்புகிறேன். ஆக வறட்சி நிவாரணத்தைப் பொறுத்தவரையில் பணி மந்தமாக இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு இந்த அவையில் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக் கிறேன்.

அடுத்து உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது மின்சாரம்; பெருமளவுக்கு மின்சாரம் நமக்கு இல்லாமல் இருக் கிறது. மின்சார வாரியத்திற்கு என்று இருக்கிற நஷ்டம் இப்போது 227 கோடி ரூபாய் ஆகும். சோவியத் ரஷ்யா போன்ற நாடுகள் இன்றைக்கு வளம் பெற்ற, வலு பெற்ற நாடுகளாக இருப் பதற்குக் காரணம் அது பெற்று இருக்கின்ற மின்சாரம்தான். அந்த மின்சாரத்தை அதிகப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டு இருக் கின்ற நடவடிக்கைகள் துரிதமாக இல்லை என்பது மட்டும் அல்ல, அந்த காரணத்தினாலேயே நாம் பல பெரிய தொழிற்சாலைகளை மூட வேண்டிய சூழ்நிலைக்கு தாக்கப்பட்டு இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1987 மார்ச் 31] [திரு. கி. மனோகரன்]

அடுத்து, காவேரி நதி நீர் எங்கே? நான் முதல்வரைப் பார்த்து கேட்கிறேன். கிருஷ்ணா நதி நீர் எப்போது வரும்? நான் முதல்வரைப் பார்த்து கேட்கிறேன். வரும், வரும், வரும் என்று சொல்லிவிட்டுச் சென்றால் போதாது. வரவேண்டும் என்பதற் காக நான் சொல்லுவதற்குக் காரணம் நான் கொடுக்கிற வரிப் பணத்தில் இங்கே உட்கார்ந்து இருக்கிற அனைவரும் தருகிற வரிப் பணத்தில் 47 கோடி ரூபாயை நாம் ஆந்திர அரசுக்கு வழங்கி யிருக்கிறோம். 3 ஆண்டுக் காலத்திற்குள்ளாக அல்லது 4 ஆண்டுக் காலத்திற்குள்ளாக கிருஷ்ணா நதி நீர் சென்னை மாநகர மக்க ளுக்கு கிடைக்கும் என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டது. 600 கோடி ரூபாய் நம் பொறுப்பில் ஆகும் என்று இன்றைக்குத் தெரிவிக்கிறார்கள். ஒவ்வொரு கட்டத்திற்கும் 200 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் என்ற அளவுக்கு 600 கோடி ரூபாயை நாம் கொடுக்க வேண்டியிருக்கிறது. 47 கோடி ரூபாயை நாம் கொடுத்து விட்டோம். இன்றைக்குப் பேசுகிற இந்தக் கணக்கு இந்தத் திட்டம் நிறைவேறாமல் போனால் ஒரு மூன்று ஆண்டு காலத்தைத் தாண்டி இந்தத் திட்டம் நிறைவேறுகிற சூழ்நிலை ஏற்படுமானால்—நிறை வேறாது என்று நான் கருதவில்லை, நிறைவேற வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்—இந்த 600 கோடி ரூபாய் என்று சொல்லப்படுகிற இந்த ரூபாய் 800 கோடி ரூபாய்க்கு மேல் போனால்கூட நான் ஆச்சரியப்பட மாட்டேன்.

(முற்பகல் 10-50)

ஒரு மாநிலத்தில் அது எந்த மாநிலமானாலும் சரி, அங்கு வறட்சி வரும். வெள்ளம் வரும். மாறி மாறி வரும். வறட்சி வரும் போது நீர் தேவை. ஆனால் காவிரி நதி நீரைப் பெறுவதற்கும், கிருஷ்ணா நதி நீரைப் பெறுவதற்கும் நமது மாநில அரசு போராட வேண்டும். போராடிக் கொண்டிருப்பதாகத் தகவல். அவர்கள் தருவதாக இல்லை என்றும் தகவல். நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அந்தப் போராட்டம் தொடர்ந்து நடக் கட்டும். நமக்குரிய உரிமையை நாம் இழந்து கொடுக்கத் தயாராக இல்லை. அது தொடர்ந்து நடக்கட்டும். ஆனால் அதற்குள்ளாக எனக்கிருக்கிற யோசனை. பெருவெள்ளம் பெருக்கெடுத்து ஆரம்

பிக்கிறபோது, தமிழ்நாட்டில் நமக்குத்தான் தெரியும். பல குடிசைகள் அடித்துச் செல்லப்படுகின்றன. இன்னும் கோட்டூர்புரம் போன்ற பகுதிகளில் வீடுகளே வெள்ளத்திற்குள் ஆழ்த்தப்படுகின்றன.

அப்பேர்ப்பட்ட வெள்ளத் தேக்கைச் சின்னஞ்சிறு அணைகளில் தேக்கி நிறுத்தி, குளம் குட்டைகள் மூலம் தேக்கி நிறுத்தி, பாதுகாப்பாக வைத்திருந்தால், பெருமளவுக்கு வறட்சி வரும்போது அந்த நீரைப் பயன்படுத்த முடியுமா முடியாதா, நிலத்தடி நீரே இல்லை என்ற ஏக்கத்தை தவிர்க்க முடியுமா, முடியாதா என்று கேட்டு நான் முதலமைச்சருக்கும், நிதியமைச்சருக்கும் சொல்கிறேன். எத்தனையோ வாரியங்களை நீங்கள் அமைத்திருக்கிறீர்கள். இந்தச் சந்தர்ப்பத்தில், இந்த வறட்சிக்காக வெள்ளத்தை தேக்குவதற்காக 'வாட்டர் கன்சர்வென்சி மேனேஜ்மெண்ட் போர்டு' என்ற ஒரு வாரியத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முக்கூட்டு மாநாடு இங்கே நடந்துகொண்டிருக்கிறது. தயவுசெய்து கேளுங்கள். தண்ணீரைத் தேக்கி நிறுத்துவதற்காக நான் ஒரு யோசனை சொல்கிறேன். பல வாரியங்களை நீங்கள் உருவாக்கியிருக்கின்ற நேரத்தில், 'வாட்டர் கன்சர்வென்சி மேனேஜ்மெண்ட் போர்டு' என்ற ஒரு வாரியத்தை உருவாக்கி—ஆனால் ஒரு நிபந்தனை என்னைப் பொறுத்தவரையில் உரிமையோடு சொல்கிறேன்—அந்த வாரியத்திலே இடம் பெறுபவர்கள் அத்தனை பேரும் விவரம் புரிந்தவர்களாக, பொறியியல் கலை வல்லுநர்களாக இருக்கவேண்டுமே தவிர, அரசியலில் ஈடுபடுபவர்களாக அந்த இடத்திற்கு வைத்துக்கொள்ளக் கூடாது என்ற எனது கருத்தை மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு).

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** தலைவரவர்களே, அரசியலில் உள்ளவர்கள் விவரம் தெரியாதவர்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், மழை நமக்கு 1000 மில்லி மீட்டர்தான் கிடைக்கிறது. அந்த மழையை வைத்துக்கொண்டு, நீண்டகாலத் திட்டம் ஒன்று, குறுகிய காலத் திட்டம் ஒன்று என்ற அளவில், இரண்டும் குடிநீர்



வடிகால் வாரியத்தில் போடப்பட்டு பொறியியல் வல்லுநர்கள் பரிசீலனையில் இருக்கிறது. அவர்கள் அதைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அது நடைமுறைக்கு வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கி. மனோகரன்:** நடைமுறைக்கு வந்தால் சரி. வராத காரணத்தால்தான் அதைச் சொல்கிறேன். வந்தால் மகிழ்ச்சியடைவது என்னைவிட வேறு யாரும் இருக்கமாட்டார்கள். மதிப்பிற்குரிய தொழிற்துறை அமைச்சர் சிறந்த நிர்வாகி என்ற பெயர் பெற்றவர், எனது அருமை நண்பர். அந்த அறிக்கையில் நான் பார்த்தேன். என்ன பார்த்தேன் என்றால், ஸ்வீடன் நாட்டிடமிருந்து பெற்ற பணத்தின் மூலம் ராணிப்பேட்டையின் பக்கத்தில் காடுகளை வளர்க்கும் திட்டம் ஒன்றை பெருமளவிற்கு வைத்திருப்பதாக, அதை வளர்த்துக் கொண்டு வருவதாக மிகப் பெருமையோடு இங்கே பட்ஜெட்டில் எடுத்துச்சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது ஒன்றே ஒன்று. நீங்கள் ஸ்வீடன் நாட்டிலிருந்து பெற்ற அந்தப் பணத்தின் மூலம் அந்தக் காடுகள் வளர்க்கின்ற அதே நேரத்தில் தொழிற்துறையில் முன்னேறியுள்ள மாநிலங்களில் தொடர்ந்து முன்னணியில் தமிழகம் இயங்கி வருகிறது என்று சொல்கின்ற அதே நேரத்தில் நான் உங்களைப் பார்த்து பணிவோடு கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புவது ஒன்றே ஒன்று. எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல், நீங்கள் கொடுத்திருக்கின்ற தகவலுக்கு முற்றிலும் மாறான தகவலா, அல்லது சரியான தகவலா என்று எனக்குத் தெரியவில்லை. ஸ்வீடன் நாட்டிலிருந்து கிடைக்கின்ற நிதியைப் பற்றி நீங்கள் இன்னொன்றையும் தெரிவித்திருக்கிறீர்கள். டென்மார்க் அரசின் மூலம் நாம் பெறுகின்ற பணத்தை பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்று தெரிவிக்கின்ற அதே நேரத்தில் எனக்குக் கிடைத்த செய்தி ஒன்றை இந்த மன்றத்தின் தேவையின் காரணமாக படித்துக் காட்ட விரும்புகிறேன். கோப்புகளிலிருந்து வந்த செய்தி. கிராமப்புற மக்கள் நல்வாழ்வுக்காக, இந்தியாவிற்கு அளித்துவந்த உதவித் திட்டத்தை வரும் ஏப்ரல் முதல் தேதியுடன் நிறுத்தி விடுவது என டென்மார்க் முடிவு செய்துவிட்டது என்று செய்தி கூறுகிறது. டேனிடா எனப்படும் அந்த உதவித் திட்டத்தின் ஆய்வுக் காலம் வரும் ஏப்ரல் முதல் தேதியுடன் முடிவடைகிறது. எனவே இந்தத் திட்டத்தை தொடர்வ

தற்கான திட்டத்தை வகுத்து அளிக்கும்படி இந்திய அரசு அதிகாரிகளுக்கும், அரசுக்கும் தெரிவிக்கப்பட்டது. அதுபற்றி பலமுறை கேட்டும், இந்திய அரசிடமிருந்து பதில் ஏதும் வரவில்லை. எனவே இந்தத் திட்டத்தை வரும் ஏப்ரல் மாதம் முதல் நிறுத்திவிட முடிவு செய்யப்பட்டுள்ளது என டென்மார்க் அதிகாரிகள் முடிவு செய்திருக்கிறார்கள். அத்தோடு கடைசியாகச் சொல்லுகிறார்கள். டென்மார்க் தெரிவித்த பல யோசனைகளைக் குறித்து பதில் ஏதும் இல்லாததாலும், நாங்கள் கூறியது செவிடன் காதில் ஊதிய சங்காக இருந்துவிட்டதாலும் டென்மார்க் இந்தத் திட்டத்தை நிறுத்துவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விட்டது என்றும் அந்த அதிகாரி தெரிவித்திருக்கிறார். டானிடா திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட கருச்சிதைவு மற்றும் குடும்பக் கட்டுப்பாடு முறைகள் குறித்தும் இரு நாடுகளுக்கும் இடையே சர்ச்சைகள் ஏற்பட்டிருக்கிறது என்று கூறி . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, மன்னிக்கவும். கோபித்துக்கொள்ள வேண்டாம். டானிடா திட்டத்தின் கீழ் தமிழக அரசு இந்தத் திட்டத்தை அனுப்பி 1½ ஆண்டுக்காலம் ஆகிறது. இந்தத் திட்டத்தை நாங்கள் அனுப்பிவிட்டோம். இந்தத் திட்டத்தைப்பற்றி டென்மார்க் நாட்டிலிருந்து வந்தவர்கள் என்னிடத்திலே டெல்லியிலே சந்தித்துப் பேசினார்கள். இதைத் தொடர்ந்து அளிப்பதற்கு இசைவு தந்திருக்கிறார்கள். என்றாலும் 31-ந் தேதி முடிவடைகிறது. இந்திய அரசு ஆறு மாத காலத்திற்கு இதை நீட்டித்துக் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் உத்திரவு வரவில்லை. ஆகவே, டென்மார்க் அரசும் நீட்டித்துக் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். விரைவிலே அந்த ஒப்பந்தம் நடைபெறும் என்று நம்புகிறேன்.

**திரு. கி. மனோகரன்:** தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி. எனக்குக் கிடைத்த தகவலை இந்த அவைக்குச் சொன்னேன். நீங்களே சொன்னீர்கள். இந்தியத் துணைக் கண்டம்—மைய அரசுக்கு எழுதியதற்கு பிறகும் அங்கிருந்து விரைவு



பதில் கிடைக்கவில்லை. மேலும் எழுதியிருக்கிறோம். ஆறு மாதங்களுக்குள் அது நடக்கும் என்று நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். மகிழ்ச்சி.

நான் நமது மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் அவர்களைப் பார்த்து கேட்கிறேன். அவர்கள் தவறாகக் கருதிக்கொள்ளக் கூடாது. பத்திரிகையிலேயும் பார்த்தேன். இங்கே நமது முதலமைச்சர் அவர்கள் விட்ட அறிக்கையிலேயும் பார்த்தேன். நான்-ரெசிடென்ஷியல் இண்டியன்ஸ் இருக்கிறார்களே, அமெரிக்காவில், லண்டனில், பாரீசில் மற்ற நகரங்களில் உள்ள அவர்கள் எல்லாம் இங்கே வந்து முதலீடு செய்ய வேண்டும் என்பதற்காக நமது முதலமைச்சர் அவர்கள் அமெரிக்கா சென்றது உங்கள் அனைவருக்கும் தெரியும். அதன் விளைவாக மகாபலிபுரத்தில் ஹோட்டல் இன்று அவர்களுக்கு மாற்றப்பட்டு, அது ஜாயின்ட் செக்டாராக மாற்றப்பட்டு 26 சதவீதம் நமக்கும் 25 சதவீதம் அவர்களுக்கும் மீதி உள்ளது பப்ளிக் இஷ்யு என்ற அளவுக்கு நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அங்கே இருக்கின்ற நண்பர்கள் தங்களது பணத்தோடு இந்தியத் துணைக் கண்டத்திற்கு, நமது தமிழகத்திற்கு வருவதை வரவேற்பவன் நான். ஆனால் நான் தெரிந்துகொள்ள விரும்புவது புதிய தொழில் தொடங்குவதற்கு அவர்களை அனுமதிப்பதை விட்டுவிட்டு ஏற்கனவே ஒழுங்காக இயங்கிக்கொண்டிருக்கின்ற அந்த ஹோட்டலுக்கு மோகன்ராவ் என்ற அந்த நண்பரும் நீங்களும் சேர்ந்து அந்த ஏற்பாட்டைச் செய்வதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறீர்களே அந்த அரசு ஆணை என் கையிலே இருக்கிறது. நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். வேறு தொழில்களில் அவர்களை ஏன் நீங்கள் ஈடுபடுத்தக்கூடாது? அந்தப் பணம் தமிழகத்திற்கு வரவேண்டும் என்பதில் அதிகப்படியான அக்கறை உள்ளவன் நான். ஆனால் வருகின்ற பணம் ஏற்கனவே இருக்கின்ற ஒன்றின் மேலே—அதற்கு மேலேயே செலவழிப்பதை விட்டுவிட்டு புதிது புதிதாக தொழிற்சாலைகளை, ஹோட்டல்களை, ஹாஸ்பத்திரிகளை, மற்றவைகளை உருவாக்குவதற்கு நீங்கள் முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுதான் இருக்கிறதே—உடன்படிக்கை—அதிலே ப்ராட் இருக்கிறது என்று சொல்கிற அளவுக்கு நான் முட்டாள் அல்ல. இல்லை. ஆனால்

[திரு. கி. மனோகரன்] [1987 மார்ச் 31

எனக்குள்ள ஆதங்கம் எல்லாம் வேறு தொழிற்சாலைகளைத் நியாயமாக இருக்கும் என்ற எனது நம்பிக்கையையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த டீட், தொடங்குவதற்கு அந்தப் பணத்தை அவர்கள் போடுவதற்கு நீங்கள் வழிவகை செய்திருக்கக்கூடாதா? எக்கனாமிக் ஓவர் ஹெட்ஸ் என்று கருதப்படுகின்ற, தண்ணீர், மின்சாரம், இடம், நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு. இதேபோன்று பல வகைகளை ஒதுக்கி அவர்களுக்கு நீங்கள் உதவியிருப்பீர்களானால் அது மிகவும் பலன் உள்ளதாக இருக்கும். அதை நீங்கள் விட்டு விட்டீர்கள்.

நான் கடைசியாக சொல்வதற்கு முன் ஒரு வார்த்தை. இங்கே ஹெலிகாப்டர் ஒன்று இருக்கிறது. அது பறக்கிறதா என்றால் பறக்கவில்லை என்று நான் கேள்விப்பட்டேன். ஆனால் அதற்கென்று ஆண்டு ஒன்றுக்கு செலவழிக்கப்படுகின்ற தொகை மட்டும் ரூ. 2 இலட்சம் என்பதை தயவு செய்து—2 இலட்சம் அல்ல

(முற்பகல் 11-00

இரண்டு லட்சம் மாதத்திற்கு செலவழிக்கப்படுவதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இன்னும் சொல்கிறேன். ராஜீவ் காந்தி அவர்கள் சொன்னார்கள்.

Administrative expenditure must be screened and it must be monitored.

என்று குறிப்பிட்ட அந்தக் கருத்தை நூற்றுக்கு நூறு நான் வரவேற்கிறேன். அதேபோன்று, மாநில அரசும் பணத்தைச் செலவழிக்கின்ற நேரத்தில் மக்களின் வரிப்பணம் என்ற உணர்வோடு அந்த வரிப் பணத்தை ஒழுங்கான முறையில் செலவழிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டும். ஊதாரிச் செலவுகள் ஏராளமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கென்று ஒரு குழு போட்டு அந்தக் குழு அதை விவாதிக்கலாமா என்று கேட்டால் அந்தக் குழுவும் ஊதாரித்தனமாகப் போய் விடுமோ என்ற அச்சம் இருக்கிற காரணத்தினாலே நான் அந்தக் குழுவைப் பற்றிப் பேசவில்லை. நமது மாண்புமிகு முதல்வர் இதிலே தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் தெரிவிக்க விரும்புவது, இன்றைக்குக் காலையிலேகூட நான் பார்த்தேன். இலங்கைச் சிறைச்சாலையில் மூவாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் சிறை பிடிக்கப்பட்டு, எந்தவிதமான விசாரணையும் இன்றி அவர்கள் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்ற செய்தியை நான் இன்றைக்குப் படித்தேன். அதேபோல் நான் இன்னொன்றையும் பார்த்தேன். தினம், தினம்—நினைவிலே வையுங்கள்—நூற்றுக்கணக்கான தமிழர்களும், தமிழச்சிகளும் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள் என்ற வேதனையான செய்திகள் பத்திரிகைகளிலே வந்து கொண்டிருக்கின்றன. நம்மைப் பொறுத்தவரையில் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை ஒரு ஆத்ம பரிசோதனைக்காக எண்ணிப் பார்க்க வேண்டுமென்று உங்களிடத்தில் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் விட விரும்புகிறேன்.

1983 ஆம் ஆண்டு இனப் படுகொலை வெடிக்க ஆரம்பித்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னார்—'படை எடுங்கள்'. படை எடுங்கள் என்று அவர் சொன்னபோது, படை எடுக்கவேண்டும் என்ற உணர்விலே சொல்லவில்லை. மாறாக, படை எடுப்போம் என்று சொல்வதன் மூலம் அங்கே இருக்கிற சுண்டைக்காய் சர்க்காரைக் கூனிக் குறுக வைத்து பயமுறுத்த முடியும்; அதன் மூலம் தமிழர்களுக்கு நல்வாழ்வு கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்ற அந்தக் கருத்தை அவர் சொன்னார். சொன்னாரோ, இல்லையோ, பல உயர்ந்த இடத்திலே இருந்தவர்கள் it is foolish என்று சொன்னார்கள்.

ஆனால், இன்றைக்கு அந்தக் கருத்துக்கள் பலமுற்றுக் கொண்டிருக்கின்றன. நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்றால், 1983 ஆம் ஆண்டிலிருந்து 1987—இதுவரை நான் தெரிவிக்க விரும்புகிறேன்—அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் கூடச் சொன்னார்: "அவர்களோடு பேசிப் பார்த்தேன். அவர்கள் கேட்பதாக இல்லை. அவர்கள் அந்த அளவுக்கு தமிழர்களைக் கொன்று குவிப்பதிலேயே இருக்கிறார்கள்" என்ற கருத்தைச் சொன்னார். உடனடியாக உட்கார்ந்து கொண்டிருந்த அவரைப் பார்த்து நான் கேட்டேன்: if so, what is the solution for it?

அதற்கு என்ன பரிகாரம் என்று கேட்டேன். நான் வந்து சொல்கிறேன் என்று சொல்லிவிட்டுப் போனார். அதை நான் தனியாக அவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்று கருதுகிறேன்..

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, எத்தனையோ கற்பனைகளில் இதுவும் ஒரு கற்பனை உரையாடலைப் போல் தெரிகிறது. எப்போது என்னைப் பார்த்துக் கேட்டார்கள். நான் எப்போது அப்படிச் சொன்னேன் என்று எனக்கு நினைவு இல்லை. இல்லையெனில், நம்முடைய மெரினா கடற்கரையில் படுத்துக்கொண்டு இருந்து வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் பார்த்தது போலவா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு).

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** இலங்கை அரசு இதுமாதிரி கொடுமைப்படுத்துகிறார்கள் என்று சொன்னீர்கள். (குறுக்கீடு)...

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, எனக்கு நினைவு சரியாக இருக்குமானால், சட்டப் பேரவை உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் ஒரு கேள்வியை கேட்டு, அவர் ஒரு துணைக் கேள்வியைக் கேட்டபோது நான் பதில் சொன்னேன். இவ்வளவுதான் நடந்தது. (குறுக்கீடு) எது சொன்னாலும், அவர் கேட்ட போது அவரிடம் சொன்னேன். மைக்கிலேதான் சொன்னேன். தங்களிடம் ஏதோ நான் சொன்னதாகவும் போய் வருகிறேன் என்று நான் போய் விட்டதாகவும் தாங்கள் ஏதோ ஒரு கற்பனையைச் சொல்கிறீர்களே, அதற்காகச் சொல்கிறேன். . . .

**திரு. கி. மனோகரன்:** கீழே உட்கார்ந்தால் ஒலிபெருக்கி வேலை செய்யாது என்ற காரணத்திற்காக சொன்ன கருத்துக்களைச் சொல்லவே இல்லை என்று சொல்வது உங்களுக்கு அழகல்ல என்பதை மட்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, வெறும் கற்பனையாக அவர் பேசிக்கொண்டே போகக் கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன். அவர் என்னை அப்படி கேட்டதாகவும் இல்லை. நான் அவரிடத்திலே சொன்னதும் இல்லை என்பதைத்தான் தங்களுக்குத்





தெரிவித்தேன். ஏனென்றால், நான் அவையிலே என்ன சொல்கிறேனோ, அது உண்மையைச் சொல்ல வேண்டும் என்ற காரணத்தினாலே சொல்கிறேன்.

**திரு. கி. மனோகரன்:** நீங்கள் அன்றைக்குச் சொன்னது உண்மை. இப்போது மறுக்கிறீர்கள். அதுவும் உண்மை. நான் அதுபற்றிக் கவலைப்படவில்லை. எனக்குத் தெரியவேண்டியதெல்லாம் ஒன்றுதான். What is the permanent solution for it? இதற்கு நிரந்தரமான தீர்வு என்ன? நாம் இதுவரை செய்துகொண்டிருந்தது எல்லாம், 1983 ஆம் ஆண்டிலிருந்து 1987 ஆம் ஆண்டுவரை திரு. ஜி. பார்த்தசாரதி போவார். அங்கிருந்து திரு. அமீது இங்கே வருவார். அதற்குப் பிறகு இங்கிருந்து திரு. பண்டாரி போவார். அங்கேயிருந்து திரு. அதுலத் முதலி இங்கே வருவார். இடையிலே ஸ்ரீலங்கா குடியரசுத் தலைவர் திரு. ஜெயவர்த்தனே வருவார். அதற்குப் பின்னாலே இங்கே இருந்து திரு. சிதம்பரமும், திரு. நட்வர்சிங்கும் போவார்கள். அதற்குப் பிறகு இங்கே வந்து முதலமைச்சரைச் சந்தித்துப் பேசுவார்கள். இப்படி போக்குவரத்து சர்வீஸுகள் நடைபெற்றுக்கொண்டிருந்ததே தவிர, வட்ட மேஜை மாநாடுகள் நடைபெற்றனவே தவிர, சதுர மேஜை மாநாடுகள் நடைபெற்றனவே தவிர, நீங்கள் ஏராளமான வாய்ப்புகளை தந்து, கால அவகாசத்தை அவர்களுக்கு வழங்கி, அதன்மூலம் கொடுமையான, கடுமையான ஆயுதங்களை அவர்கள் இங்கிலாந்து நாட்டிடமிருந்தும், அமெரிக்காவிலேயிருந்தும், மேற்கு ஜெர்மனியிடமிருந்தும் பெற்றதோடு மட்டுமல்லாமல், கூலிப் பட்டாளங்களை இங்கிலாந்து நாட்டிடமிருந்தும், இஸ்ரேல் நாட்டிடமிருந்தும் அவர்கள் பெற்று இன்று தமிழர்களை கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற வேதனையான இந்த கருத்தை என்து மதிப்பிற்குரிய தம்பி, நாடாளுமன்றத்திலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருப்பவர் திரு. குழந்தைவேலு அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த உணர்வோடு நூற்றுக்கு நூறு நான் ஒன்றுகிறேன். கால அவகாசத்தைத் தரக்கூடாது இப்படிப்பட்ட இனப் படுகொலைக்கு. அப்படி தருவதன் மூலம் நிச்சயமாகச் சொல்

கிறேன், தமிழ் இனம் பூண்டற்றுப் போகும், தமிழ் இனம் அழியும். சிங்கள ராஜ்ஜியத்தை உருவாக்குவதற்காக ஜெயவர்தனே முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணம் பற்றி எரிந்து கொண்டு இருக்கிறது. மாதா கோயில்கள் இடிக்கப்படுகின்றன; ஆலயங்கள் அழிக்கப்படுகின்றன. இத்தனைக்குப் பிறகும் இதற்குத் தீர்வு காண்பதற்கு முடியவில்லை. அங்கே பேசிக்கொள்கிறார்கள். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் நாடாளுமன்றத்தில், பண்டயெடுப்பைத் தவிர வேறு வழியே இல்லை என்கிறார்கள். அந்த அளவிற்கு பச்சை இரத்தம் சிந்தப்பட்டுவந்தார், யாழ்ப்பாண பெரு வீதிகளில் பச்சை இரத்தம் ஓடிக்கொண்டிருப்பதையும் நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம்.

இறுதியாக, ஒருவர் பேசிய கருத்து, பொறுப்பிலே உள்ளவர் பேசிய கருத்து. சாதாரணமானவர் பேசிய கருத்தல்ல இது. அந்தக் கருத்தை இந்த அவைக்கு வைக்கிறேன்.

"Protoria remains obstinate, intransignet, obdurate. They think Apartheid can be given an acceptable face. It cannot. Their legislative amendments and administrative changes do not end the racial domination. They prolong it. Freedom in South Africa will brook no further delay .......... "

கடைசி வார்த்தையை மட்டும் அருள் கூர்ந்து, ஆழமாக கவனிக்க வேண்டுகிறேன்.

"The question starkly is liberty now, with innocent lives saved or liberty later, in a welter of blood."

உடனடியாக சுதந்திரம் தேவை; அதன் மூலம் மக்களை காப்பாற்ற வேண்டுமா, என்று விரும்புகிற நீரம், காலம் தாழ்த்துவதன் மூலம் அவர்களை இரத்த வெள்ளத்தில் மிதக்கவிட வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா என்ற உள்ளத்தைத் தொடுகின்ற கேள்வியை SAARC Conference -லே கேட்டவர் நான் பெரிதும் மதிக்கின்ற இந்தியத் துணைக் கண்டத்தின் பாரதப் பிரதமர் இராஜீவ் காந்தி என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



கடைசியாக, எனது பேச்சை முடிப்பதற்கு முன்பு இந்த அவைக்கு ஒன்றை தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். தயவு செய்து எனது கருத்துக்களை காண வேண்டிய கோணத்தில் காணவேண்டுமே தவிர வேறு திசையில் என்னைப் பார்க்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அந்த அடிப்படையில் என்னை அணுக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எனக்கு இருக்கிற மகிழ்ச்சியெல்லாம் இதுவரை நான் பேசிக்கொண்டிருந்தபோது அடிக்கடி குறுக்கீடுகள், ஆட்சிக் கட்சியிடமிருந்தோ, இங்கே இருக்கிற எதிர் கட்சியிடமிருந்தோ வரவில்லை. அந்த அளவிற்கு தெளிவாக, திட்டவட்டமாக தேவைப்படுகின்ற கருத்துக்களை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், டாக்டர் கலைஞர் அவர்களின் சார்பாகவும் வழங்கி இருக்கிறேன் என்பதை மெத்த மகிழ்ச்சி யோடு தெரிவித்து, நாவலர் அவர்கள் பதில் சொல்லும்போது தேவைப்பட்டால், தேவை என்று கருதினால் நான் பேசியதிலே கொஞ்சம் பொருள் இருக்கிறதென்று நம்பினால், நம்பிக்கைக்குரிய இந்தக் கருத்தை நழுவ விடக்கூடாது என்று அவர் விரும்பினால், எனது கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உண்மையிலேயே அதனுடைய தலைவர் திரு. மனோகரன் அவர்கள் பொறுப்போடு பேசினார்கள் என்பதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள் கிறேன். முதலிலே ஒன்றைச் சொன்னார்கள். நான் அப்போதே தலையிட்டால் ஆரம்பத்திலேயே தலையிடுகிறேன் என்று எண்ணி வருத்தப்படுவார்களோ என்கிற காரணத்தால் தலையிடாமல் இருந்தேன். அரியலூர் ரயில் விபத்து நடந்தது பற்றியும் அங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று இருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்றும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். பொதுவாக விபத்துக்கள் அல்லது இயற்கை யினால் ஏற்படுகின்ற ஆபத்துக்களை நாம் போய் பார்ப்பது என்பது வேறு.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 மார்ச் 31

(முற்பகல் 11-10)

வெடி குண்டு போன்ற சதியால் ஏற்படுகிற சேதங்களை, மக்கள் செல்வாக்கு படைத்த தலைவர்கள் உடனடியாக அங்கே சென்று காண்பார்களானால் எந்தத் தடையங்கள் நமக்குக் கிடைக்க வேண்டுமோ, சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கு என்னென்ன வகையில் நாம் ஆய்வு செய்ய வேண்டுமோ அந்தப் பணிகளுக்கெல்லாம் அது பெரும்பாலும் இடையூறாகவே அமையும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை நூற்றுக்கு நூறு நான் ஏற்றுக் கொள்ள மறுப்பதற்குக் காரணம், தமிழகத்தில் இதற்கு முன்னால் வறட்சி ஏற்பட்டபோது நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று பார்வையிட்டுள்ளார்கள். அதைப்போலவே வெள்ளப் பெருக்கால் இராமேஸ்வரத்தின் அருகிலுள்ள குடிசைகள் எல்லாம் அடித்துச் சென்றபோதும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சென்று பார்த்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தயவு செய்து உங்கள் பேச்சுக்குத்தான் 'தடையங்கள்' இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சரியாக விளங்க வைக்கவில்லை என்றே கருதுகிறேன். ஆங்கிலத்தில் சொன்னால் அவர் உடனடியாகப் புரிந்து கொள்ளுவார். Natural calamities and accidents are different from conspiracy. அங்கே வெடிகுண்டு வைத்து, திட்டமிட்டு வெடிகுண்டு வைத்து ஒரு விபத்தை வேண்டுமென்றே ஏற்படுத்துகிறார்கள் என்றால் அந்த இடத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் போனால் சுமார் 50,000 பேர் கூடுவார்கள். அங்கே ஓயர்கள் எல்லாம் இருக்கும். அதன் காரணமாக யார் என்ன வைத்தார்கள் என்றே கண்டு பிடிக்க முடியாது. வைத்தவர்களேகூட அதைப் பயன்படுத்தி அந்தத் தடயங்களை அப்புறப்படுத்திவிடுவார்கள் என்பதைத் தான் நான் தெரிவித்தேன்.



1987 மார்ச் 31]

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் கருத்தோடு ஒன்றை மறுக்கிறேன் என்பதற்குக் காரணம் நம் முதலமைச்சர் அவர்கள் சென்றால் அங்கே ஏராளமாகக் கூட்டம் வரும் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அந்தக் கூட்டத்தை ஒதுக்கி நிறுத்திவிட்டு அவருக்கு மட்டும் தனியாக வழி விடுகிற வாய்ப்பும் இந்த அரசுக்கு உண்டு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்றால் அவர்களது இதயத்திற்கு ஒரு ஆறுதலாக இருக்கும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் சொன்னேனே தவிர இதை ஒரு வாதப் பொருளாக்க வேண்டாம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு அமைச்சர் திரு. ச. இராமச்சந்திரன் இருக்கையிலிருந்து எழுந்தார்.)

சொல்லி முடிப்பதற்கு முன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுகிறார். அவருக்கு அடிக்கடி எழுந்து எழுந்து உட்கார்ந்து பழக்கம். நான் அவரைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், இந்தப் பிரச்சினையை இதோடு முடித்துவிட்டு அடுத்து திருமதி யசோதா அம்மையார் அவர்களைப் பேச விட வேண்டுமென்று சபாநாயகர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்டவர்களின் இதயத்திற்கு உண்மையான ஆறுதல் வெடிகுண்டு வைத்தவர்களைக் கண்டுபிடித்து தக்க தண்டனையை அளிப்பதில்தான் இருக்கிறது. யார் போய் பார்ப்பதிலும் இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கி. மனோகரன்:** தலைவர் அவர்களே, அதன் மூலம் அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களைத் தண்டிக்க முடியாது என்பதை நான் ஒப்பு கொள்கிறேன்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'நோ பாயிண்ட் ஆஃப் ஆர்டர்' உங்கள் கட்சித் தலைவர் பேசுகிறார் அவர் மூலம் சொல்லுங்கள். அவரிடம் கொடுங்கள்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைப் பேரவையின் முன் வைத்து ஆற்றிய உரையின்மீது எனது கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

"கொடை, அருள், செங்கோல்முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவன் ஆவான்" என்ற உயர்ந்த பொருட்பா பாடலை அறிமுகப்படுத்தி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அவரது உரையை வழங்கி இருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

இந்தப் பாவை அடியொற்றிப் பார்க்கையில் அரியலூர் இரயில் விபத்திற்குக் காரணமானவர்கள் எப்படிப்பட்ட மனப்போக்கு உடையவராயினும், கருணை காட்டாது கடுமையாகத் தண்டிக்கப் பட வேண்டியவர்கள். வெடிகுண்டு வைத்து ரயில் பாலத்தைத் தகர்த்து ரயிலைக் கவிழ்த்து அதில் உயிர் சேதத்தை விளைவித்த கொடியவர்கள், ரெயிலில் பயணம் செய்கிறார்கள் நம் சகோதரர் கள், நம் குலக்கொடிகள் என்ற உணர்வு கொஞ்சமும் இல்லாத அந்தச் சண்டாளர்கள், சுவரொட்டிகள் மூலம் குரல் எழுப்பு கிறார்கள் என்றால் அதற்கு நம் அரசிடம் உள்ள கவனக்குறைவு கூட காரணமாக இருக்குமோ அல்லது நம் அரசிடம் உள்ள கண்டிப்பு இன்மையும் காரணமாக இருக்குமோ என்ற ஐயப்பாடு எனக்குத் தோன்றுகிறது.

அரசினர் தோட்டத்திலே குண்டு வைத்தவர்கள்தான் இன்று பாலத்திற்கு குண்டு வைத்திருக்கிறார்கள். இந்த விஷயத்தில் அரசு மிகுந்த எச்சரிக்கையோடும், விழிப்புணர்ச்சியோடும் இருந்தாக வேண்டும். ஒருவர் போர்வையில் ஒருவர் மறைந்து கொண்டு 'பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழமை' என்ற அளவில் மத்திய மாநிலங்களுக்கு எதிராகச் செய்யும் சதி செயல்கள் தான் இப்படிப்பட்ட குண்டு வெடிப்பு என்பதை தெளிவாக்குகிறது. இலங்கை தமிழர்கள் காப்பாற்றப்பட வேண்டும். அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அங்கே நடைபெறுகிற கொலை பாதகச் செயல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காக பாரதப் பிரதமர், அருமைத் தலைவர், திரு. இராஜீவ் காந்தி

அவர்கள் நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆலோச
னையைக் கலந்தே, முந்தைய காலங்களைவிட அதிக அளவிலே
ஈடுபட்டு, முழு மூச்சுடன் முயன்று செயல்படுகிறார் என்பது
யாரும் அறிந்ததே. இலங்கைப் பிரச்சினை குறித்த முழு
பொறுப்பையும் மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் திரு. ப.
சிதம்பரம் அவர்களும், திரு. நட்வர்சிங் அவர்களும் ஏற்று பேச்சு
வார்த்தைகளை நடத்தி வருவது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.
ஆகவே இலங்கை தமிழர்கள் குறித்த கவலை தமிழகத்திற்கு
மட்டுமின்றி இந்திய மக்களுக்கும் பொதுவான ஒன்றுதான். இதில்
குறிப்பிட்ட எவரும் அதிகம் சொந்தம் கொண்டாட முடியாது.
அப்படி ஒரு வேளை சொந்தம் பாராட்டுபவர்கள் இருப்பார்
களேயானால் அது பதவி ஆசையால்தான் இருக்க முடியுமே
தவிர வேறு ஒன்றும் கணிப்பதற்கு முடியவில்லை. மாண்புமிகு
நாவலர் அவர்கள் தனது உரையில், "இலங்கை தமிழர்கள் படும்
வேதனை பெருகிக் கொண்டே போகிறது. அவர்கள் நிலைமை
இன்னும் மோசமாவதற்கு முன்னர், அதைத் தடுக்க உடனடியாக,
நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்றும் "இலங்கை அரசை
இராணுவ நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்திவிட்டு
இப்பிரச்சினைக்குத் தீர்வு காண பேச்சுவார்த்தையைத்
தொடங்கும்படி பல வகையிலும் வற்புறுத்த வேண்டும்" என்றும்
தெரிவித்திருக்கிறார்கள். அதைவிட அங்கேயுள்ள தமிழ் மக்கள்
மீது விதிக்கப்பட்ட தடைகள் காரணமாக ஏற்பட்டிருக்கும் பசி,
பட்டினியால் தமிழ் மக்கள் மரணம் அடையும் நிலை நிறுத்தப்
படாவிட்டால், பசியால், பட்டினியால் வாடும் தமிழ் மக்களுக்கு
வேண்டிய உணவு பொருள்களையும், மருந்து போன்ற அத்தியா
வசியமான பொருள்களையும் இந்திய அரசே வழங்கி அவர்களை
பாதுகாக்கும் என்று நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள்
இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார் என்பதை இங்கே
நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

முடி சார்ந்த மன்னர்கள் தலை கனத்து அரசோச்சாது
இருக்க வேண்டும் என்று வள்ளுவப் பெருந்தகை வாக்களித்த

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி".

[திருமதி டி. யசோதா.] [1987 மார்ச் 31

என்ற குறட்பாவின்படி நடைபெறும் மக்களாட்சிக்கு முதன்மை வகிப்பவர்களுக்கும் ஏற்றதுதான் என்றாலும் அதன்படி இந்த அரசின் நிதிநிலை அறிக்கை இருக்கவில்லை.

குடியோம்பலை எடுத்துக்கொண்டால், குடி எப்போது உயரும்? வரப்பு உயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும். ஆக நெல் உயர்ந்தால்தான் குடி உயரும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் மழையே இல்லாமல் வறண்டு போவதும், விடாது மழை பெய்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதும் வழக்கமாக இருந்து வருகிறது. இதற்காக அரசு முன்கூட்டியே எடுத்த நடவடிக்கை என்ன? வேளாண்மை பொறியியல் துறையில் 1985-86 ஆம் ஆண்டில் 7 ஆயிரம் எக்டேர் நிலத்தை சமப்படுத்தவும், 18,800 ஏக்கர் நிலத்தில் இயந்திர சாதனங்கள் உதவியோடு பயிரிடவும், 4,850 குழாய்க் கிணறுகளை தோண்டவும், 2,920 வடிமுனைக் குழாய் கிணறுகளைத் தோண்டவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்கள். அது மட்டுமா? மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 57,850 எக்டேர் நிலங்களில் நீர் மண் வளம் பாதுகாக்கும் பணி மேற்கொள்ளப்படும் என்றும் பண்ணை பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் காவிரி, பெரியார், வைகை, கீழ்பவானி, சாத்தனூர் போன்ற பாசன பகுதிகளில் 38,000 ஏக்கர் நிலத்தில் வறட்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்கள். அதோடு நின்றார்களா என்றால், இல்லை. கிராமப்புற வேலையற்றோர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கசிவு நீர் குட்டைகள் கட்டும் பணி 1985-86 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்றும் 500 இடங்களில் ஆயிரம் கசிவு நீர் குட்டைகளை கட்ட பத்து கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்கள். கேட்க இனிமையாக இருந்தது என்றாலும் தண்ணீர் தேக்க வேண்டும் என்று சொன்னது நடந்ததாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக குடும்பத்தாருக்கு திங்கள் ஒன்றுக்கு அதிகபட்சமாக வழங்கி வந்த 20 கிலோ அரிசியை 12 கிலோவாக குறைத்து அரசு உத்தரவிட்டதுதான் நடந்த பலன். திட்டமிடப்பட்டு, செயல்படுத்தினால் உணவு உற்பத்தியில் தமிழகம் பின் தங்கியிருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த ஆண்டு உற்பத்தி 57 இலட்சம் மெட்ரிக் டன் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முந்தைய ஆண்டில், 1985-86 ஆம் ஆண்டில்



1987 மார்ச் 31] [திருமதி டி. யசோதா]

60 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தியை நாம் பெற்றோம். 1986-87-ல் 64 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியை நாம் பெற்றோம். இன்றைக்கு 57 இலட்சம் மெட்ரிக் டன்தான் நாம் பெற்றிருக்கிறோம். இது நம்முடைய தேவைக்குப் போதுமென்று சொல்லுவது சரியாக இருக்குமா? சென்ற ஆண்டு 64 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியில் கிட்டத்தட்ட 7 இலட்சம் மெட்ரிக் டன் குறைந்துள்ள சூழ்நிலையில் நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் இது நிறைவைத் தரக்கூடிய ஒன்று என்று குறிப்பிட்டிருப்பது உண்மைக்கு மாறான ஒன்றாக இருக்குமோ என்று எண்ணும் நிலைமை இருக்கிறது.

(முற்பகல் 11-20)

தஞ்சையைத் தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று சொல்லுவார்கள். அது இன்றைக்கு இருக்கும் நிலை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். தஞ்சையிலே இருக்கிறவர்கள் காவிரித் தண்ணீர் வர வேண்டும், வர வேண்டும் என்று நினைக்கிற நிலைமைதான் இருக்கிறது. காவிரி நீர் இன்றைக்கு ஒரு பிரச்சினையாக இருந்தாலும், மாற்றுத் திட்டங்களைப் போடும் சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். நான் கேள்விப்படுகிறேன், அது உண்மையாக இருக்குமென்ற நிலையிலே அதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1979-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தினுடைய மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர் ஒரு திட்டத்தைத் தந்தார். அன்றைய தினம் உள்ளாட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் இவைகளிலே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் 2 கோடி ரூபாய் அவர்கள் கையிலே இருந்தது. அந்த ஒன்றியங்களின் கையிலே இருந்த 9 கோடி ரூபாயிலே 6 கோடி ரூபாயை கிராம வளர்ச்சி குடிநீர் திட்டத்திற்கு எடுக்க வேண்டும் என்றும், அந்த 6 கோடி ரூபாய் அவற்றுக்காக எடுக்கின்றபோது, எந்தெந்த யூனியனிலிருந்து அந்தப் பணத்தை எடுக்கின்றோமோ அந்தந்த யூனியனைச் சேர்ந்த ஒருவர் டைரக்டராக அந்தக் கார்ப்பரேஷனில் நியமிக்கப்படுவார் என்ற நிலையிலே 6 கோடி ரூபாயை நாம் எடுக்கும்போது, மத்திய அரசு உதவி இல்லாமலும், மாநில அரசின் உதவியை எதிர்பார்க்காமலும், மத்திய அரசினுடைய நிதி நிறுவனங்களாக இருக்கின்ற 'நபார்ட்', 'ஐ.டி.பி.ஐ.' ஆகியவை விவசாயம், குடிநீர், கோழி வளர்ப்பு, மற்றும் தொழில் வளர்ச்

சிக்கு 60 கோடி ரூபாய் கொடுக்கத் தயாராக இருந்தார்கள். ஆக மொத்தம் 66 கோடி ரூபாய் திட்டம் மூலமாக தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்கும், குடிநீருக்கும், கோழி வளர்ப்புக்கும திட்டங்களை உருவாக்கி இருக்க முடியும் என்பதோடு தொழில் வளர்ச்சியையும் அந்த மாவட்டத்தில் ஏற்படுத்திக் கொடுத்திருக்க முடியும். 1979-லே அது முதல்வரவர்களாலே ஏற்றுக் கொள்ளப்பட்டது. அன்று நிதி அமைச்சராக இருந்த நாஞ்சிலார் அவர்களால் அது வரவேற்கக் கூடியதாக இருந்தது. அன்றைக்கு வருவாய்த் துறை அமைச்சராக இருந்த எஸ்.டி.எஸ். அவர்கள் ஏற்றுக்கொள்ளும் ஒன்றாக இருந்தது. துரதிருஷ்டவசமாக 1980-ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அரசுக் கட்டிலிலிருந்து இறக்கப்பட்டது. அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தும், கடந்த 7 ஆண்டுகளாக கிராம வளர்ச்சி குடிநீர் திட்டம் குறித்த இந்தத் திட்டம் அரசாங்க அலுவலகத்தில் கேட்பாரற்ற நிலையில் கிடக்கிறது. அதை எடுத்து, பரிசீலனை செய்து பார்த்து, இந்தத் திட்டம் ஒரு மாவட்ட வளர்ச்சிக்கு சிறப்புக்குரியதாக இருக்கிறதென்றால் அதைப் பயன்படுத்த முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டத்தில் பாலாற்று நீர் இல்லாததால் செம்பரம்பாக்கம், காவேரிப்பாக்கம் ஏரிகள் காய்ந்து, பயிர்த் தொழில் நசிந்து கிடக்கிறது. இன்றைக்கு 57 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி நமக்குப் போதும் என்று பட்ஜெட் உரையில் கொடுத்திருக்கிறார்கள். நான் வேதனையோடு ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். ஆந்திராவிலிருந்து கிட்டத்தட்ட ஆயிரம் டன் அரிசி ஒரு நாளைக்கு சென்னை மாநகரத்திற்கும் சென்னையை சுற்றி இருக்கும் மற்ற மாவட்டங்களுக்கும் வரவில்லை என்று சொன்னால், நமது உணவுப் பிரச்சினை கேள்விக்குரியதாக்கப்படும் அபாயம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆந்திராவிலிருந்து அரிசி வந்துகொண்டிருக்கிறது. ஆந்திர மாநிலத்தில் அன்ன போஜனத்திற்கு அரிசி வியாபாரிகள் அரிசியைக் குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்கள். குறைந்த விலையில் ஏழை மக்களுக்கு அரிசியை வியாபாரம் செய்ய ஆந்திர



வியாபாரிகள் கொடுக்கிறார்கள். அதன் காரணமாக நீங்கள் எங்கே வேண்டுமானாலும் அரிசியைக் கொண்டு போய் விற்றுக் கொள்ளுங்கள் என்று அரசு சொன்னது. எனவே இன்றைக்கு தடையில்லாமல் சென்னைக்கு ஆந்திர அரிசி வந்துகொண்டிருக்கிறது. அங்கே ஏதேனும் சிக்கல் ஏற்படுமானால், அரசாங்கத்திற்கும் அரசு வியாபாரிகளுக்கும் ஏதேனும் தொல்லை ஏற்படுமானால், அந்த நேரத்தில் இருக்கின்ற செக் போஸ்ட்டுகளையெல்லாம் அங்கே இருக்கின்ற அந்த அரசாங்கம் சரியாக நிறுத்திவிடுமானால், ஒரு மணியரிசியும் வெளியிலே போகக்கூடாது என்று தடுத்து நிறுத்தினால், நிச்சயமாக தமிழகம் அரிசிப் பஞ்சத்தாலே அவதிப்படக்கூடிய ஒரு அபாயம் இருக்கின்ற நிலைமை உள்ளது. இதிலே அரசு கவனத்தோடு இருந்து அதைப் போக்குவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் திட்டம், கிருஷ்ணா நதி நீர் திட்டம். கிருஷ்ணா நதி நீர் திட்டத்தைப் பற்றி சொல்லும்போது உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது. நம்முடைய தமிழக அரசு அரிசியை எடுத்துக்கொண்டு போயிற்று, ஆந்திர அரசு உமியை எடுத்துக் கொண்டு வந்தது. இரண்டும் ஊதி ஊதி சாப்பிடலாம் என்கின்ற நிலையிலே, இன்றைக்கு நாம் ஏமாற்றப்பட்டு இருக்கின்றோமோ என்ற அச்சம் ஏற்படக்கூடிய நிலையிலேதான் இந்த திட்டம் இருக்கின்றது. அவர் வந்தார், தமிழக முதல்வர் அவர்களைப் பார்ப்பதற்கு பணத்திற்காக வந்தார். மீண்டும் பணம் கொடுங்கள் என்று கேட்பதற்காக வருகின்ற அந்த நேரத்தில் முதல்வர் அவர்கள் உடல்நிலை சரியில்லை, தலைவலி என்று அவரும் போய்விட்டார். இன்றைக்குப் பத்திரிகையிலே அவருடைய நீர் பாசன அமைச்சர் அவர்கள் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால், 'தமிழகத்திற்கு ஒரு சொட்டு தண்ணீர், காவிரி நதி நீர் கொடுக்கக்கூடாது' என்று அவர் அறிக்கை விடுகின்றார் என்கின்ற நிலையைத் தான் பார்க்கிறோம். நாம் என்ன கேட்கிறோம்? காவிரி நீரைப் பொறுத்தவரையில் சென்னைக்கு குடிநீருக்காக கொடுக்க நான்கு மாநிலங்களின் முதல்வர்களும் ஒப்புக்கொண்டார்கள். கர்நாடகம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. மகாராஷ்டிரம் மறுப்பு தெரிவிக்கவில்லை. சென்னைக்கு மட்டுமே குடிநீர் என்று சொன்னால் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் இடையிலே வந்தது என்னவென்று சொன்னால், ஆந்திர அரசாங்கம் மிகத் திறமையாக அதை ராயலசீமாவிலே

வறட்சி பகுதிகள் வேளாண்மைக்கு அந்த நதி நீரைப் பயன்படுத்துவோம் என்று சொல்லுகின்றபோதுதான் அவர்கள் குறுக்கே நிற்கின்றார்கள். அதற்கு நாங்கள் இடம் கொடுக்க மாட்டோம் என்று சொல்கின்றபோது, எங்கள் நாட்டிலே வருகின்ற உபரி தண்ணீரை நாங்கள் எப்படி வேண்டுமானாலும் செலவழிப்போம் என்கின்ற நிலையில், இந்த பேச்சு வார்த்தைகள் காரணமாக கிருஷ்ணா நதி நீர் நமக்கு வருமா என்பதே கேள்விக் குறியாக இன்றைக்கு ஆக்கப்பட்டிருக்கின்றது என்பதை சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

அதே போல, இன்றைக்கு சென்னை நகரத்தின் மக்கள் குடிநீருக்காக மிகவும் அவதிப்படுகின்றார்கள். அந்த சென்னை நகரத்திற்குக் குடிநீர் கொண்டு வருவதற்காகத்தான் கிருஷ்ணா நீர் இந்த நிலையிலே இருக்கிறது. அதற்கு வீராணம் ஏரிதான் என்றாலும், அந்த திட்டத்தையும் கைவிட்ட சூழ்நிலையிலே இந்த அரசாங்கம் இருக்கின்றது. நான் இன்னொரு கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சமீபத்திலே தர்மபுரிக்கு சென்ற தமிழக முதல்வர் அவர்கள் தர்மபுரியிலே குடிநீர் திட்டத்தினை தொடங்கி வைத்துவிட்டு வந்திருக்கின்றார்கள். நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கர்நாடக மாநிலம் 5 டி.எம்.சி. தண்ணீரை குடிநீருக்காக சென்னை மாநகரத்திற்காகக் கொடுக்க ஒப்புக்கொண்டார்கள். அப்படி இருக்கும்போது, ஒகேனக்கல்லிலிருந்து தர்மபுரி வழியாக வாணியம்பாடிக்கு, கிட்டத்தட்ட 120 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது. அந்த 120 கிலோ மீட்டர் தூரத்திற்கு கொண்டுவந்து வாணியம்பாடியிலே பாலாற்றிலே அந்த தண்ணீரை விட்டுவிட்டால், பாலாற்றிலே இருந்து செம்பரம்பாக்கத்திற்குக் கொண்டு வந்து, செம்பரம்பாக்கத்திலே இருந்து சென்னை மக்களுக்கு குடிநீர் கொடுப்பதற்காக அது ஒரு வாய்ப்பாக இருக்கும்.

இன்னும் கூட சொல்வேன். உயரமான இடத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருகின்றபோது—இன்றைக்கு வீராணம் திட்டத்திற்காக வாங்கிய பைப்கள் எல்லாம் வீரயமாகத் தெருவிலே கிடக்கின்றன—அவைகளைப் பயன்படுத்தலாம். மக்களுடைய வரிப்பணம்தான். இன்றைக்கு வீராணம் திட்டம் இல்லை என்கின்றபோது, மக்களுடைய வரிப்பணத்திலிருந்து வாங்கிய அந்த பைப்புகள் பாழடிக்கப்படக்கூடாது. இது போன்ற குழாய்கள் மூலமாக ஒகேனக்கல்லிலேயிருந்து வாணியம்





பாடிக்கு நீர் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், இன்னொரு பைப்-ஐக் கூட நாம் பக்கத்திலே புதைத்துக் கொண்டு வரலாம். வெள்ளம் அதிகமாக காவிரியிலே பெருக்கெடுத்துக்கொண்டு வரும்போது, தஞ்சை பகுதியில் பாழாக்கப்படுகின்ற நேரத்திலே, அந்த நீரை இன்னொரு பைப் மூலமாக கொண்டு வந்து வட ஆற்காடு மாவட்டம், செங்கற்பட்டு போன்ற பகுதிகளில் உள்ள பல நூற்றுக்கணக்கான ஏரிகளிலே அவற்றை நிரப்பி வைத்து நமக்குத் தேவைப்படும்போதெல்லாம் அதை பயன் படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இவைகளுக்குத் தேவையான மொத்த தொகையே 100 கோடி ரூபாய் தான் ஆகும். ஒரு ஆண்டுகாலத்திற்குள்ளாகவே இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டு சென்னை நகர மக்களுக்கு இருக்கின்ற குடிநீர் பிரச்சினையைப் போக்கக்கூடிய ஒரு திட்டமாக இருப்பதால், அதைப் பற்றி இந்த அரசாங்கம் ஆலோசிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அடுத்து, சிறு தொழிலுக்கு, கைத்தறிக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். முன்பெல்லாம் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் மூலம் ஷெட் கட்டுவார்கள். இப்பொழுது இந்த ஷெட் எல்லாம் கட்டப்படவில்லை.

அடுத்தாற்போல் அரிசன மக்களுக்கு என்று அரிசன வீட்டு வசதி வாரியம் விழுப்புரத்தில் இருக்கிறது. உதாரணத்திற்கு நான் ஒன்றை சொல்கிறேன். தலைமைச் செயலகம் இங்கே இருக்கிறது. அமைச்சர்களையும், செயலாளர்களையும், அதிகாரிகளையும் வெளியூரிலிருந்து வருகிற அரிசன மக்கள் பார்த்துவிட்டு அவர்கள் பிரச்சினை சம்பந்தமான தொடர் நடவடிக்கைக்காக அதிகாரிகளைப் பார்க்க வேண்டுமென்று சொன்னால் ஊரிலேயிருந்து சென்னைக்கு வந்து அமைச்சர் பெருமக்களையும், அதிகாரிகளையும் பார்த்து விட்டு மறுபடியும் அவர்கள் விழுப்புரத்திற்கு செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. இன்றைக்கு இந்த அரிசன வீட்டு வசதி வாரியத்தை விழுப்புரத்திலே கொண்டுபோய் வைத்திருக்கிறார்கள். நான் கேட்கிறேன். தமிழகத்தினுடைய தலைநகரை திருச்சிக்கு மாற்றுவதாக ஓர் ஆலோசனை முன்பு இருந்தது. அந்தத் திட்டத்தின் அடிப்

படையில் பல வாரியங்கள் எல்லாம் பல ஊர்களுக்கு மாற்ற வேண்டுமென்று திட்டமிட்டிருந்தார்கள். அதன்படி தலைநகரான சென்னையையும் மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அந்த நேரத்தில் இந்த அரிசன நலத் துறையைச் சார்ந்தவர்கள் இந்த அரிசன வீட்டு வசதி வாரியத்தை விழுப்புரத்திற்கு கொண்டு போய் வைத்திருக்கிறார்கள். நான் இங்கே கேட்க விரும்புகிறேன், மீனவர் முன்னேற்றக் கழகம் சென்னையிலே தான் இருக்கிறது. பெண்கள் முன்னேற்றக் கழகம் சென்னையிலே தான் இருக்கிறது. பிந்தங்கியோர் முன்னேற்றக் கழகம் சென்னையிலேதான் இருக்கிறது. சினிமா முன்னேற்றக் கழகம் சென்னையிலே தான் இருக்கிறது. இவைகள் எல்லாம் அரசு சார் பாக சென்னையிலே இயங்கும்போது இந்த அரிசன வீட்டு வசதி வாரியம் மட்டும் விழுப்புரத்திலே இயங்குகிறது என்றால், இதனை ஒதுக்கி வைத்திருக்கிறார்களே, அதற்கு என்ன காரணம்? அந்த வாரியம் கூட தீண்டத்தகாததாக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதா? ஆகவே, அரிசன வீட்டு வசதி கார்ப்பரேசனை உடனடியாக சென்னைக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தாற்போல் ஒன்றை சொல்வதற்காக மன்னிக்க வேண்டும். காலையில் கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாரமலை அவர்கள் ஒரு பிரச்சினையை கொண்டு வந்தார்கள். சென்னையிலே இயங்கி வருகிற ஐ.ஏ.எஸ். பயிற்சி மையம் 100 சதவிகிதம் மத்திய அரசின் மானியத்தின் மூலம் இயங்கிக் கொண்டிருக்கிறது. முன்பு அது பெங்களூரில் இயங்கி வந்தது. ஏதோ வசதியோடு இருந்ததை வசதி குறைவாக இருக்கிறது என்று சொல்லி சென்னைக்கு அது மாற்றப்பட்டிருக்கிறது. நீங்கள் திராவிட பாரம்பரியம் ஆட்சிக்கு வந்தும், இந்த பயிற்சி மையம் மாறி வந்தும் 20 ஆண்டுக் காலம ஆகிறது. இந்த 20 ஆண்டுக் காலத்திலே நிகழ்ந்ததைப் பற்றி குறிப்பிடும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரமலை அவர்கள் 'பேய் பங்களா' போல் இருக்கிறது என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன் அது 'டன்ஜென்ட்' போல் இருக்கிறது. உயர்ந்த படிப்பு படிப்பவர்கள் கூட இன்றையதினம் அங்கே தினந்தோறும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்





துறை அமைச்சர் அவர்கள் இங்கே அதுபற்றி குறிப்பிடும்போது 'ஒரு வார காலத்திற்குள்ளாக நாங்கள் எப்படியும் மாற்றுவதற்கு தயாராக இருக்கிறோம்' என்று குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே அமைச்சர் அவர்கள் செய்வார்கள், செய்ய வேண்டுமென்ற எண்ணத்திலே நான் ஒன்றை சொல்கிறேன். ஒரு வார காலத்திற்குள் அவர்கள் அதை மாற்றிவிட்டால் எல்லோரும் அவரை பாராட்டுவார்கள் என்று நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல் அரிசனங்களுக்கு வேலைவாய்ப்புகள் மற்றும் தொழில் கல்வி வாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும். கர்நாடகாவில் இன்றைக்கு மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் போன்ற தொழில் கல்வி அளிக்கக்கூடிய நிறுவனங்களை எல்லாம் ஆதி திராவிட மக்களுக்காகவும், மலைவாழ் மக்களுக்காகவும் ஏற்படுத்துகிறார்கள். நம் தமிழகத்திலேயும் பல பொறியியல் கல்லூரிகளையும், பல் தொழில் கல்வி நிறுவனங்களையும், தனிப்பட்ட மருத்துவக் கல்லூரிகளையும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுபோல ஆதி திராவிடர் பழங்குடியினருக்காக தனிப்பட்ட முறையில் அவர்களுக்கும் வேண்டுமென்று கேட்டால் அதனை கொடுக்கக்கூடிய தன்மையை இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஊக்கத்தையும், அந்த உற்சாகத்தையும் மற்றவர்களுக்கு அளிப்பதைப் போல, ஆதிதிராவிட மக்களுக்கும் நீங்கள் கொடுக்க வேண்டும்.

அடுத்து, ஆதிதிராவிடர் நலன் என்று இப்பொழுது நாம் நடத்திக்கொண்டிருக்கிறோம். முன்பெல்லாம் அது சமூக நலத் துறையிலேயே இருந்தது. இப்பொழுது கூட சமூக நலத் துறை செயலர்தான் ஆதிதிராவிடர் நலனையும் பார்த்துக்கொண்டிருக்கிறார். ஆகவே, சமூக நலத் துறையோடு அதனை இணைத்துக் கொண்டால் சரியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். மத்திய அரசிலே கூட சமூக நலத் துறை அமைச்சர்தான் இன்றைக்கு ஆதிதிராவிடர் நலனையும் பார்க்கிறார். ஆகவே, அந்த ஆலோசனையை நீங்கள் கேட்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்கள் பல ஆண்டுக் காலமாக ஆதிதிராவிட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் அமைக்கப்படவில்லை. இது உண்மையிலேயே வேதனைக்குரியது. நான் கொஞ்ச நேரத்திற்கு முன்னாலே அமைச்சரவர்கள் சொன்னதைச் சுட்டிக்காட்டினேன் பாருங்கள். ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு வாரத்திற்குள்ளே இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு உரிய அந்தக் கட்டிடத்தை மாற்றிக் காட்டுகிறேன் என்று சொன்னாரே, அதைச் சற்று முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாமைக்குக் காரணம் அவர் சென்ற ஆண்டே இதே சட்ட மன்றத்திலே ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கிறார்கள். அந்தப் பதிலிலே சொல்லுகின்றார்கள்.

பாரமலை என்கின்ற உறுப்பினர் கேட்கிறார். ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா என்று கேட்டு, ஆதிதிராவிட நலத்துறையின் கீழ் மாநில ஆதி திராவிட நல ஆலோசனைக் குழு அமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா என்று கேட்கிறார். அதற்கு அவர் பதில் சொல்கிறார், ஆம், மாநில ஆதிதிராவிட நல ஆலோசனைக் குழுவில் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களை நியமனம் செய்வதற்காகத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று. உடனே திரு. பாரமலை அவர்கள் கேட்கிறார்கள், இந்த ஆலோசனைக் குழு மூன்று அல்லது நான்கு மாதத்திற்கு ஒரு தடவை கூடி இன்றைக்கு ஆதிதிராவிட நலத்துறை அமல்படுத்துகிற திட்டங்களெல்லாம் இந்த ஆலோசனைக் குழுவினால் அரசுக்கு அனுப்பப்பட்டது என்பதை அரசுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்; இந்தக் குழுவில் ஆதிதிராவிட நலத் துறை மட்டுமல்லாது பல்வேறு துறையின் தலைவர்கள் இருக்கின்ற காரணத்தால் பல்வேறு துறையின் மூலமாக இந்தத் துறையில் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்களைக் கண்காணிக்கின்ற குழுவாக இருக்கிறது, கடந்த ஐந்தாண்டுகளாக இக்குழு செயல்படவில்லை என்பதை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்; விரைவாக நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். நடப்பு சட்டமன்றக் கூட்டத்தின் முடிவிற்குள்ளேயாவது அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன் என்றார். அமைச்சர் சொல்கிறார், இந்த மாதிரி அளவில் அமைப்பதற்கான இக்கொள்கை மாவட்ட ஆட்சியரிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரியிடமும் உறுப்பினர்களைச்





சேர்ப்பதற்காகக் கேட்கப்பட்டிருக்கிறது, கிட்டத்தட்ட ஐம்பது பேர் கொண்ட மாநிலக் குழு அளவிலே அமைக்கப்பட இருக்கின்றது, அது கூடிய சீக்கிரமே அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று சொல்கிறார். அதற்குப்பிறகு தொடர்ந்து கேட்கின்ற கேள்வியிலே அவர் சொல்கின்றார், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடருக்குள்ளேயே இந்தக் குழுக்கள் அமைக்கப்படும் என்று.

இதையேதான் முன்னாலிருந்த ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் விஜயசாரதி அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். அவர் போனால், அவர் குறிப்பிட்ட அந்த உறுதிமொழியும் அவரோடு போயிற்று. பிறகு அருணாசலம் அவர்கள் வந்திருக்கிறார்கள். இவர்கள் குறிப்பிட்ட உறுதிமொழி இன்றைக்கு எங்களுக்கு பைபிள் போல கையிலே வந்திருக்கிறது. அதுவும் அதில் அவர்கள் கொடுத்த வாக்குறுதி அவர்களாலே நிறைவேற்ற முடியவில்லை என்பதை மிக வருத்தத்தோடு நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மருத்துவத்தைப்பற்றி எடுத்துக்கொண்டால், பட்ட மேற்படிப்புத் தேர்வில் ஒழுங்கீனங்கள் களையப்பட வேண்டும். இன்டர்னல் அசெஸ்மெண்ட் முறை ஒழுங்கீனங்களைத் தோற்றுவிக்கின்ற காரணத்தினால் அது தவிர்க்கப்பட வேண்டும். தகுந்த பேராசிரியர் குழு மூலமாக மாணவர்களின் தேர்வு முறை நடைபெறவேண்டும்.

நன்றாக இயங்கக்கூடிய தனியார் மருத்துவமனைகளுக்கு அரசு ஆதரவு அளிக்க வேண்டும். ஆதரவு பெற்ற தனியார் மருத்துவமனைகளில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

கௌரவ மருத்துவர்கள் குழு அரசு மருத்துவமனைகளில் கடந்த பத்தாண்டுகளுக்கு மேல் தேர்வு செய்யப்படாத நிலையிருக்கிறது. திறமை உள்ளவர்களை ஒரு தேர்வுக் கமிட்டி மூலமாகத் தேர்ந்தெடுத்தல் நாட்டுக்கு நலம். அதையும் அரசியல் கண்ணோட்டத்துடன் நடத்தக்கூடாது. அரசியல் சூழ்நிலைகளில் நியமிக்கப்படும் கௌரவ மருத்துவர்கள் மருத்துவமனைகளைச் சுரண்டும் நிலை உள்ளது. அதை நிச்சயமாக நீங்கள் காப்பாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி டி. யசோதா] [1987 மார்ச் 31

கௌரவ மருத்துவர்கள் நமக்குத் தேவைதானா, தேவை யில்லையா என்கின்ற ஒரு கேள்விக்கூட இன்றைக்கு வந்து கொண்டிருக்கிறது. அதையும் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அதைப்போல மூன்றாவது 'பே கமிஷன்' பரிந்துரைகளை மருத்துவர்களுக்கு நிறைவேற்றித்தர அரசு முன்வர வேண்டும். மருத்துவமனைகளில் சகல வசதிகளும் இருக்க, நவீன மருத்துவக் கருவிகள் வைக்கப்பட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும்போது சொன்னார்கள். முழுமையாக உடலைப் பரிசோதிக்க 'ஸ்கேனர்' என்ற கருவி மதுரையில் இருக்கிறது; அது சென்னைக்கு வந்தபிறகுதான் மற்ற மாவட்டங்களில் வைக்கப்படும் என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவசியமான பொருள்களை உடனடியாக வாங்குகின்ற சூழ்நிலையை அரசாங்கம் மேற் கொள்ள வேண்டும். நான் இப்படிச் சொல்லும்போது, நம் முடைய நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்வார்கள், "நாவலர் கொடுத்தால் நானா வாங்கமாட்டேன்" என்று.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவரவர் களே, இது நாவலர் கொடுத்து நான் வாங்குவது அல்ல. மத்திய அரசு கொடுத்து நாம் வாங்க வேண்டும். மத்திய அரசிடம் சமீபத்தில் கூட கேட்டேன். பார்க்கலாம் என்று சொல்லியிருக்கி றார்கள். இந்த 'ஸ்கேனர்' கருவி ஜப்பானிலிருந்து வரவேண்டும். அந்நிய நாட்டுப் பணத்தை மத்திய அரசு கொடுக்க வேண்டும். அதைக் கொடுப்பது நாவலர் அல்ல.

**திருமதி டி. யசோதா:** துணைத் தலைவரவர்களே, அந்நியச் செலாவணி இதிலே குறுக்கிடுகிறது என்றால், இது உயிர்ப் பிரச்சினை என்பதால் நாம் சொல்ல வேண்டிய இடத்திலே சொல்ல வேண்டிய முறையிலே எடுத்துச்சொல்லி, அதைப் பெறு வதற்கு ஏற்ற சாத்தியக் கூறுகளை நீங்கள் தோற்றுவிக்க வேண்டும்; மேலும் இந்த அரசு தன்னுடைய கடமையை, பொறுப்பை அதன்மூலம் நிரூபிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 மார்ச் 31] [திருமதி டி. யசோதா]

மேலும் இந்த ஒவ்வொரு ஆண்டும் ஒரு புதியத் திட்டத்தை அறிவிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் ஆண்டுக்கு ஒரு திட்டத்தை அறிவித்துக் கொண்டிருக்கிறது. சத்துணவு என்றீர் கள். நாங்கள் அதை பெரும் தலைவர் காமராஜர் கொண்டு வந்தார் என்றோம். இல்லை, இல்லை. அதை தியாகராஜர் கொண்டுவந்தார் என்றீர்கள். எப்படியோ இருக்கட்டும்; குழந்தைகள் நல்ல சாப்பாடு பெற வேண்டும் என்று சொன் னோம். ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு செயல்படவில்லை. அது ஒரு நல்ல திட்டமாக இருந்தாலும் பலன் பெறக்கூடிய முறையைப் பார்த்தால் 'பாதிக்கு பலன், மீதிக்கு தவறு' என்று தான் இருக்கிறது. அந்தத் தவறு நடக்காமல் செப்பனிடப்பட் டாலே, அதிகமான தொகையை விழுங்கிக்கொண்டிருக்கிற சத்துணவுத் திட்டம் ஒரு சரியான வரம்புக்குள்ளே வந்து, அந்தத் தொகை கட்டுப்பாட்டுக்குள் அடங்கிவிடும், நல்ல பலன் ஏற்படும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, செருப்பு என்றீர்கள், ஏற்றுக்கொண்டோம். பல் பொடி என்றீர்கள், சரி என்றோம். இப்போது செருப்பு என்கிறீர் கள், வரவேற்கிறோம்; குறை சொல்லவில்லை. சாப்பாடு கொடுக்கிறீர்கள். பல்பொடி கொடுக்கிறீர்கள்; செருப்பு கொடுக் கிறீர்கள். அத்தனையையும் குறைசொல்லவில்லை, வரவேற் கிறோம். ஆனால் தனி மனிதனுடைய உழைப்பை, வருமானத்தை வெளியே கொண்டுவருவதற்கு என்ன திட்டத்தை தீட்டியிருக்கிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

தனி ஒரு மனிதன் தன் சொந்த உழைப்பாலே சுய மரியாதை யைக் காப்பாற்றிக்கொண்டு, தான் சம்பாதிக்கிற பணத்தை தன் குழந்தைகள் நல்வாழ்வு வாழ செலவிடுகின்ற சூழ்நிலையைத் தோற்றுவிக்க இந்தப் பட்ஜெட்டிலே என்ன திட்டத்தை அறிவித் திருக்கிறீர்கள் என்று பார்க்கும்போது உண்மையிலேயே வேதனை யாக இருக்கிறது. இந்த மனித வளத்தை வெளியே கொண்டு வரத்தான் மத்தியிலே ஒரு அமைச்சரவை இருக்கிறது; அதற்கு மாண்புமிகு திரு. நரசிம்மராவ் அவர்கள் அமைச்சராக இருக் கிறார்கள். ஆனால் நம்முடைய தமிழ்நாட்டிலே எல்லாம் கொடுக்கிற காரணத்தால் எங்கே தமிழ்நாட்டு மக்கள் சோம்பேறி களாக மாறிவிடுவார்களோ என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே, தானம் கொடுக்க வேண்டாமென்று சொல்லவில்லை; அந்தத்

தானத்தின் அடிப்படையிலே மனிதனுடைய உழைப்பைப் பெருக்கி, வளத்தைப் பெருக்கி, அவனுடைய திறமையை வெளிக் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாலிக்குத் தங்கம் உண்டா என்பதை இன்றைக்கு இங்கே ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை உணர்த்தும். அடுத்தபடியாக இருப்பது முதியோர் உதவித் தொகை. எந்த எந்த தாலுகாவில் எவ்வளவு முதியோர், உடல் ஊனமுற்றோர், விதவைகள் என்ற விவரம், கணக்கு இங்கே கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கெல்லாம் உதவித் தொகை வழங்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அங்கே தாசில்தாரைக் கேட்டால் இருக்கிற அளவு இவ்வளவுதான்: அதற்குள்தான் கொடுக்க முடியும்; மேலும் ஒருவருக்குக் கொடுக்க வேண்டுமென்றால் இப்போது உதவி பெறுகின்ற ஒருவர் செத்தால்தான் அந்த இடத்தில், உதவித் தொகை பெறுவோர் பட்டியலில் அவரைச் சேர்க்க முடியும் என்று சொல்லுகிறார்கள். இப்படி, நீங்கள் சொல்வதற்கும், உங்களுடைய செயலுக்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. முதியோர் என்று சொல்வது ஒரு சரியான வரையறைக்குள் அடங்கக்கூடியதா? வருடத்திற்கு இத்தனை முதியோர்தான் என்று இருக்க முடியுமா? ஆண்டுக்காண்டு முதியோர் எண்ணிக்கை அதிகரிக்கத்தான் செய்யும், அதிகரிக்கிறார்கள். அதற்கு ஏற்ப நிதி ஒதுக்கி, உதவி செய்ய வேண்டாமா என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன்.

செருப்பு கொடுக்கிறீர்கள்; பாராட்டுகிறோம். ஆனால் பள்ளிக்கூட குழந்தைகளுக்கு இன்றைக்கு புத்தகங்கள் கொடுக்கிறீர்கள்; நோட்டுப் புத்தகங்கள் கொடுக்கவில்லை. பேனா, பென்சில் போன்ற எழுதுபொருள்கள் கொடுக்கவில்லை. வரைபடத்திற்குத் தேவையான ஜாமட்ரி போன்ற உபகரணங்கள் கொடுக்கவில்லை. அவற்றை எல்லாம் சேர்த்து கொடுத்தால் ஏழை எளிய மாணவர்கள் பாராட்டுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த திட்டத்தின் அடிப்படையில் இலவச சத்துணவு பெறுகிற அனைத்து குழந்தைகளுக்கு இலவசமாக பாடப்புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன. நோட்புக்கைப் பொறுத்தவரையில் கூட அவை மிகக் குறைந்த விலையில் மலிவு விலையில், அச்சடிக்கப்பட்டு தரப்படுகின்றன.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறைந்த விலையில் கொடுப்பதைத்தான் இலவசமாகக் கொடுக்கச் சொல்கிறேன். அதேபோன்று பேனா, பென்சில், ஜாமெட்ரி பாக்ஸ் போன்ற கல்விக்கு வேண்டிய உபகரணங்கள் அத்தனையையும் இலவசமாகக் கொடுக்கிறபோது நிச்சயமாக நல்ல பலன் கிடைக்கும் என்ற காரணத்தால் இதை நான் உங்களுக்கு ஆலோசனையாக முன்வைக்க விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திழுப்பது 30 இலட்சம் வீடுகள் என்பதுதான். இதற்குத் தேவையான பிற நிதிகளைத் திரட்டும் பொருட்டு வட்டார அளவிலே தனித்து இயங்கக்கூடிய நிலையில் செங்கல், ஓடு முதலிய கட்டுமானப் பொருட்களை உற்பத்தி செய்ய உற்பத்திச் சங்கம் அமைக்கும் திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். இந்தச் சங்கத்திற்கு மாநில அரசு ஒதுக்கும் நிதி, கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் கீழே வீட்டு வசதிக்காக ஒதுக்கப்படும் நிதி ஆகிய இந்த நிதிகளை அடிப்படை மூலதனமாக வழங்கும், அந்த மூலதனத்தைக் கொண்டு அவை கடன் வாங்கவும் முடியும். ரூபாய் 250 கோடி முதல் 300 கோடி வரை ஆண்டு ஒன்றுக்கு இந்த அணுகு முறையினால் நிதி பெற முடியும் என்று நம்பிக்கை தெரிவித்து இருக்கிறீர்கள். ஏற்கெனவே இங்குள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் என்பதே இல்லாமல் தனி அதிகாரிகளைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் புதிய சங்கங்களிடம் பொறுப்பினை ஒப்படைப்பதில் மிகுந்த எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் இருக்கவேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். வீட்டுவசதிப் பிரச்சினை என்பது உயிர்ப் பிரச்சினையாக உள்ளது. குடிசைப்பகுதி மாற்று வாரியமும் சரி, ஆதிதிராவிட வீட்டுவசதி வாரியமும் சரி, ஆண்டு

தோறும் வீடுகளைக் கட்டுகின்றன என்று சொல்கிறார்கள். ஆனாலும் வீட்டுப் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. நடைபாதைக் குடியிருப்புகள் நாளுக்குநாள் பெருகிக்கொண்டு இருக்கின்றன. நான் கூட சிபாரிசு செய்து வரதராஜபுரம் பகுதிக்கு வீட்டுவசதி செய்து தரும்படி முதல்வர் அவர்களுக்கு மனுச் செய்தேன். அந்த மனுவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் தலைவருக்கு அனுப்பி 3 ஆண்டுகள் ஆகின்றன. நடவடிக்கை என்ன என்பதே கேள்விக்குரியதாக இருக்கிறது.

ஆதிதிராவிடர் வீட்டுவசதியின் நிலை இது என்றால் பின் தங்கிய மக்களின் நிலை எப்படி இருக்கும் என்பதைப்பற்றி நான் சொல்லவில்லை, எங்களுடைய கட்சியின் உறுப்பினர்கள் பேசுகிற போது அதைச் சுட்டிக்காட்டினார்கள். ஆகவே ஆதிதிராவிட மக்களும் முழுமையான பலனைப் பெறவில்லை. பின்தங்கிய மக்களும் இந்த வீட்டுப் பிரச்சினையில் பலன் பெறவில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்டும்போது வேதனையாக இருக்கிறது. எனவே வீடு கட்டிக் கொடுப்பது என்பது எட்டளவில் இல்லாமல் செயல் அளவில் மிக வேகமாக நடக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நீங்கள் செங்கல்லுக்கும், மற்றும் கட்டுமானப் பொருட்களுக்கும் வரி விதித்து இருக்கிறீர்கள். எங்களுடைய பாரதப் பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் உள்ள 14-வது அம்சத்தில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"Development of low-cost building materials"

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்றி அதற்காகப் பாராட்டு பெறுகிறீர்கள் மத்திய அரசிடமிருந்து இதுகாறும். இப்போது புதிய 20 அம்சத் திட்டத்தினுடைய 14-வது அம்சமாக இருப்பது வீடு கட்டுகிற சாமான்களுடைய விலையைக் குறைக்க வேண்டும் என்பது. அதுவும் ஒரு அம்சமாக இருக்கிறது. அதை நீங்கள் இன்றைக்கு மறந்துவிட்டு இவ்வாறு வரி விதித்திருப்பது வேதனைக்குரியதாக இருக்கிறது.

கட்டடத் தொழிலாளர்களும் இன்றைக்கு இதைப்பற்றி தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். கட்டடத் தொழில் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு காரணத்தால் நசிந்து வருகிறது. இயற்கை சீற்றத்தால் மழை பெய்து செங்கல்





உற்பத்தி மிகவும் பாதிக்கப்படுகிறபோது செங்கல் கிடைக்காமல் அதன்விலை அதிகரிக்கிறது. அதேபோல் சில ஆண்டுகளில் மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகிறபோது சிமெண்ட் கிடைக்காமல் இந்தத் தொழில் பாதிக்கப்படுகிறது. இப்படி பாதுகாப்பற்ற, நிரந்தரமற்ற தொழிலில் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். எனவே கட்டடப் பொருட்களுக்கு மிகுந்த வரி ஏற்றம் செய்திருப்பது இந்தத் தொழிலையும், தொழிலாளர்களையும் மிகப் பெரிய அளவில் பாதிக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை என்பதை இந்த மன்றத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒரு வீட்டைக் கட்டி முடிப்பதை விட 10 கல்யாணங்களை நடத்தி முடிப்பது சுலபம் என்பது பழமொழி. இந்தப் பழமொழி வழக்கத்தில் உள்ள இந்த நேரத்தில் இந்தப் பழமொழியை உறுதி செய்யும் விதத்தில் வரியை விதித்து சாதாரண மக்கள் வீடுகட்ட முடியாத நிலையை உருவாக்குவதில் இந்த அரசு முனைந்திருப்பது வருத்தப்பட வேண்டியதாகும். இந்த வரிவிதிப்பை மறுபரிசீலனை செய்யவேண்டும்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்."

என்றார் வள்ளுவப் பெருந்தகை.

[முற்பகல் 11.50]

இப்போது வயிற்றுக்கு உணவு இல்லாமலேயே பல பேருக்கு பலவிதமான நோய்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு மருந்து அவசியம் ஆகிறது. அப்படி மருந்துகள் தேவைப்படுகிற சமயத்தில் ஒவ்வொரு முனையிலும் வரி என்றால் மருந்து தயாரிப்பாளர்கள் மருந்தின் தரத்தைக் குறைத்து விடக் கூடும். எத்தனையோ மருந்துகள் விலை கட்டுப்படி ஆகாததினால் கலர் மாறி இருக்கிறது. நோவால்ஜின், அனால்ஜின் ஆன மாதிரி, நிறைய பெயர்களும் மாறி இருக்கின்றன. இந்த வரி விதிப்புகளினால் விலை கட்டுப்படியாகாமல் மருந்தின் தரம் குறைந்து பொது மக்கள் பாதிக்கப்படாது பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திருமதி டி. யசோதா] [1987 மார்ச் 31

கடந்த ஆண்டு 41 வகையான மருந்துகளின் மீது இருந்த 8 சதவீதம் வரியை 4 சதவீதமாக குறைத்த அரசு, இப்போதும் அதே நல்லெண்ணத்தின் அடிப்படையில் சாதாரண பொது மக்களும், நுகர்வோர்களும், தொழில் முனைவர்களும் எல்லோருக்கும் உதவும் வகையில் இந்த வரி விதிப்பை மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குறிப்பாக ஏழைகளுக்கு கிடைப்பது கருப்பு காப்பி தான். அதுவே சில பேருக்கு பசி போக்கும் உணவு ஆகக் கூட இருக்கிறது. அப்படிப்பட்ட காப்பிக்கு தேவைப்படும் வெல்லத்தை கடந்த ஆண்டு 5 சதவீதம் பலமுனை வரியாக இருந்ததை 8 சதவீதம் ஒரு முனை வரியாக மாற்றினீர்கள். இப்போது அந்த 8 சதவீதம் வரியை வாங்கும் முனையிலும், விற்பனை முனையிலும் ஆக இரு முனைகளில் வாங்க முடிவு செய்திருப்பதால் வெல்லத்தினால் தயாரிக்கப்படும் பொருள்கள் அனைத்தும் விலை கூடுதலாகி பொதுமக்கள் பெரிதும் அவதிப்படுவார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இவ்விதம் செங்கலுக்கு வரி, ஓட்டுக்கு வரி, மரத்துக்கு வரி, ஆஸ்பெஸ்டாஸ் வீட்டுக்கு வரி, மருந்துக்கும் வரி, வெல்லத்துக்கும் வரி, ஓட்டல் மற்றும் சிற்றுண்டி சாலைகளில் விற்கப்படும் பண்டங்களுக்கும், பானங்களுக்கும் வரி, விற்பனை வரி மீது ஒரு கூடுதல் உபரி வரி. இது போதாது என்று சரக்குகளை வாடகைக்கு ஏற்றி செல்லும் வாகனங்களுக்கும் கூடுதல் வரி. அத்தோடு பயணிகள் செல்லும் பேருந்துகளுக்கும் கூடுதல் வரி. இது எப்படி இருக்கிறது என்று சொன்னால், 'சொத்தை கால் பணம் சுமை கூலி முக்கால் பணம்' என்ற பழமொழிக்கு ஏற்ப உள்ளது. பொருள்களின் மீது வரி விதித்திருப்பதனால் ஒரு பக்கம் விலை உயர்வதோடு, டிரான்ஸ்போர்ட் சார்ஜ் கூடுவதினால் இன்னொரு பக்கம் விலை அதிகரிக்கும். ஆகவே கேளிக்கை வரியை குறைத்திட வேண்டி வந்த கோரிக்கையை ஏற்று குறைத்தது போல இத்தகைய கோரிக்கைகளையும் பொது மக்களின் நலன் கருதி ஏற்று பரிசீலிக்க வேண்டுகிறேன். மீனவர்களுக்கு என்று வீடுகள் கட்டுவது ஏனோ நிறுத்தப்பட்டிருக்கிறது. சென்னை மீன்பிடி...



1987 மார்ச் 31]

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு ஒன்றை கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள், வீட்டுப் பொருள்களுக்கு விலை ஏறியதால் ஏழைகள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள் என்ற பொருள்பட சொன்னார்கள். வீடு கட்டுமானப் பொருள்களில் சிமெண்ட், இரும்பு, டிரான்ஸ்போர்ட்டில் டீசல், பெட்ரோல் போன்றவைகளுக்கு எல்லாம் மத்திய சர்க்கார் 30 சதவீதம் ஆண்டுக்காண்டு ஏற்றி வருவதினாலேயே வீடு கட்டுகின்ற பணி பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதையும் அவர்கள் அறிவார்களா? அதைத் தடுப்பதற்கு அவர் சார்ந்திருக்கின்ற கட்சியின் மூலம் ஏதாவது முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார்தான் டீசல், பெட்ரோல் போன்ற பொருள்களுக்கு வரி விதிப்பதாகச் சொல்லுகிறார்கள். டீசலும் பெட்ரோலும் இங்கே நம்முடைய நாட்டிலே தயாரிக்கப் படுவதில்லை. உற்பத்தியாவதில்லை. நாம் அன்னியச் செலாவணி கொடுத்துத் தான் அயல் நாடுகளிலிருந்து பெறக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. நாம் அதில் தன்னிறைவு பெறக் கூடிய காலத்தில் நிச்சயமாக மத்திய அரசாங்கம் இதுபோன்ற நிலைமையை உருவாக்காது என்று கூற விரும்புகிறேன். (குறுக்கீடு). சிமெண்ட், இரும்பு என்று சொல்லுகிறார்கள். நிச்சயமாக நான் சொல்வேன். சிமெண்ட் இரும்புக்கு அவர்கள் போட்ட வரி ஒரு பக்கம் என்றால் அதைப் பார்த்து நீங்களும் அதன் மீது போட வேண்டுமா? உங்கள் எண்ணங்கள் வேறு திசையில் செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். வரி போடாமலேயே ஒரு அரசாங்கம் நடக்க வேண்டும் என்ற அளவுக்கு நான் பேசுவதற்கு தயாராக இல்லை. வரியை நீங்கள் எங்கே போட வேண்டுமோ அங்கே போட வேண்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** அவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு சின்ன விளக்கம். மத்திய அரசு வரி போட்டால் தவறு இல்லை. மாநில அரசு வரி போட்டால் தவறு என்று உறுப்பினர் குறிப்பிடுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 31

**திருமதி டி. யசோதா:** வரி போடாமல் அரசாங்கம் நடத்த முடியாது என்பதிலே நான் மிக அழுத்தம் திருத்தமாக இருக்கிறேன். நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால் நீங்கள் வரி போடுவதை இந்த வகைகளிலே விட்டு விட்டு, வேறு வகையிலே வரி போட வேண்டும். அதாவது ஒரு காலக் கட்டத்தில் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் கூட சொன்னார்கள், பிரதமராக இருக்கிறபோது. எங்கே தட்டினால் எங்கே எது கிடைக்கும் என்பது எனக்குத் தெரியும் என்று சொன்னார்கள். தட்ட வேண்டிய இடத்தில் நிச்சயமாகத் தட்டுவேன் என்று சொன்னார்கள். அதுபோன்ற சூழ்நிலையில் இன்றைக்கு பாரதத்தினுடைய பிரதமர் அவர்கள் எங்கெங்கே எப்படி எப்படி தட்டி மறைந்து கிடக்கிற பொருட்களை வெளியே கொண்டு வருகிறார்களோ, அதுபோன்ற முறையில் நீங்கள் கூட தட்ட வேண்டிய இடத்திலே தட்டி கொண்டு வர வேண்டிய நிதியைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் அம்மையார் அவர்கள் சொல்லியே தீர வேண்டுமென்று வற்புறுத்தவில்லை. ஏதாவது, எங்காவது தட்டுவதற்கு வழியிருக்கிறது என்று சொல்வார்களானால், நான் தட்ட தயாராக இருக்கிறேன். இந்த ஆண்டு தட்டாவிட்டாலும், அடுத்த ஆண்டில் தட்டுவதற்கு ஆயத்தமாக இருக்கிறேன். எங்கெங்கே வரி போடலாம் என்று ஒரு வழியையாவது கொடுப்பார்களானால் எனக்கு வசதியாக இருக்கும்.

**திருமதி டி. யசோதா:** துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதை நீங்கள் தவறாக எடுத்துக்கொள்ளவில்லையென்றால், நீங்கள் கேட்டதற்காகச் சொல்கிறேன், ஒரே ஒரு உதாரணம், வேறு எதுவுமில்லை. தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான ஆம்னி பஸ்கள் போய்க் கொண்டிருக்கின்றனவே, அவைகளுடைய வருமானம் எங்கே போகிறது? யாருக்குப் போகிறது? இதை ஏன் நீங்கள் தடுத்து நிறுத்தவில்லை? அதன் மூலமாக வருகிற வருமானம் இந்த அரசாங்கத்தின் மூலமாக ஏழை மக்களுக்கு வாராதா? இதை எத்தனை முறை இந்தச் சட்டமன்றத்திலே நான் சொல்லியிருக்கிறேன்? இரவு ஆறு மணி, ஏழு மணி ஆனால் போதும் பெரியமேடு ஏரியாவிலும், எக்மோர் ஸ்டேஷனிலிருந்து



1987 மார்ச் 31] [திருமதி டி. யசோதா]

கமிஷனர் ஆபீஸ் வரையிலும் இருக்கிற அந்த ஏரியாவிலும் கிட்டத்தட்ட 300, 400 பஸ்கள் இருக்கின்றன. மாம்பலம், கோடம்பாக்கம் ஏரியாவிற்குப் போனால் அங்கே அதற்கு மேலே இருக்கின்றன. இப்படி அதிகமாக இருக்கிற இந்த ஆம்னி பஸ்களைப் பிடித்தாலே உங்களுக்கு எக்கச்சக்கமான பணம் வரும். இது ஒரு உதாரணம். இதற்கு மேலே நான் சொல்வது சரியாக இருக்காது. இதுபோதும்.

அடுத்து, மீனவர்களுக்கு புதியதாக வீடுகளைக் கட்டுவது ஏனோ நிறுத்தப்பட்டிருக்கிறது. சென்னை மீன்பிடித் துறைமுகம் இராயபுரத்தில் 12 ஆண்டுகளாக துவங்கப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. அது எப்போது முடிவுறும் என்று தெரியவில்லை. இந்தப் பகுதியிலே நல்ல மீன்களைக் கருவாடாகக் காய வைப்பதை கசார் காய வைத்தல் என்று சொல்வார்கள். இந்தத் தொழிலை 200 பெண்கள் அந்தப் பகுதியிலே செய்துகொண்டிருக்கிறார்கள். போர்ட் ட்ரஸ்ட் நிறுவனம் அங்கே கசார் காய வைக்கக்கூடாது என்று தடுத்து நிறுத்திவிட்டது. நம்முடைய அரசாங்கம் மாற்று யோசனையாக அந்தப் பெண்களுக்கு தொழிலுக்கு என்ன கூறவிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தக் கசார் என்பது விவசாய உரங்களுக்குப் பயன்படுகிறது. இது கோழித் தீவனத்திற்குக் கூடப் பயன்படுகிறது. ஆனாலும்கூட இன்றைக்கு அதைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் இன்றைக்கு இப்படி வந்திருக்கிறது. கிட்டத்தட்ட 200 பெண்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதையும் கருணை உணர்வோடு அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மீனவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டு மரங்கள், இயந்திரப் படகுகள் இப்போது வழங்கப்படுவது இல்லை. இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கிற உறுப்பினர்களுக்கு நீங்கள் அடையாள கார்டுகளைக் கொடுத்திருக்கிறீர்கள். இது பல நாட்களுக்கு முன்னாலே கொடுத்த கார்டுகள் என்று நினைக்கிறேன். கடலில், ஆற்றில், ஏரியில் யார் மீன் பிடிக்க கால் வைத்தாலும் அவனுக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் அந்த கார்டைக் கொடுத்தால்தான், அவனுக்கு விபத்து எதுவும் ஏற்பட்டுவிட்டால், அவனுடைய குடும்பம் அந்தக் கார்டை வைத்து உதவி பெறுகிற வாய்ப்பு ஏற்படும் என்று கூற விரும்புகிறேன்.

[திருமதி டி. யசோதா] [1987 மார்ச் 31

அதைப்போல ஜெட்டீஸ் என்னும் இயந்திர மீன்பிடிப் படகுகள் கட்டும் நிலையங்கள் தஞ்சை மாவட்டத்திலே உள்ள மல்லிப்பட்டினம், சேதுபாவா சத்திரம், கோடியக்கரை போன்ற பகுதிகளில் கட்டப்பட்டன. ஆனால் படகு கட்ட வசதியாக இல்லையென்றும், போதுமான ஆழமும், நீளமும், அகலமும் இல்லையென்றும், அதனைச் சீர்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் மீனவர்கள் பல முறை கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். அது குறித்து அரசு இதுவரையிலும் கவனிக்காதது வேதனைக்குரியதாகும். மீனவ நண்பனாக நடித்து, மீனவர்களுடைய இதயங்களைக் கவர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீனவர்களுடைய இந்தக் குறைபாடுகளை அகற்றி அவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்குக் கொள்கை என்பது காங்கிரஸ் கட்சியினுடைய உயிர் மூச்சான கொள்கை தான். இதிலே எந்தவிதமான மாற்றமும் கிடையாது. அரசின் கொள்கை என்று வருகிறபோது அந்த மதுவிலக்குக் கொள்கை என்பது மாநிலங்களுடைய விருப்பத்திற்கு விடப்பட்டிருக்கிறது. ஆகவே காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையின்படி தமிழக அரசு மதுவிலக்குக் கொள்கையை முழு அளவில் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே சமயம் கள், சாராயத்தை எடுத்து விட்டு உயர்ரக மதுவை மட்டும் அனுமதித்து இருக்கிறீர்களே, இது ஏழைகளைப் பாதிக்காதா என்று கேட்க விரும்புகிறேன். மறந்து போன குடிப் பழக்கத்தை நினைவிற்குக் கொண்டு வந்து புதியவர்களுக்கும் குடிப் பழக்கத்தை உருவாக்கி குடியர்களாக்கி விட்டீர்கள். அதுவும் எப்படி? ஏழை எளியவர்களின் கண்ணீரைத் துடைக்கிறேன் என்றும், தாய்மார்களின் வேதனையைப் போக்குகிறேன் என்றும் சொல்லி, கள்ளையும், சாராயத்தையும் கொண்டு வந்த நீங்கள் இப்போது பணம் படைத்தவர்களுக்கு வசதியையும், பணம் இல்லாத ஏழைகளுக்கு வசதியின்மையையும் ஏற்படுத்தியதன் விளைவால், கள்ளச் சாராயச் சாவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. மதுவிலக்கு என்றால் பூரண மதுவிலக்காக இருக்க வேண்டும். ஒருதலைப் பட்சமாக இருக்கக்கூடாது என்பதை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.



1987 மார்ச் 31] [திருமதி டி. யசோதா]

(நண்பகல் 12-00)

பெரும்பாலான மக்கள் சுயமாக வேலை செய்து பிழைக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர், கட்டை வண்டிகளில் காய்கறியையும் ஏற்றிச் சென்று, தெருத்தெருவாக அவைகளை விற்றுப் பிழைக்கிறார்கள். தள்ளு வண்டிகளில் சிற்றுண்டிகளை வைத்து, தெரு ஓரங்களில் விற்று, வயிறு பிழைப்பவர்கள் என்று இப்படி ஏராளமானவர்கள் இன்றைக்கு நாட்டிலே நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது காவல் துறை தங்களுடைய கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. (குறுக்கீடு).

**திரு. த. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்களிடம் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். தாய்க் குலத்தைக் காப்பாற்றுகிறேன் என்று சொல்லி, கள்ளையும், சாராயத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்தியா முழுக்க மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்த, காங்கிரஸ் இயக்கம், காங்கிரஸ் கட்சி முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1937 ஆம் ஆண்டு தமிழகத்திலேதான் ராஜாஜி அவர்கள் அமைச்சராக இருந்தபோது, மதுவிலக்கை அமல்படுத்தினார்கள். 1946-லேயிருந்து 1967 வரையிலும் காங்கிரஸ் சுதந்திரம் பெறுவதற்கு முன்பாகவே—இந்த மதுவிலக்கை இங்கே அமல்படுத்திக் கொண்டு வந்தோம். இது ஒரு மாநிலப் பிரச்சனையாக இருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால் காங்கிரஸ் கட்சியினுடைய, எங்களுடைய கொள்கை, மதுவிலக்கு தான். பூரண மதுவிலக்குதான். அரசாங்கத்திலே அமர்கிறவர்கள்—அது மாநிலப் பிரச்சனையாக இருக்கிற காரணத்தால்—அதை அவர்கள் செய்கிறார்கள் என்பதை நாங்கள் மறுக்கவும் இல்லை. ஆனால் அதே நோக்கிலே அங்கே செய்கிறார்கள் என்ற காரணத்திற்காக, இங்கே அது தேவையில்லை என்று சொல்வதற்கும் நாங்கள் தயாராக இல்லை. எனவே ஏற்கனவே அப்படிப்பட்ட பாரம்பரியம் இருக்கிறது. நான் இன்னும் கூடச் சொல்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, இந்தக் கொள்கையிலே உங்களுக்கு நம்பிக்கையில்லை என்றால்

[திருமதி டி. யசோதா] [1987 மார்ச் 31

பரவாயில்லை. பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு இந்த மதுவிலக்குக் கொள்கையிலே முழுக்க முழுக்க நம்பிக்கை இருந்தது. அதன் காரணமாகத்தான் அவர்கள் உயிரோடு இருக்கின்ற வரையிலும் அதை ரத்து செய்யவே இல்லை. அதைப் போல இன்றைய தமிழக முதல்வர் அவர்களுக்கும் இந்த மதுவிலக்கிலே முழுக்க முழுக்க நம்பிக்கை இருக்கிறது. இப்படிப் பட்ட நம்பிக்கையைக் கொண்டிருக்கிற காரணத்தினாலேதான் உங்களைக் கேட்கிறேனே தவிர, அந்தக் கொள்கையிலே நம்பிக்கையில்லாதவர்கள் இங்கே வந்து அமர்வார்களேயானால், அவர்களிடத்தில் போய்க் கேட்பதற்கு நாங்கள் தயாராகவும் இல்லை.

இன்றைக்குத் தள்ளு வண்டிகளில் சிற்றுண்டிகளை வைத்து, தெரு ஓரங்களில் விற்று வயிறு பிழைப்பவர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் போலீசார் பிடித்துக் கொண்டு போய்த் துன்புறுத்துகிறார்கள். அந்த வியாபாரிகளுக்கு ஒரு நாளைக்கு, காய்கறி விற்று, பழம் விற்று உணவுப் பண்டங்களை வைத்து விற்றுக் கிடைப்பது 10 ரூபாய் அல்லது 20 ரூபாய்தான். அதற்கு மேலே போகாது. ஆனால் அவர்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுப்பதோ 100 ரூபாய், 200 ரூபாய் என்று சொன்னால் அந்த ஏழைகள் மீண்டும் தலை தூக்க முடியுமா? அவர்களுடைய வாழ்க்கையிலே மீண்டும் ஒரு எதிர்காலம் தோன்றுவதற்கு முடியுமா என்பதை மாண்புமிகு முன்னவர் அவர்களுடைய கவனத்திற்கு இங்கே நான் கொண்டு வர விரும்புகிறேன்.

படித்தவர்களுக்கும், பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்பு கொடுக்கத் தவறி, 1,43,038 பேர்களுக்கு 9.24 கோடி ரூபாயை நிதி உதவியாகத் தருகிறீர்கள். நான் நினைக்கிறேன், பட்டதாரிகளுக்கு 100 ரூபாயும், பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வை முடித்தவர்களுக்கு 50 ரூபாயும் என்கிற கணக்கிலேதான்—இந்த 1,43,038 பேர்களுக்கு நிதி உதவி அளிக்கிறார்கள் என்று. இவ்வளவு பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். நான் என்ன கேட்கிறேன் என்றால், எஸ்.எஸ்.எல்.சி. தவறியவர்கள் அதிலிருந்து படிக்காதவர்கள் வரைக்கும் இன்றைக்கு வேலை கேட்டு, வேலைத் தேடித் தரும் ஸ்தாபனங்களில் பதிவு செய்தவர்களுடைய எண்ணிக்கை



1987 மார்ச் 31] [திருமதி டி. யசோதா]

எவ்வளவு? இப்படி லட்சக்கணக்கான பேர்கள் வேலையில்லாமல் இருக்கிற இந்தச் சூழ்நிலையில், என்ன திட்டத்தை நீங்கள் அவர்களுக்குத் தர இருக்கிறீர்கள்? நாட்டு வாட்டம் போக்கிட சர்க்கார் நோட்டு அடித்தால் போதாது என்று அண்ணா அவர்கள் சொன்னதை மனதிலே நிறுத்தி, படித்து பட்டம் பெற்றவர்கள், துயர் துடைக்க சர்க்கார் நிதி உதவி செய்தால் மட்டும் போதாது, வேலை வாய்ப்பு அளிக்க வேண்டாமா, அதற்கான திட்டங்கள் எங்கே என்று தான் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்திலே வெண்மைப் புரட்சியை உருவாக்குவதற்காக அதிகமான பால் வளத்தைப் பெருக்க வேண்டும் என்பதற்காக ஒரு மிகப் பெரிய திட்டம் உலக வங்கியின் துணையுடனும், ஐரோப்பியன் எக்கனாமிக் கவுன்சில் மூலமாகவும் உருவாக்கப் பட்டது.

அதை ஸ்டேஜ் 1 என்றும், ஸ்டேஜ் 2 என்றும், ஸ்டேஜ் 3 என்றும் 3 வகையாக அவர்கள் பிரித்து நமக்கு பண உதவி கொடுத்தார்கள். முதல் 2 ஸ்டேஜ்களில் அவர்கள் நமக்குக் கொடுத்தத் தொகை 51 கோடி ரூபாய். அதற்குப் பிறகு அவர்கள் நமக்குத் தர இருப்பது 54 கோடி ரூபாய். ஆனால் அவர்கள் ஒரு கண்டிஷன் போட்டார்கள். என்ன கண்டிஷன்? இந்த பால் உற்பத்தியாளர் சங்கம் இருக்கிறதே இந்த பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு கிராம அளவிலேயும், மாவட்ட கவுன்சில், மாநில பெடரேஷனிலும் உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டும் என்றும் அந்தத் தேர்தலை நீங்கள் நடத்தினீர்கள் என்றால் மக்கள் பிரதிநிதிகள் இடத்தில் நாங்கள் அந்த 3-வது ஸ்டேஜ்க்கு கொடுக்க வேண்டிய 54 கோடி ரூபாயைத் தருவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். 7 வருடம் ஆகிறது, நாமும் தேர்தலை நடத்தவில்லை என்பதை நான் இங்கே வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

1976 ஆம் ஆண்டில் அன்னை இந்திரா காந்தி அவர்கள் இந்த நாட்டில் பிரதமராக இருக்கிறபோது கொத்தடிமை ஒழிப்புக்கு என்று பணம் ஒதுக்கீடு செய்தார்கள். அதிலே விசித்திரம் என்ன என்று சொன்னால் 1 லட்சத்து 34 ஆயிரம் பேர் தமிழகத்திலே—மற்ற மாநிலங்களை விட அதிகமாக—கொத்தடிமைகள் இருக்கிறார்கள் என்று கணக்கு கொடுக்கப்பட்டு அதனுடைய

[திருமதி டி. யசோதா] [1987 மார்ச் 31

அடிப்படையில் லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் நாம் 34 ஆயிரம் பேருக்குத்தான் புனர்வாழ்வு அளித்தோமே தவிர, 1 லட்சம் பேருக்கு புனர்வாழ்வு அளிக்காத காரணத்தால் மத்திய அரசு ஒதுக்கிய தொகையில் கிட்டத்தட்ட 17 லட்சம் ரூபாய் இன்றைக்குச் செலவு செய்யப்படவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல அடுத்து இன்றைக்கு ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், எல்லா துறைகளுக்கும் பண ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். அதிலே கல்விக்கு சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 551 கோடி ரூபாயிலிருந்து 597 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். என்றாலும் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்றும் எல்லா நிலை ஆசிரியர்களுக்கும் சம்பளம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்றும் தமிழகத்தில் முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு, எப்போதும் நடந்திராத அளவுக்கு ஆசிரியர்கள் போராட்டம் எல்லாச் சங்கங்களும் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து நடத்தின. ஒரு நபர் கமிஷன் நியமிக்கப்பட்டது. அதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொன்னார்கள். பிறகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் அதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இன்றைக்கு அந்த ஒரு நபர் கமிஷனுடைய சிபாரிசு, அறிக்கை கூட வந்து இருக்கிறது. ஆனால் அது அவர்களுக்கு நிறைவைத் தரவில்லை. ஏமாற்றத்தை உருவாக்கியிருக்கிறது. ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையிலே அவர்களுக்கு ஏதேனும் விமோசனம் இருக்குமோ என்று பார்த்தால் அதுவும் சரியாக இல்லை. கேரளா, கர்நாடகா, ஆந்திரா, புதுவை போன்ற மாநிலங்களில் உள்ள ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளத்தைவிட தமிழ்நாடு ஆசிரியர்கள் குறைவான சம்பளமே பெறுகின்ற நிலைமை இருக்கிறது என்ற காரணத்தால் கல்விக்கு எவ்வளவு தொகை ஒதுக்கினாலும் ஆசிரியர்களுக்கு மனநிறைவை அளிக்கவில்லை. ஆனால் இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் எதிர்பார்க்கும் பலன் கிடைக்காது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்,



1987 மார்ச் 31] [திருமதி டி. யசோதா]

மத்திய அரசினுடைய புதிய கல்வித் திட்டத்தை நீங்கள் எதிர்க்கிறீர்கள். மத்திய அரசினுடைய புதிய கல்விக் கொள்கை என்பது நவோதயா என்பது மட்டும் அல்ல. அது ஒரு அம்சம். அதிலே பல சிறப்பு அம்சங்கள் இருக்கின்றன. ஒரு உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் ஓர் ஆசிரியர் பள்ளிகள் இருக்கின்ற இடங்களில் மற்றும் ஓர் ஆசிரியர் நியமிக்க வேண்டும். அப்படி நியமிக்கப்படுகின்ற ஆசிரியர் பெண்ணாக இருக்க வேண்டும் என்ற அந்த சிறப்பு அம்சங்கள் எல்லாம் இங்கே அதிலே இருக்கின்றன.

நான் நேற்று கூட சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்குச் சென்றேன். அங்கே செல்லுகின்றபோது உண்மையிலேயே அரசினர் தோட்டத்திற்குள்ளே ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. பழைய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு அருகில். முன்பு அது கவர்னர் வாசஸ்தலம். அவர் கிண்டிக்குப் போன காரணத்தால் இப்போது அங்கே எல்லோரும் குடியிருக்கிறார்கள், அரசு தரப்பில் பணி ஆற்றுகிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அந்தப் பள்ளிக்கூடத்திற்கு மேல் கூரை இல்லை, உட்கார பெஞ்ச் இல்லை, மரத்துக்கு அடியில் பள்ளிக்கூடம் நடந்து கொண்டிருக்கிறது. அது மட்டும் அல்ல, அவர்கள் ஒதுங்குவதற்கு ஒதுக்கிடம் இல்லை என்ற நிலை மட்டும் அல்ல, குடிநீர் கிடைக்காத நிலைமையில் ஒரு பள்ளிக்கூடம் சென்னை நகரின் இதயம் என்று சொல்லுகின்ற 'ஹார்ட் ஆப் தி சிட்டி' என்று சொல்லுகின்ற அந்த அண்ணா சாலையில், அதுவும் குறிப்பாக எம்.எல்.ஏ.க்கள் இருக்கின்ற அந்தப் பகுதியில், அரசினர் தோட்டத்தில் இப்படி ஒரு பள்ளிக்கூடம் நடைபெறுகிறது. நகரத்திலேயே இப்படி இருக்கிறது என்று சொன்னால் கிராமங்களில் எப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கும்? அவைகளை எல்லாம் போக்குவதற்கு இந்த மத்திய அரசாங்கத்தினுடைய புதிய கல்விக் கொள்கையை. . . . . .

(குறுக்கீடு).

[1987 மார்ச் 31

(பிற்பகல் 12-10)

**மாண்புமிகு திரு. வி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிகளுக்கு எல்லாம் 'இன்ஃபிராஸ்ட்ரக்சர் ஃபெசிலிட்டீஸ்' என்று சொல்லக்கூடிய அடிப்படை வசதிகளை, கட்டிடங்கள் போன்ற வசதிகளை எல்லாம் செய்து தர குறைந்த செலவு என்று கருதிவிடக் கூடாது. குறைந்தபட்சமாக எடுத்த எடுப்பிலேயே ரூ. 500 கோடி தமிழகத்திலே உள்ள பள்ளிகளுக்கு மட்டும் தேவைப்படுகிறது. இதை நாங்கள் சொல்லவில்லை. மைய அரசே ஒரு ஆய்வு செய்திருக்கிறது. பாரதத்தினுடைய எல்லா மாநிலங்களிலும் இருக்கிற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, பல ஆயிரக்கணக்கான ரூபாய் தேவை என்று மனித வள ஆற்றல் துறை ஆய்வு செய்து, கண்டறிந்து, அகில இந்திய மாநாட்டிலே தெரிவித்திருக்கிறார்கள். இவ்வளவு பணம் தேவைப்படுகின்ற போது அகில இந்திய அளவிற்கே மைய அரசு ஒதுக்கி இருக்கிற பணம் ரூ. 400 கோடிதான், இந்த 'இன்ஃபிராஸ்ட்ரக்சர் ஃபெசிலிட்டீசிற்கே'. அப்படி இருக்கும்பொழுது தமிழகத்திற்கு எவ்வளவு பணம் வரும் என்பதை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். புதிய கல்விக் கொள்கையை மைய அரசு இன்னும் ஏற்றுக் கொள்வதாக இதுவரை சொல்லவில்லை. மாநில அரசு தான் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய துணைக் கண்டத்தின் அளவிலே கேரளாவிற்கு அடுத்தபடியாக தமிழகத்தில்தான் கிராமங்களில் இருக்கிற துவக்கப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் அதிகமாக, உள்ளதாக சொல்லப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே 'இன்ஃபிராஸ்ட்ரக்சர் ஃபெசிலிட்டீஸ்' இல்லை என்று சொல்கிறார்கள். உண்மையிலேயே இந்தியாவிலே இரண்டாவது மாநிலமாக கல்வி கற்றுக் கொடுக்கக்கூடிய, துவக்கப் பள்ளிகள் கட்டிடங்களை முழுமையாகப் பெற்றிருக்கிற மாநிலம் இந்த மாநிலம் என்பதை அறிவாரா?



1987 மார்ச் 31]

**திருமதி டி. யசோதா:** இவர் மந்திரியைக் கேட்க வேண்டிய கேள்வியை என்னிடம் கேட்பதில் பிரயோசனம் இல்லை. நான் இருப்பதைச் சொல்கிறேன். சென்னை மவுண்ட் ரோடில் இருக்கிற அரசினர் தோட்டத்திற்குள் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது, எம்.எல்.ஏ. ஹாஸ்டல் பக்கத்தில்; அங்கே எழுதுவதற்கு போர்டு கூட இல்லை. மரத்தடியில்தான் பள்ளிக்கூடம் நடக்கிறது. அதைச் சொன்னால், என்ன குற்றம்? அதற்கு நாங்கள் ஆளுங்கட்சியில் இருக்க வேண்டும். நீங்கள் எதிர்க் கட்சியில் இருக்க வேண்டும். அதற்கு நீங்கள் இப்படி வரவேண்டும், நாங்கள் அப்படி வரவேண்டும். இருக்கின்ற நிலைமையை எடுத்துச் சொல்லி, பெற்றுத் தருவதற்குத்தான் நாங்கள் இங்கே இருக்கிறோம். இருக்கின்ற நிலைமைகளை நாங்கள் எடுத்துச் சொல்கிறோம், ரூ. 400 கோடி புதிய கல்வித் திட்டத்திற்கு என்று மத்திய அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது என்று சொல்கிறார்கள். ரூ. 400 கோடி என்று சொன்னால், நமக்கும் ஒரு அளவிற்கு, கணிசமான அளவிற்கு வரலாம், நாம் இதை ஏற்றுக் கொண்டால். ஆனால் நான் என்ன கேட்கிறேன் என்றால் ரூ. 597 கோடி இன்றைக்குக் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறீர்கள். கட்டிடத்திற்காக ரூ. 1 கோடி. இப்போது நமக்கு மொத்தமாக ரூ. 500 கோடி தேவை. முழுமையான நிர்மாணம் பெற கட்டிடத்திற்கு ரூ. 500 கோடி தேவை என்று சொன்னால், அந்த ரூ. 500 கோடியிலே குறைந்த பட்சம் 10-லே ஒரு பங்காவது, ரூ. 50 கோடியாவது ஒதுக்கி, அந்தக் கட்டிடங்களை நீங்கள் உருவாக்குவதற்கு இந்தத் திட்டத்திலே வழி காட்டியிருப்பீர்களேயானால், உங்களைப் பாராட்டுவதற்கு நாங்கள் இந்த நேரத்திலே தயாராக இருக்கிறோம் என்பதை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோன்று, கல்விகூட இதுகாறும் மாநில அரசுக்கே சொந்தமான அதிகார வரம்பிற்கு உட்பட்டதாக இருந்தது. சமீபத்தில் அது மத்திய அரசு மாநில அரசுகளுக்கிடையேயுள்ள வரம்பிற்கு வந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

[திருமதி டி. யசோதா] [1987 மார்ச் 31

அதுபோன்று மைய அரசு நமக்கு தேவைப்படுகின்ற உதவியைச் செய்ய முன்வருகிறதே தவிர, நம் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு வரவில்லை என்பதை இந்த நேரத்திலே உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

37 ஆண்டுகளாக நாம் செய்ய முடியாததை எல்லாம் செய்யக் கூடிய சூழ்நிலையில் மத்திய அரசு நமக்கு எல்லா வகையிலும் உதவ முன்வருவதை நாம் வரவேற்க வேண்டும் என்பதைத்தான் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு ஏற்கனவே தொழிற் கல்வி படித்தவர்கள், இன்ஜினீயரிங் கல்வியில் தேர்வு பெற்றவர்கள், மருத்துவக் கல்லூரியில் தேர்வு பெற்ற டாக்டர்கள் அத்தனை பேரும், பல்லாயிரக்கணக்கில் வேலையற்று இருக்கிறார்கள். அப்படி வேலையற்றுக் கிடக்கின்ற நேரத்திலே அவர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கிக் கொடுப்பதற்கு நாம் இன்னும் திட்டங்களைத் தீட்டவில்லை. ஆனால் அதே நேரத்திலே தனியார் களுக்கு இன்றைக்கு அரசாங்கம் 90 பாலிடெக்னிக்குகளைக் கொடுத்திருக்கிறார்கள். 25 இன்ஜினீயரிங் கல்லூரிகளைக் கொடுத் திருக்கிறார்கள். 3 மருத்துவக் கல்லூரிகளைக் கொடுத்திருக் கிறார்கள். ஏற்கனவே வேலையில்லாத இன்ஜினியர்கள், வேலை இல்லாத தொழிற் கல்வி கற்றவர்கள், வேலையில்லாத டாக்டர்கள், தாதியர்கள் இருக்கும்பொழுது, இன்னும் 90 பாலிடெக்னிக்குகள் 25 இன்ஜினீயரிங் கல்லூரிகள், 3 மருத்துவக் கல்லூரிகள் வந்தால், அதிலேயெல்லாம் பாஸ் பண்ணிவிட்டு அவர்களும் வந்து நிற்கப் போகிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பிற்குரிய திட்டங்கள் எதுவும் இந்த பட்ஜெட்டில் காண முடியாத சூழ்நிலை இருக்கிறது.

அதுமட்டுமல்ல. அரசாங்கம் அந்தத் தனியார்க் கல்லூரிகளில் 40 : 60 சதவீதம் என்கின்ற அளவிலே, 40 சதவீதம் அரசாங்கம் மாணவர்களை அனுப்புகிறது, 60 சதவீதம் அங்கேயிருக்கின்ற அந்த நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் போடுகிறார்கள், மாணவர்களை. இந்த 40 சதவீதத்தில்தான் 18 சதவீதம் எஸ்.சி.எஸ்.டியும் பேக்வேர்ட் கம்யூனிட்டிக்குரிய இடமும் அங்கே



1987 மார்ச் 31] [திருமதி டி. யசோதா]

ஃபில் அப் செய்யப்படுகிறதே தவிர, இந்த 60 சதவீதத்தில் எஸ்.சி.எஸ்.டியினுடைய பிரிவும், பின்தங்கிய மக்களுக்கு என்று சொல்லப்படுகின்ற அந்த கணக்கெடுப்பும் வரவில்லை. இந்த 60 சதவீதம் என்பதை, பணத்தைப் பெற்றுக் கொண்டு அந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு விற்றுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, 60 சதவீதம் என்றாலும் கூட அதிலே கூட எஸ்.சி.எஸ்.டி., பின்தங்கியவர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்வதிலே அரசாங்கம் கவனத்தோடு இருக்க வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கத்திலே என்ஜினியரிங் காலேஜில் என்று நினைக்கிறேன். ஒரு வருடத்திற்கு டியூஷன் ஃபீஸ் 350 ரூபாய். அதே தனியார் துறையில் இருக்கின்ற என்ஜினியரிங் கல்லூரியில் ஒரு ஆண்டுக்கு டியூஷன் பீஸ் 2,000 ரூபாய். நீங்கள் அரசாங்கத்திலிருந்து 40 சதவீதம் அங்கே அனுப்புகிறீர்களே அந்த 40 சதவீதம் ஏழை எளியவர்களாக இருக்கின்றவர்களைத்தான் நீங்கள் அனுப்புகிறீர்கள். திறமை உள்ளவர்களைத்தான் நீங்கள் அனுப்புகிறீர்கள். ஆனால் அவன் அரசாங்கக் கல்லூரியிலே சேர்ந்தால் 350 ரூபாய்தான் டியூஷன் பீஸ் வருடத்திற்குச் செலுத்த வேண்டும். ஆனால் தனியார் கல்லூரியிலே போகின்ற போது 2,000 ரூபாய் என்ற நிலையிலே அவர்கள் படுகின்ற அவதி இன்றைக்கு ஏட்டில் அடங்க முடியாததாக இருக்கிறது. இதை நிச்சயமாக அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே குறிப்பாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்கவில்லை. ஒரு முறை வறட்சிக்கு தோண்டும் கிணறோ அல்லது போர்வெல்லோ, அடுத்த வறட்சிக்குள் பயனற்று போவதற்கு என்ன காரணம்? அந்தப் பணி அப்போதே சரியாகச் செய்யப்படவில்லை என்பது தானே பொருள். வறட்சி நிவாரணப் பணி சரியாக நடைபெற வேண்டுமென்றால், விருப்பு, வெறுப்பின்றி கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும். 1958-ல், பஞ்சாயத்துச் சட்டம் நிறைவேற்றியபடி ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி மன்றங் களுக்குத் தரப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஊராட்சி மன்றம், ஒன்றியங்கள் தேர்தலிலே பெண் களுக்கும், எஸ்.சி., எஸ்.டி. வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் ஒதுக்கீடு செய்து தேர்தலை நடத்த வேண்டுமென்று நம்முடைய

[திருமதி டி. யசோதா] [1987 மார்ச் 31

முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், அந்த விவகாரம் கோர்ட்டுக்குப் போன காரணத்தினாலே, உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற காரணத்தினாலே பழைய முறைப்படியே தேர்தலை நடத்திவிட்டார்கள். நான் கேட்டுக் கொள்வது இப்போது தேர்தல் நடந்துமுடிந்து 1¼ ஆண்டாகிறது. இன்னும் 1¾ ஆண்டு இருக்கிறது. இந்த 1¾ ஆண்டுக்குள்ளாக அந்த எஸ்.சி., எஸ்.டி. பெண்களுக்கென்று ஒதுக்கீடு செய்யக்கூடிய அந்தச் சட்டத் திருத்தத்தை ஏன் இந்தச் சட்டமன்றத்திலேயே நீங்கள் அறிவிக்கக் கூடாது? இதைத்தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். அதுமட்டுமல்லாமல் ஆந்திராவிலே இன்றைக்கு எஸ்.சி. எஸ்.டி.க்காகவும். பெண்களுக்காகவும் பேரூராட்சிகளிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும், பஞ்சாயத்துக்களிலும் தேர்தலைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று பார்க்கின்றபோது பெருமையாக இருக்கிறது. நம்முடைய தமிழகம் முதலிலே செய்து அந்தப் பெருமையைத் தட்டிக்கொள்ளக் கூடிய வாய்ப்பு இருந்தும் கூட சற்று கவனக் குறைவினால் அதை விட்டுவிட்டோமோ என்ற நிலை இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன்களில் இருப்பவர்களுக்கு நிதியுதவி இல்லை. கர்நாடகத்தில் பார்த்தால் தொள்ளாயிரம் கோடி பஞ்சாயத்து யூனியன்கள் கையிலே இருக்கிறது என்கிறார் இராமகிருஷ்ண ஹெக்டே. அதேபோல ஆந்திராவிலே, அவர்களுக்கு அதிகமான அதிகாரம் கொடுத்து விட்டோம் என்று சொல்கிறார்கள். அதுமாதிரி இன்றைக்கு நம்முடைய பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு என்.ஆர்.ஈ.பி., ஐ.ஆர்.டி.பி. போன்றவைகள் இல்லையென்றால், அவர்கள் பாவம் வேலையில்லாமல் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே அதிகமான அதிகாரத்தையும், அதிகமான நிதியுதவியையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய மாநில சுமுக உறவை வரவேற்கின்ற நேரத்திலே, கட்சியினுடைய லட்சியங்கள் வேறாக இருக்கலாம். கருத்துக்களும் வேறுபட்டிருக்கலாம். ஆனால் மக்கள் நலன் கருதி நீங்கள் மத்திய அரசுக்குத் தரும் ஒத்துழைப்பை மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும். அரசை நடத்தும்போது கட்சி லட்சியங்களை விடுத்து, மக்கள் நலன் கருதி, ஒத்துழைப்பை



1987 மார்ச் 31] [திருமதி டி. யசோதா]

நல்க வேண்டும் என்று எங்கள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் கூறியிருப்பதை ஏற்று ஒத்துழைப்பை நல்கும் தமிழக அரசை நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல இன்னொன்றை நான் உங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாடு ஊராட்சிப் பகுதி நேர எழுத்தர்கள் சங்கம். அவர்கள் இங்கே எனக்கு ஒரு மகஜரைக் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாடு ஊராட்சிப் பகுதி நேர எழுத்தர்களாக 4,000 பேர்கள் சுமார் 10 ஆண்டுகளாகப் பணி புரிந்து கொண்டு வருகிறோம், எங்களுக்கு இதுவரை எந்தவிதமான பணிப் பாதுகாப்பும் கிடையாது.

(பிற்பகல் 12-20)

மாதம் ரூபாய் 300 தொகுப்பூதியமாக கிராம ஊராட்சி நிதியிலிருந்து பெற்று வருகிறோம் என்று அதில் குறிப்பிட்டிருக்கின்றனர். தற்போது வீட்டு வரி, வாகன வரி, தொழில் வரி ஆகிய வரிகளை வசூலிப்பதற்காக வரித் தண்டலர் மற்றும் முழு நேர எழுத்தர்களாக அரசு நியமிக்க முடிவு எடுத்து, கோப்பு, முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் கையொப்பம் இட்டு, நிதித்துறை அமைச்சருடைய கையெழுத்துடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழக முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு இதைப் பரிசீலித்து அந்த நான்காயிரம் பேருக்கும் இதுபோன்ற ஒரு நிரந்தர வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக முதல்வர் பழைய காங்கிரஸ்காரர். தேசியவாதி. இந்தியாவுக்குள்தான் தமிழகம் இருப்பது போல், தேசியத்திற்குள் தான் திராவிட பாரம்பரியம் உள்ளது என்பதை உணர்ந்த நமது தமிழக முதல்வர் அவர்கள், இன்றைக்கு உண்மையிலேயே தேசியத்திற்கும், திராவிடத்திற்கும் ஒரு இணைப்புப் பாலமாக இருந்து வருவதை மறுக்க முடியாது. அப்படி அவர் இருக்கின்ற காரணத்தினால்தான் இன்றைக்கு இந்த நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட அண்ணல் காந்தி[illegible] களுடைய உயிரைக் காத்த அருமைத் தலைவி தில்லையாடி வள்ளியம்மை பெயராலே ஒரு மாவட்டம், [illegible] போராட்டத் தியாகி, தேசியத் தலைவர் வ.உ.சி. அவர்கள் பெயராலே ஒரு மாவட்டம், [illegible]ருந்தலைவர்


V211, 31 N87
N87-35-4
98296

காமராஜர் பெயராலே ஒரு மாவட்டம், முத்துராமலிங்கத் தேவர் பெயராலே ஒரு மாவட்டம் என்று உருவாக்குவது மட்டுமல்ல, பழம்பெரும் தேசியவாதியான, தேசியத் தலைவரான பக்தவத்சலனார் அவர்களுக்கு நினைவு மண்டபம், நேருவுக்கு சிலை அமைத்தல், போன்ற செயல்கள் அனைத்துக்கும் அவர் தொலைநோக்குக் கொண்ட தேசியப் பார்வை தான் காரணம் என்பதை நான் எடுத்துக் கூறுவது மிகையாகாது என்பதைத்தான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட தமிழக முதல்வர் அவர்கள் நம்முடைய அருமை அன்னையார் மறைந்த பாரதப் பிரதமர் திருமதி, இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு ஒரு மிகப் பெரிய—வள்ளுவர் கோட்டம் போன்று—ஒரு நினைவு மண்டபம் உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, என்னுடைய தொகுதியைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் கூறி நான் விடை பெறலாம் என்று கருதுகிறேன்.

ஸ்ரீபெரும்புதூர் தொகுதிக்கு, குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு ரூ. 1.82 கோடி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு என்ன செயல்வடிவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது இன்றைய வரையிலும் தெரியவில்லை. மதுராந்தகத்திலே தமிழக முதல்வர் அவர்கள் அங்கு சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது ரூ. 1.82 கோடி ஒதுக்கப்பட்டது. ஆகவே, அரசு உடனடியாக அதற்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முதல்வர் அவர்கள் செல்லுகின்ற இடம் எல்லாம் பலப்பல திட்டங்கள் உருவாகிக் கொண்டு வருகின்றன. உண்மையிலேயே சிறப்பு விழாக்களும், இன்றைக்கு துவக்க விழாக்களும் நடைபெறுகின்றன. அது எங்களுக்கெல்லாம் வரக் கூடாத ஒன்றா? எங்கள் பக்கமும், தமிழக முதல்வர் அவர்களின் பாதங்கள் பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சமூக சேவை மையங்கள் மூலமாக இன்றைக்கு வெளிநாட்டுப் பணம் அதிக அளவுக்கு வந்து கொண்டிருக்கிறது. நான் நம்முடைய சமூக நலத் துறை அமைச்சரிடம் பேசினேன். அவர் கூட, ஒரு கருத்தைச் சொன்னார். அதை நான்



சொல்லவில்லையென்றாலும், என் கருத்தாகச் சொல்கிறேன். சமூக நலத் துறை பணத்தை வைத்துக் கொண்டு திட்டங்களைத் தீட்டி முடிக்கிறது. வெளிநாட்டிலிருந்து வருகின்ற பணத்தை அவர்கள் சேமித்து வைக்கக் கூடிய நிலை இருக்கின்றது என்பதைக் கவனமாக ஏற்றுக் கொண்டு அதைக் கண்காணிக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல, இங்கே நம்முடைய முன்னாள் அமைச்சர் கே. ஏ. கே. அவர்கள் தொகுதியிலே தீ விபத்திலே பாதிக்கப் பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் கொடுக்கப்பட்டதை நான் வரவேற்கிறேன். தீயினாலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு அங்கே ரூபாய் கொடுக்கப்பட்டது. அரிசி கொடுக்கப்பட்டது: வேஷ்டி கொடுக்கப்பட்டது. சேலை கொடுக்கப்பட்டது. ஆனால், என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற கிவளூரிலே இருக்கின்ற மக்களுக்கு, இரண்டு முறை தீ விபத்திலே பாதிக்கப் பட்ட மக்களுக்கு, வீடெல்லாம் எரிந்து, கட்டுவதற்கு சேலை, வேஷ்டி இல்லாமல் இருக்கின்ற மக்களுக்கு ஏன் அந்தச் சலுகை கிடைக்கவில்லை? அரிசியோடு, ரூபாயோடு நிறுத்தி விட்டிருக்கிறார்கள். வேஷ்டி, சேலை அவர்களுக்குக் கொடுக்க வேண்டாமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அமைச்சர்களிடத்திலே பல முறை கடிதங்கள் எழுதுகிறோம். ஆனால் அமைச்சர்கள் எங்களுக்கு பதில் எழுதுவதே கிடையாது. ராஜீவ் காந்தி அவர்கள் கூட, இங்கே உள்ள நாஞ்சிலார் அவர்களுக்கு பதில் கடிதம் எழுதி இருப்பதாகச் சொல்கிறார்கள். சென்ற முறை இதே சட்டமன்றக் கூட்டத் தொடரிலே நம்முடைய நாவலர் அவர்கள் சொன்னார்கள்—நிச்சயமாக அமைச்சர்கள் பதில் எழுத வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அது சொன்னதோடு நிற்கிறதே தவிர, நாங்கள் எழுதுகின்ற எந்தவிதமான கடிதத்திற்கும் அமைச்சர்களிடமிருந்து பதில் இல்லை. கலெக்டர்களே பதில் எழுதாதபோது, அமைச்சர்கள் எங்கிருந்து பதில் எழுதுவார்கள்? இந்த நிலை இருக்கிறது. இதை நிச்சயமாக அமைச்சர்கள் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் ஒரு கடிதத்தைக் காட்ட வேண்டும் என்று சொல்லி எடுத்து வந்துள்ளேன். எவ்வளவு அனுப்பியிருக்கிறோம்? நாங்கள்

வேலையில்லாமல் இதைச் செய்வதில்லை. ஆனால் எந்தவிதமான பதிலும் அனுப்புவது இல்லை. (ஒரு தாளைக் காண்பித்தார்) இதைப் பாருங்கள். ஒவ்வொருவருக்கும் எவ்வளவு அக்னாலெட்ஜ்மென்ட் வைத்து, ரிஜிஸ்டர் போஸ்ட்டிலே ஆறு ரூபாய் செலவழித்து அமைச்சருக்கும், செக்ரட்டரிக்கும் அனுப்பியிருக்கிறோம்; ஒருவரிடமிருந்தும் பதில் வரவில்லையென்று சொன்னால், நாங்கள் பேசுகிற கருத்துக்களுக்கும், எழுதுகிற கருத்துக்களுக்கும் என்ன மதிப்பு, மரியாதை இருக்கிறது என்று புரிந்து கொள்ள முடியவில்லை.

அதைப்போல, மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள். மகளிருக்கான எல்லாவிதமான வசதிகளும் வாய்ப்புகளும் உருவாக்கக்கூடிய சூழ்நிலை, மகளிர் ஆண்டு என்று சொல்லி பெருமைப்பட்டுக்கொண்டிருக்கின்ற நேரத்திலே பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், மகளிருக்கு ஏற்கெனவே ஒரு தனியான இலாக்காவை ஒதுக்கி இன்றைக்கு நிர்வாகம் செய்து கொண்டிருக்கிற போது, தமிழக அமைச்சரவையிலே ஒரு பெண் அமைச்சர்கூட இல்லை என்பதை நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிச்சயமாக, தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் அவர்கள் ஒரு பெண் அமைச்சரை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறி, இறுதியாக ஒன்றை மட்டும் கூறி விடைபெறலாம் என்று நினைக்கிறேன்.

இந்த பட்ஜெட்டைப் பொறுத்தமட்டில் தமிழக மக்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக பெரும் துன்பங்களை சுமக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எந்த ஒரு பெரும் தொழிலையும் திட்டமிட்டுத் துவங்கி தமிழக மக்களின் உன்னத உழைப்பினையும், படித்த இளைஞர்களின் அறிவாற்றலையும் பயன்படுத்தி தமிழகத்தைச் சிறந்த முறையில் முன்னேற்றுவதற்கு தொடர்ந்து இந்த அரசு தவறி வருகிறதோ என்ற ஐயப்பாட்டை தோற்றுவிக்கிறது. 'தன் கையே தனக்கு உதவி' என்ற உன்னத நிலையை தமிழக மக்கள் அடையக்கூடிய வழி முறைகளை இந்த அரசு அறிமுகப்படுத்துவதற்குப் பதிலாக கொடை வழியிலே மக்களை அழைத்துச் செல்வது என்பது, மக்கள் சமுதாயத்தில் பெரும் பகுதியினரை படுபாதாளத்தில் தள்ளிவிடும் என்கிற அச்சம் இருக்கின்ற





காரணத்தினாலே இதை நீங்கள் மறு பரிசீலனை செய்து நல்ல திட்டங்களைத் தீட்டி, நிச்சயமாக உழைப்புக்கு முன்னுரிமை தந்து, மக்களிடத்திலே இருக்கின்ற திறமைகளை வெளிக்கொண்டு வந்து ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு, நீங்கள் அடுத்து வருகின்ற திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டு, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) நேரம் ஆகி விட்டது. எல்லோரும் பேசிக்கொண்டிருந்தால் 1½ மணி நேரம் பதில் பேச வேண்டாமா? (குறுக்கீடு).

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சியினுடைய தலைவர் அவர்கள் தமிழக பட்ஜெட்டைப் பற்றி நிறைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நான் விளக்கம் கேட்பது, மத்திய சர்க்கார் 8,000 கோடி பற்றாக்குறை போட்டு ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்களே, அதுபற்றி பாராட்டுகிறார்களா? இல்லை அதுபற்றி சட்டமன்றத்திலே விமர்சிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்தில் நான் இருந்தால் அங்கே என் கருத்தைச் சொல்லி இருப்பேன். இது இந்த பட்ஜெட்டைப் பொறுத்தது. ஆகவே என்னுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளைப் பற்றியும், 1987—88-ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் குறித்தும் நடைபெற்ற விவாதத்தில், இன்றைய விவாதத்தில் கலந்து கொண்ட மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களையும் சேர்த்து 73 பேர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கி இருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை மன நிறைவோடு ஏற்றுக்கொண்டும், மகிழ்ச்சியைத் தெரிவித்தும், ஊக்கம் தந்தவர்கள் அனைவருக்கும் என்

முழுமையான நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன். நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்துள்ள கருத்துக்களை அரைகுறையாக ஏற்றும், அரைகுறையாகப் பாராட்டியும், மாறுபட்ட கருத்துக்களை வழங்கியும் உரையாற்றிய உறுப்பினர்களுக்கு என்னுடைய அரைகுறையான நன்றியையும் தெரிவித்து, என்னுடைய அரைகுறையான மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், என்றாலும், உறுப்பினர்களிலே சிலர், குறிப்பாக முன் வரிசையிலே இருக்கின்ற தலைவர்கள் கூறிய சீரிய பரிந்துரைகளையும், கருத்துக்களையும் இந்த அரசு மதித்து ஏற்று அவற்றை யெல்லாம் நாளாவட்டத்தில் முறைப்படி ஆராய்ந்து பார்க்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்றாலும், எதிர்த் தரப்பிலே இருப்பவர்களில் சிலர் எதிர்ப்பு உணர்ச்சியாலும், காழ்ப்புணர்ச்சியாலும் சிலபல கேலி கிண்டல் ஆகியவற்றைத் தங்களுக்கே உரிய பாணியில் கலந்து சிலபல கருத்துக்களைச் சொன்னாலும் நானும் அவற்றிலே எனக்குப் பயன்படுகின்ற வகையிலே ஏதேனும் இருக்குமா என்று கூர்ந்து கவனித்து, இந்த நிதிநிலை அறிக்கையைச் செவ்வனே நடத்திச் செல்வதற்கு உறுதுணையாக அமையுமா என்று பார்த்த வகையில் எனக்கு அவைகள் பயன்படவில்லை என்றாலும், அப்படி அவர்கள் பேசியதிலே அவர்களுக்காவது மகிழ்ச்சி ஏற்பட்டதே என்பதிலே எனக்கும் மகிழ்ச்சி என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேறன்.

(பிற்பகல் 12-30)

என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் கலந்து கொண்டு, பொதுவாக இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியது மட்டுமல்லாமல், பொது பொருளாதார சூழ்நிலை யையும் எடுத்துச் சொல்லியது மட்டுமல்லாமல் நாட்டினுடைய பல்வேறு துறைகளைப்பற்றியும் கருத்துக்களையும் சொல்லி, தங்கள் தங்கள் தொகுதியிலுள்ள குறைகளையும், அவற்றை நீக்குவதற்கான முயற்சிகளையும், அந்தந்தத் தொகுதியில் செய்யப்பட வேண்டிய பணிகள் ஆகியவற்றையும் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் எல்லாம் இங்கே. அவைக் குறிப்பில் ஏற்றப்பட்டிருக்கின்றன என்றாலும்





அந்தந்த துறையினர் அதைப்பற்றி மிகுந்த கவனம் செலுத்தி அவற்றிற்குரிய நடவடிக்கைகளை அவர்கள் எடுத்துக் கொள் வார்கள். அந்தக் கருத்துக்கள் அத்தனைக்கும் இங்கே பதிலுரை தருவது என்பது இந்த நேரத்தில் இயலாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மேலும் மானியக் கோரிக்கைகள் அடுத்தடுத்து வர இருக்கிற காரணத்தால் அந்தந்த மானியக் கோரிக்கையின்மீது விரிவாகவும், விளக்க மாகவும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லவும், அதனையொட்டி அந்தந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர்கள் அவற்றிற்கெல்லாம் விளக்கங்கள் தருவதற்கான வாய்ப்புகள் நிரம்ப இருக்கிற காரணத்தால் அதுபற்றிய சிறப்பான கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள் வார்கள். ஆனாலும், நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில் "இதிலே எதுவும் இல்லை" என்று சிலபேர் சொன்னாலும், இந்த நிதிநிலை அறிக்கை வளமற்ற, வறட்சியான நிதிநிலை அறிக்கை என்று சிலர் சொன்னாலும், சட்டியில் எதுவுமில்லை, ஆகவேதான் அகப்பையிலும் எதுவும் வரவில்லை என்று சிலர் எடுத்துச் சொன்னாலும், விமர்சிப்பதற்கு என்று எதுவுமில்லை என்று சொல்லிவிட்டு நீண்ட நேரம் விமர்சித்தாலும், இது வெறும் ஓடாத குதிரை என்று சிலர் கூறி மகிழ்ந்தாலும், வெறும் கணக்குப்பிள்ளை பட்ஜெட்தான் இது என்று சொன்னாலும், மாண்புமிகு புரட்சித் தலைவருடைய சீரிய தலைமையின்கீழ் இயங்குகிற இந்த அரசு, இந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் இந்த ஆண்டும் சிறந்த ஆட்சியை நடத்தவும், செம்மையான ஆட்சியை நடத்தவும், மக்களுடைய நம்பிக்கையைப் பெறத்தக்க வகையிலும், மக்களின் நன்மதிப்பைப் பெறத்தக்க முறையிலும் நடத்திச் செல்லும் என்ற உறுதிப்பாட்டின் அடிப்படையில்தான் நடைபோட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் எல்லாம் "வழுக்குகிற நிலத்தில் ஊன்றுகோலாக அமையத் தக்க வகையில்தான்" எங்களுக்குப் பயன்படுமோ என்று பார்க்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு இணங்க 1987-88 ஆம் ஆண்டை நாம் நகர்த்திச் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் இந்த ஆட்சியில் எதுவுமே நடைபெறவில்லை, எந்தப் பணிகளும் சிறப்பாக நிறைவேறவில்லை என்று எடுத்துச் சொன்னாலும்,

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 31

எப்படிப்பட்ட சூழ்நிலையின் அடிப்படையில் நாம் இந்த ஆட்சியை நடத்த வேண்டியிருக்கிறது என்பதையும், எப்படிப்பட்ட இக்கட்டான கட்டங்களில் நாம் நிதிநிலை அறிக்கையை உருவாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதையும் நான் இந்த நிதிநிலை அறிக்கையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் பல்வேறு திட்டப் பணிகளை நாம் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். வளர்ச்சிப் பணிகளை நாம் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். அதே நேரத்தில் நிர்வாகத்தையும் நாம் நடத்திச் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் நாம் நல்வாழ்வுப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆக, இந்தியாவில் ஏற்படுகிற சூழ்நிலை நம்மை பெருமளவுக்கு பாதித்திருக்கிறது—பாதிக்கிறது என்பதற்கான காரணங்களை எடுத்துச் சொல்வதற்குக் காரணம், இருக்கிற சூழ்நிலையை நாம் உணர்ந்து கொண்டால் தான் எதிர்காலத்தில் ஏற்படுகிற நிலைமைகளுக்கு ஏற்ப நாம் நம்முடைய தன்மையை வகுத்துக் கொள்ள முடியும் என்று நான் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. நாஞ்சிலார் அவர்கள் தன்னுடைய உரையின் முன்னுரையில் தெளிவுபடுத்தி எடுத்துச் சொன்னார்கள். அதை வரவேற்கிறேன். அந்தச் சூழ்நிலையை அவர்கள் கோடிட்டுக் காட்டுகிறபோது இந்தியாவினுடைய சூழ்நிலை இப்படி அமைந்திருப்பதற்குக் காரணம் யார் ஒருவர்மீதும் நாம் தனிப்பட்ட முறையில் குற்றஞ்சாட்டுகிறோம் என்பதல்ல. எப்படிப்பட்ட சூழ்நிலை இங்கே வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதையும், அப்படி வளர்ந்து கொண்டிருக்கிற சூழ்நிலையில் நாம் இருந்து கொண்டு அதைச் சமாளிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதையும், ஆக எதிர்காலத்தில் எப்படிப்பட்ட சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதையும் இருக்கிற நிலைமைகளையெல்லாம் நாம் புரிந்து கொண்டால்தான்—எதிர்காலத்தில் எப்படிப்பட்ட திசை நோக்கி எப்படிப்பட்ட குறிக்கோளை நோக்கி நாம் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை உணர வேண்டியவர்களாக இருக்கிறோம். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. நாஞ்சிலார் அவர்கள் இங்கே கோடிட்டுக் காட்டினார்கள்.



1987 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேனே தவிர குற்றச்சாட்டு என்ற முறையில் அல்ல. **Statement of fact** என்ற முறையில் இருக்கின்ற சூழ்நிலையைச் சுட்டிக்காட்டி, இந்தச் சூழ்நிலையில் என்ன செய்ய முடியும், என்ன செய்ய வேண்டும், இந்திய அரசு என்ன செய்யக் கூடிய சூழ்நிலையில் இருக்கிறது, இந்திய அரசு இன்றைக்குள்ள அகில உலக சூழ்நிலையில் எதைச் செய்ய முடியும் என்ற அளவிற்குத் தவித்துக்கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்தால்தான்—இந்தச் சூழ்நிலையை நாம் சமாளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை நாம் நன்றாக கருத வேண்டும்.

மாண்புமிகு புரட்சித் தலைவருடைய சீரிய தலைமையின்கீழ் இயங்குகிற அரசு 1977-வது ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட காலத்தில் சுமார் 628 கோடி ரூபாய் மதிப்புச் செலவில் நடத்திய அரசுப் பணிகள் கடந்த பத்தாண்டுக் காலத்தில் வளர்ச்சி பெற்று, வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது என்பதையும் இந்த ஆட்சி நகரவில்லை, இந்த ஆட்சியில் ஒரு செயலும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுகளுக்கு இடம் இல்லை என்பதையும் கூறிக்கொள்கிறேன். 628 கோடி ரூபாய் அளவிற்கு செலவுப் பணிகளைச் செய்து வந்த இந்த அரசு கடந்த பத்தாண்டுக் காலமாக ஆண்டுக்காண்டு விரிவாகி பல்வேறு திட்டங்களைச் செம்மையுற ஆக்கி இப்போது வருவாய்க் கணக்கிலே மட்டும் 1987-88-இல் 2,874 கோடி ரூபாய் அளவிற்கு செலவுக் கணக்கிலே செய்கிற அளவிற்கு பத்தாண்டுக் காலத்திலே நகர்ந்து வந்துள்ள பாங்கு, நகரவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு இடமில்லை என்பதையும் சீராக நடைபோட்டு வருகிறது, செம்மையாக பணியாற்றி வருகிறது என்பதையும், இந்தியாவில் உள்ள 22 மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இன்றைய சூழ்நிலையில் எந்த அளவிற்கு முன்னேற முடியுமோ அந்த அளவிற்கு முன்னேறி வந்திருக்கிறது என்பதையும் காட்டுவதாகும்.

மொத்தச் செலவினத்தின் அடிப்படையில் பார்த்தால் கிட்டத்தட்ட 3,681 கோடியே 6 இலட்சம் ரூபாயாக அமைந்திருக்கிறது; 628 கோடி செலவினம் என்பது 3,681 கோடியே 6 இலட்சம் ரூபாயாக மாறுகிற அளவிற்கு, நம்மாலே இயன்ற அளவிற்கு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 31

இருக்கின்ற நிதி ஆதாரங்களை வைத்துக் கொண்டு, ஆண்டுக்காண்டு திரட்டுகிற அளவிற்கு, இயற்றலும், காத்தலும், வகுத்தலும், வல்லதரசு என்ற பாங்குக்கேற்ப, பணியாற்றி வருகிறோம் என்பதை நன்கு காணலாம்.

இங்கே பல உறுப்பினர்கள் பேசும்போதும் சரி, வெளியே சில பேர் அறிக்கை வெளியிட்டபோதும் சரி, இந்த பற்றாக் குறையைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வரலாறு காணாத பற்றாக்குறை பட்ஜெட் என்று கூறி வரலாற்றில் இந்த மாதிரி காணவே இல்லை, என்று கூறி வரலாறு காணாத பட்ஜெட் என்று இந்த பட்ஜெட்டுக்கு ஒரு பெருமையைச் சேர்த்து இதுவரையில் வரலாற்றில் காணவில்லை என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வரவு—செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை ஏற்படுவது என்பது எவ்வளவு இயல்பான ஒன்று என்பதை பலர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்களும் தன்னுடைய உரையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வரவு—செலவுத் திட்டத்திலே பற்றாக்குறை ஏற்படுவது என்பது புதிதல்ல. கேடு பயக்கும் ஒன்றல்ல. அதற்கான காரண காரிய விளக்கங்களை பல்லாண்டுகளாகப் பார்த்தோம். ஆனால் ஒன்றை நன்றாகப் பார்க்க வேண்டும். பற்றாக்குறை முறையில் இதைச் சரிக்கட்ட இயலுமா, அதற்கான வழிவகை தேட இயலுமா, இந்த பற்றாக் குறையை போக்குவதற்குரிய சூழ்நிலை நம்முடைய கைக்கு அடங்கியிருக்கிற அளவிற்கு உள்ளதா என்பதுதான் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. அளவிற்கு மீறி போகிறதா என்பது கவனிக்கப்படவேண்டிய ஒன்று. பற்றாக்குறை ஏற்பட முடியாது என்பதல்ல, ஒரு குடும்பத்தில் பற்றாக்குறை வரவு-செலவு ஏற்படுவது குடும்பத்தை பாதிக்கும். ஒரு அரசைப் பொறுத்த வரையில் பற்றாக்குறை ஏற்படுவது என்பது ஒரு அரசுக்கு கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குப் பயன்படும். கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குப் பயன்படும் என்பது மட்டுமல்லாமல் முனைப்புள்ளத்தை உண்டாக்கப் பயன்படும். புதிய புதிய முயற்சிகளை மேற்கொள்ளுவதற்குத் தூண்டுதலாக இருக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் மிகச் சிறப்பாக எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். வரலாறு காணாத அளவிற்கு இந்தப் பற்றாக்குறை அமைந்திருக்கிறது என்று எடுத்துச் சொல்லுகிற



1987 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அளவிற்கு பலரும் எடுத்துச் சொல்லும் பாங்குகளை நீங்கள் காண்கிறார்கள். இங்கே இந்தச் சூழ்நிலையில் பற்றாக்குறை பட்ஜெட் போடக் கூடிய அளவிற்கு ஏற்பட்ட தன்மைகளை பல வாய்ப்புகளில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். நம்முடைய இந்தியாவின் தன்மைகளை மாண்புமிகு உறுப்பினரும் திரு. நாஞ்சிலாரும் மற்றவர்களும் எடுத்து தெரிவித்ததற்கிணங்க பல பொருளாதார வல்லுநர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை நாம் நன்றாகக் காணலாம். நானும் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன்.

(பிற்பகல் 12-40)

"இந்தியா முழுவதையும் பாதிக்கக்கூடிய வகையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை பொருளாதாரம், . . . தமிழக மக்களின் பொருளாதாரக் கட்டுக்கோப்பையும், தமிழக மக்களின் பொருளாதார வாழ்வையும் பெரிதும் பாதிக்கவே செய்கின்றன" என்று குறிப்பிட்டிருந்தேன். அண்மையில் 'எக்கானமிக்ஸ் அண்டு பொலிட்டிக்கல் வீக்லி' என்ற இதழில் பொருளாதார வல்லுநர் டாக்டர் எஸ். கே. என்பவர் குறிப் பிட்டுள்ளார். இந்தியாவில் சீரான, முறையான, ஒழுங்கான மேம்பாட்டு வளர்ச்சி ஏற்படாமல் இழுப்பு, விழிப்பு ஏற்படுவதன் காரணமாகவும், ஏற்றம் சறுக்கல் ஏற்படுவதன் காரணமாகவும் பல்வேறு நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் கூறிக் கொண்டு வருகிறவர்கள் அதற்குக் காரணமாக எடுத்துச் சொல்கிற போது, நீடித்துக்கொண்டே போகும் வறுமை, தொடர்ந்து நிலவி வரும் கல்வி அறிவு இன்மை, பெருகி வரும் வேலை வாய்ப்பின்மை, கறுப்புப் பணப் பெருக்கம், தேசீய கடன் சுமை, பண வீக்கம், ரூபாயின் மதிப்பு ஆண்டுக்காண்டு குறைந்து கொண்டே வருவது, நல்வாழ்வுப் பணிகள் வளர்ச்சியின் பகுதியாக அமையாமல் மாநில உதவியால் ஈடுகட்டும் நிலையில் இருப்பது, மக்களின் பெருக்கம், இவைகளுக்குக் காரணமாக இருக்கின்றன என்று அவர்கள் சிறப்பாகச் சுட்டிக் காட்டியிருக் கிறார்கள். அவைகளைச் சீர்படுத்துகின்ற அளவுக்கு முயற்சியை மத்திய அரசினுடைய வல்லுநர்களும், மத்திய அரசும்தான் எடுக்க முடியுமே தவிர மாநில அரசுக்கு இவற்றைச் சீர்படுத்தும் அதிகாரமோ, உரிமையோ அல்லது அதற்கான வலுவோ இல்லை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 31

என்பதை நாம் அடிக்கடி சுட்டிக் காட்டியிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், வரலாறு காணாத அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுவது உண்மைதான்.

இதற்கு முன்னால் இருக்கிற பற்றாக்குறையைக் காணும்போது, இது வரலாறு காணாத பற்றாக்குறை எண்ணும்போது, வரவும் வரலாறு காணாத அளவுக்கு வந்திருக்கிறது. 3,474 கோடியே 34 லட்சம் வந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் வரலாறு காணாத அளவுக்கு செலவும் இருக்கிறது. அதுவும் வரலாறு காணாத அளவுக்குத்தான். வரலாறு காணாத அளவுக்கு, எந்த மாநிலமும் நிறைவேற்ற முடியாத அளவுக்கு பல்வேறு பணிகளை நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. வரலாறு காண முடியாத அளவுக்கு பல்வேறு நல்வாழ்வுப் பணிகளை நாம் ஏற்றுக் கொண்டதால் இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கு ஆளாக வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. வரலாறு காண முடியாத அளவுக்கு இந்த ஆண்டுக் கணக்குப்படி 284 கோடி ரூபாய் ஆயத்தீர்வை மூலம் வந்திருக்க வேண்டும், கள், சாராயம் இருந்திருக்குமானால். ஆனால் கொள்கை அடிப்படையில் அந்தக் கொள்கையை நிறைவேற்றுவதால், அதை இழக்கத் தயாராக இருக்கிறோம். இந்த இழப்பும் வரலாறு காண முடியாத அளவுக்கு ஏற்படும் இழப்புதான்.

**திரு. கி. மனோகரன்:** பேரவைத் தலைவரவர்களே, வரலாறு காண முடியாத அளவுக்கு வரலாறு பற்றி பேசிக் கொண்டிருக்கிற நாவலர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மற்றைய வகைகளிலே 284 கோடி ரூபாய் மொத்தத்திலே இழப்பு இருந்தாலும், வேறு வகையிலே 58 கோடி ரூபாய் அளவிலேதான் நிற்கிறது. அதை வரவு-செலவுத் திட்டத்திலே காணலாம். வரலாறு காணமுடியாத அளவுக்கு (சிரிப்பு) . . . வரலாறு காணாத பட்ஜெட் என்று பலர் சொல்லிவிட்டார்கள். வரலாறு காணாத அளவுக்கு 4 ஆண்டுகாலமாக சத்துணவுத் திட்டத்தை 80 கோடி, 185 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றி வருகிறோம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவரவர்களே, வரலாறு காணாத அளவுக்கு நாஞ்சிலார் அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள்.



1987 மார்ச் 31]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** வருகிற ஆண்டில் 172.82 கோடி ரூபாய். சத்துணவுத் திட்டத்திற்குத் தந்திருக்கிறோம். வரலாறு காணாத அளவுக்கு குறைந்த விலையில் அரிசி விநியோகத்திற்கு மானியமாக 50 கோடி தருகிறோம். வரலாறு காணாத அளவுக்கு 59 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு 2, 3 ஆண்டுகளாக 11.54 கோடி செலவில் புத்தகங்கள் தருகிறோம். சீருடைக்காக 15.53 கோடி தருகிறோம். இதைத் தவிர சிறார்களுக்கும், தாய்மார்களுக்கும் இந்த ஆண்டு முதல் வரலாறு காணாத அளவுக்கு, வேறு எந்த மாநிலமும் காணாத அளவுக்கு காலணிகள் 20 கோடி ரூபாய் செலவில் தருகிறோம். இதைத் தவிர கடன்தொகை அல்லாமல், மானிய உதவியாக மின்சார வாரியத்திற்கு 1987-88-ல் ஒதுக்கியிருப்பது வரலாறு காணாத அளவுக்கு 160 கோடி ரூபாயாகும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** அவைத் தலைவரவர்களே, வரலாறு காணாத அளவுக்கு இந்த ஆண்டு வரியும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

**திரு. கி. மனோகரன் :** பேரவைத் தலைவரவர்களே, Please give instructions, if possible, to our Hon. Minister for Finance to switch over his speech from history to Geography.

Mr. SPEAKER : I impose a ceiling on the use of the word "வரலாறு காணாத அளவில்" நிதி அமைச்சர் பேச்சு தொடரும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறு காணாத அளவுக்கு பற்றாக்குறை இருக்கிறது என்று இங்கே சொன்னதால் தான் ஏன் வரலாறு காணாத அளவுக்கு பற்றாக்குறை ஏற்பட்டது என்பதைப்பற்றி வரலாறு காணாத சாதனைகளைப்பற்றி நான் இங்கே சொல்ல வேண்டிய அவசியம் வந்திருக்கிறது. உணவுப் பொருள் கழகத்திற்கு 91 கோடியே 4 லட்சம் ரூபாய் வழங்குகிறோம். மத்திய அரசு மறுத்தாலும், கொடுக்கக் கூடாது என்று கூறியிருந்தாலும் மாநில அரசு உழவர்களுக்கு ஊக்கம் தர வேண்டும் என்பதற்காக இன்சென்டிவ் என்கிற முறையிலே சென்ற ஆண்டுக்கு முதலாண்டிலேயிருந்து 20 கோடி ரூபாய் அளவுக்கு வரலாறு காணாத அளவுக்கு இதிலேயும் தந்துகொண்டிருக்கின்றோம். வேறு எந்த மாநிலமும் தராத அளவுக்கு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 31

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஏழையெளிய மக்களுக்காக, வேளாண்மைப் பெருங்குடி மக்களுக்காக, நலிந்த மக்களுக்காக, அவர்களின் நல்வாழ்வுக்காக வரலாறு காணாத அளவுக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறோம். பல்வேறு இடர்பாடுகளை, வறட்சி நிலையை எல்லாம் கூடப் பொருட்படுத்தாமல் பல்வேறு திட்டங்களுக்காக பெரும் பணத்தை ஒதுக்கி நிறைவேற்றுவதற்காக மட்டும் 322.34 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் இல்லாமல் இருக்குமானால்கூட ஒரு 26 கோடி ரூபாய் அளவுக்கு பற்றாக்குறை இல்லாமல் சர்பிளஸ் பட்ஜெட்டாகவே தந்திருக்கலாம். பற்றாக்குறை பட்ஜெட் என்றால் அது கொள்கை அடிப்படையில் வந்தது. குதிரைப் பந்தய ஒழிப்பின் மூலம் நமக்கு 6 கோடி ரூபாய் போகிறது. இவை எல்லாம் கொள்கை அடிப்படையில் வந்தவை. அதுபோல் இங்கே பேசும்போது கணக்கப்பிள்ளை பட்ஜெட் என்றார்கள். கணக்கப்பிள்ளை பட்ஜெட் என்றால் இப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம் போட்டு நாம் வருவாயை இழக்க வேண்டிய நிலைமை வராது. வேறு மாநிலங்களைப் போல் பட்ஜெட் தயாரித்தால் நாம் சர்பிளஸ் பட்ஜெட் போட்டிருக்கலாம். வரவு-செலவுகளை வேறு வழியில் திருப்பி இருக்கலாம். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்கள் ஏழையெளிய மக்களுக்காக, கொள்கையை நிலைநாட்டுவதற்காக, தமிழகம் இந்தியாவிலேயே திட்டங்களை நிறைவேற்றுவதில் முன்னோடியாக இருக்க வேண்டும் என்பதற்காக, திட்டப் பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக நல்லெண்ணத்துடன் செயல்பட்டதால் இந்த 131 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை பட்ஜெட் போட வேண்டி வந்தது. பற்றாக்குறை ஏற்பட்டது பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்களும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அந்த வகையில். மத்திய அரசைப் பொறுத்தவரையில் ஆண்டுக்காண்டு எவ்வளவு பற்றாக்குறை பட்ஜெட் போடப்பட்டுள்ளது என்பதை இங்கேயுள்ள அவை உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நான் குறிப்பிடுகிறேன். 1979 ஆம் ஆண்டிலிருந்து நாம் பார்ப்போமானால் 1979-80-ல் மத்திய அரசு 2,620 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை பட்ஜெட் போட்டிருக்கிறது. 1980-81-ல் 3,474 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை பட்ஜெட் போட்டிருக்கிறது. 1981-82-ல் 2,412 கோடி ரூபாய்க்கு பற்றாக்



1987 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

குறை பட்ஜெட் போட்டிருக்கிறது. 1982-83-ல் 2,476 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை பட்ஜெட் போட்டிருக்கிறது. 1983-84-ல் 3,500 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை பட்ஜெட் போட்டிருக்கிறது. 1984-85-ல் 5,945 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை பட்ஜெட் போட்டிருக்கிறது. 1985-86-ல் 4,490 கோடி ரூபாய் பற்றாக்குறை மதிப்பீடு. ஆனால் உள்ளபடியே ஏற்பட்டது 4,937 கோடி ரூபாய் பற்றாக்குறை. அதுபோல் 1986-87-ல் பற்றாக்குறை பட்ஜெட் மதிப்பீடு ரூபாய் 3,703 கோடி. ஆனால் உள்ளபடியே ஏற்பட்ட பற்றாக்குறையோ ரூபாய் 8,285 கோடி. இந்தியாவில் பண வீக்கம் எந்த அளவுக்கு பாதகத்தை ஏற்படுத்தும் என்பதையும், விலைவாசி உயர்வு எந்த அளவுக்கு உயரும் என்பதையும் இந்த அவை உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நான் இதனைச் சொல்கிறேன்.

அதுபோல் 1987-88-ல் 5,688 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை பட்ஜெட் போட்டிருக்கிறார்கள். ஆனால் பொருளாதார வல்லுநர்களும் மற்றும் உள்ளவர்களும் சொல்வதுபோல் சென்ற ஆண்டு கணக்குப்படி பார்த்தால் பற்றாக்குறையின் இறுதி அளவு 10 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்குப் போகும் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நாஞ்சிலார் அவர்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1985-90 வரை மத்திய அரசு பட்ஜெட்டில் ஏற்படும் பற்றாக்குறை பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். 16 ஆயிரம் கோடி ரூபாய் வரை இருக்கலாம் என்பது 7-வது ஐந்தாண்டுத் திட்டக் காலம் முழுவதற்கும் ஒப்புக்கொள்ளப்பட்ட பற்றாக்குறை ஆகும். இதுவரை, 1985-86, 1986-87 வரை பற்றாக்குறை ரூபாய் முறையே 4.937, 8,285 கோடி ஆகிவிட்டது. 1987-88-ல் 5 ஆயிரம் என்பது இறுதியில் 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் போகுமானால் இறுதியில் இதுவே 22 ஆயிரத்து 222 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை ஆகிவிடும். அதைத் தவிர இன்னும் 2 ஆண்டுக்காலம் மீதியிருக்கிறது. இறுதியாக இது 35, 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்குப் போனால் இவை அத்தனையையும் இந்தியாவிலிருக்கிற 22 மாநிலங்களும் சேர்ந்துதான் தாங்க வேண்டி வரும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்கின்றேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 31

(பிற்பகல் 12-50)

அதுமட்டுமல்லாமல், பண வீக்கம் ஏற்படும் என்றுகூடச் சில நண்பர்கள் குறிப்பிட்டார்கள். மாநிலத்திலே ஏற்படுகின்ற பற்றாக் குறையை மாநிலம்தான் சரிக்கட்ட வேண்டும். மாநிலம் வரவின் மூலமாகவோ, எதிர்பார்க்கப்படுகின்ற வரவுகள் மூலமாகவோ அல்லது மத்திய அரசு கொடுக்கின்ற டிஸ்கிரிஷனரி அஸிஸ்டன்ஸ் மூலமாகவோ மத்திய அரசு கொடுக்கின்ற உதவியின் மூலமாகவோ அல்லது வரி போடுவதன் மூலமாகவோ அட்ஜஸ்ட் பண்ண முடியுமே தவிர, பண வீக்கத்தை உண்டாக்க மாநில அரசினிடத்திலே அதிகாரமே இல்லை. வீங்க வைக்கின்ற இயந்திரமே என்னிடத்திலே இல்லை. வீங்க வைக்க வேண்டுமென்றால் எனக்கு ஒரு இயந்திரம் தர வேண்டும். பிரஸ் ஒன்று தர வேண்டும். அதைத் தந்தால் மிகமிக நல்லதுதான். அதை இங்கேயே எங்கேயாவது ஒரு இடத்தில் வைத்து அடிக்கலாம்—நோட்டு. வீங்க வைப்பது நாசிக்கில், அவர்கள்தான் வைத்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றை நான் சொல்கிறேன். 14—3—1986-லே நாட்டிலே புழங்கப்பட்ட நோட்டு 25,833.67 கோடி. ஓராண்டிலே 13—3—1987 வரையிலே கணக்குப் போட்டுப் பார்த்தால் 29,127.97 கோடி. ஓராண்டிலே மட்டும் கூடுதலாக அடித்த நோட்டு 3,294.30 கோடி. மூன்றாயிரம் கோடிக்கு அவர்கள் கூடுதலாக நோட்டு அடித்து விட்டிருக்கிறார்கள். அப்பொழுதுதான் அவர்களுடைய பற்றாக் குறையைச் சமாளிக்க முடியும். அடித்துப் போட்டும்கூட சமாளிக்க முடியாமல், நாலாயிரத்துச் சில்லறையாக இருந்த பற்றாக்குறையை எட்டாயிரத்துச் சில்லறையாக மத்திய அரசு கொண்டுபோய் நிறுத்தியிருக்கிறது. இந்த ஒரு வாரத்துக் கணக்கைப் போட்டுப் பார்த்தாலும்கூட, 6—3—1987-லேயிருந்து ஒரு வாரக் கணக்கை எடுத்துக்கொண்டீர்கள் என்றால் கூட இந்த மாதத்திலே மார்ச்சிலே 6—3—1987-லேயிருந்து 13—3—1987 வரைக்கும் ஒரு வாரத்திலே 406 கோடி ரூபாய்க்கு புது நோட்டு அடித்து விட்டிருக்கிறார்கள். இப்பொழுது ஐயாயிரத்துச் சில்லறை பற்றாக்குறைக்கு இன்னும் அதிகமாக நோட்டு அடிக்க வேண்டும். பண வீக்கம் என்பது அங்கேதான் இருக்கிறது. அது வீங்க வீங்க ரூபாயினுடைய மதிப்பு குறைந்துகொண்டேதான் வரும். அதைத் தான் சரிக்கட்ட வேண்டும். அதற்காகத்தான் எகனாமிக் பேலன்ஸும் வேண்டும்,



1987 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கட்டுப்பாடும் வேண்டும், பொருளாதாரக் கட்டுப்பாடும் வேண்டுமென்ற அத்தகைய சூழ்நிலைகளை எடுத்துச் சொன்னார்கள்.

அதைத்தவிர இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். கடன் சுமை நாளுக்கு நாள் இன்னொரு பக்கம் வளர்ந்து கொண்டு போகிறது. அதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக நான் சொல்கிறேன். இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையிலே நம் மாநில அரசு, ஏன் மத்திய அரசும் கூட இருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். மத்திய அரசு என்பது யாரோ ஆப்பிரிக்காவிலேயிருந்து நடத்துகிறார்கள், ஆஸ்திரேலியாவிலிருந்து நடத்துகிறார்கள் என்று கொள்ள வேண்டிய அவசியமில்லை. அதிலே நமக்கும் பொறுப்பிருக்கிறது, நமக்கும் கடமையிருக்கிறது. ஆகவே அதையும் சீர்படுத்த வேண்டிய பொறுப்பு நம்மிடத்திலேயும் இருக்கிறது. அத்தனை பேரும் சேர்ந்து செய்ய வேண்டியதுதான். ஆனால் எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன்.

1950-51-லே மத்திய அரசினுடைய கடன் 2,833 கோடி. 1979-80-லே 34,283 கோடி. 1985-86-லே 89,308 கோடி வெளிநாட்டு, உள்நாட்டுக் கடன் மட்டும் இருக்கிறது. இதற்கு வட்டியும் கட்டிக்கொண்டு வருகிறோம் பல ஆயிரம் கோடி ரூபாய். இவற்றையெல்லாம் சமாளிக்க வேண்டிய நிலையில் இருப்பதன் காரணமாகத்தான் நாம் பல்வேறு கட்டங்களை அனுசரித்து அதற்கேற்றபடி வைக்கிறோம்.

மற்றொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். வரி விதிப்புக் கொள்கையைப் பொறுத்தவரையிலும் இன்றல்ல, என்றும் சரி, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயும் சரி, காங்கிரஸ் ஆண்ட பொழுதும் சரி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்த பொழுதும் சரி, அதற்குப் பிறகும் சரி, ஒரு சீரான சிறப்பான கொள்கையைக் கடைப்பிடித்து வருவதில் அந்தக் காலத்திலேயிருந்து இந்தக் காலம் வரையில் தமிழக செக்ரடேரியட் ஒரு சிறப்பான முறையிலே தான் இருந்து வருகிறது என்பதை நான் தெளிவுபட எடுத்துச்சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுதும்கூட நாம் [illegible]த்திக்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 31

கொண்டு வருகிறபொழுது, நாம் அகலக் கால் வைப்பதில்லை, அதற்காக எதையும் குறைத்துவிடவும் இல்லை. எப்பொழுது வரிவிதிப்புக் கொள்கையை நாம் நிறைவேற்றினாலும்கூட, பக்கத்து மாநிலங்கள், மற்ற மாநிலங்களை ஆராய்ந்தறிந்து, எந்த அளவிற்குத் தாங்கும் என்பதை அறிந்துதான் நாம் செய்கிறோம். கண்மூடித்தனமாக எப்பொழுதுமே எதையும் நாம் செய்வதில்லை. அந்த வகையிலேதான் நாம் போட்டுக்கொண்டு வருகிறோம்.

Economic and Political Weekly, Volume 22 No. 11 March 14, 1987. Relative tax effort of the States என்கின்ற தலைப்பின்கீழே Oommen என்கின்ற ஒரு பொருளாதார வல்லுநர் எழுதிய கட்டுரையிலே அழகுபடச் சொல்லியிருக்கிறார் :

The Nation has the right to know which State has contributed its mite to the Nation. The relative tax efforts of 16 major Indian States on the basis of performance in the early 80s has been dealt with in the Article. Any measure of tax effort has to be related to taxable capacity. One of the well-known measures of taxable capacity is the income.

எந்த மாநிலம் நிதி ஆதாரத்தைத் திரட்டுவதில் தன் வலிமையைக் காட்டியிருக்கிறது என்று அறிவது ஒரு இன்றியமையாத செயலாகும். 1980 ஆம் ஆண்டின் தொடக்கக் கட்டத்தில் 16 முக்கிய மாநிலங்களில் நிதி ஆதாரத்தைத் திரட்டும் பணிகளை அவர்கள் எப்படி நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை ஒப்பிட்டு ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். வரியைத் தாங்கும் அளவைப் பார்த்துத்தான் வரி விதிப்பு நடைபெறவேண்டும்; வரி விதிப்புத் திறன் அமைய வேண்டும் என்பது பொதுவாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கையாகும் என்று சொல்லிவிட்டு, குறிப்பிட்ட 16 மாநிலங்கள் கீழ்க்கண்ட வரிசைப்படி அமைகின்றன என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதில் முதல் இடத்தில் இருப்பது தமிழ்நாடுதான். தமிழ்நாடு முதல் இடத்தைப் பெறுகிறது என்றும், இரண்டாவது இடத்தைக் கர்நாடகம் பெறுகிறது என்றும்,



1987 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மூன்றாவது இடத்தைக் கேரளம் பெறுகிறது என்றும், நான்காவது இடத்தை ஆந்திரம் பெறுகிறது என்றும், ஐந்தாவது இடத்தை அரியானா பெறுகிறது என்றும், ஆறாவது இடத்தைப் பஞ்சாப் பெறுகிறது என்றும், ஏழாவது இடத்தை மத்தியப் பிரதேசம் பெறுகிறது என்றும், எட்டாவது இடத்தை மேற்கு வங்கம் பெறுகிறது என்றும், ஒன்பதாவது இடத்தை இராஜஸ்தான் பெறுகிறது என்றும், 10-வது இடத்தை உத்திரப்பிரதேசம் பெறுகிறது என்றும், 11-வது இடத்தை குஜராத்தும், 12-வது இடத்தை ஜம்மு-காஷ்மீரும், 13-வது இடத்தை ஒரிஸாவும், 14-வது இடத்தை பீகாரும் 15-வது இடத்தை அஸ்ஸாமும் பெறுகின்றன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் 3,150 கோடி ரூபாய் என்றாலும்கூட, இன்றைக்கு உள்ளபடியே ஒதுக்கப்பட்ட பணத்தைச் செலவழிக்க முடியாமல், திட்டத்தைக்கூட நிறைவேற்ற முடியாமல் போன மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டு உண்டு. திட்ட அளவை நிறைவேற்ற முடியாத மாநிலங்கள் உண்டு. ஆனால் நாம் மேற்கொண்டு 500 கோடி ரூபாய் அளவுக்குக் கூடுதலாக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட 1985-86 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட பணம் 960 கோடி ரூபாய் என்றாலும் நம்முடைய சாதனை 1,012 கோடி ரூபாய்; 52 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவழித்துள்ளோம். பல இக்கட்டான கட்டங்கள் இருந்தபோதிலும் கூட 1986-87 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டது 1,153 கோடி ரூபாய் என்றாலும் சாதனை 1,200 கோடி ரூபாய்; 47 கோடி ரூபாய் கூடுதலாகத்தான் வரும்.

இப்போது கூட வறட்சியான நிலைமை இருந்தாலும், நாம் இக்கட்டான கட்டத்தில் இருக்கும்போதும், 131 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட் போடும் இக்கட்டான சூழ்நிலையிலும், திட்டப் பணிகள் குறையக்கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையில், இன்றைக்குத் திட்டக் குழு அனுமதித்திருப்பது 1,250 கோடி ரூபாய் என்றாலும் நாம் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் செலவழிக்க எண்ணியிருப்பது 1,341 கோடி ரூபாய்;

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 31

கூடுதலாக 91 கோடி ரூபாய் திட்டப் பணிகளுக்குச் செலவிடப் படும் என்று சொல்லியிருக்கிறோமே தவிர நிதிநிலைமை காரணமாக, பற்றாக்குறை காரணமாக திட்டப்பணிகளைக் குறைத்துவிட்டோம் என்று சொல்லவில்லை.

அது மட்டுமல்ல.. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1987-88 ஆம் ஆண்டுக்கு தமிழக அரசு கணிசமான அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்று இராஜ்ய சபையில் 6—3—1987 அன்று நடைபெற்ற ஒரு விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது தெளிவுபடச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் புள்ளிவிவரத்தைப் பார்த்தால் மகாராஷ்டிரம் கொஞ்சம் அதிகமாக ஒதுக்கியிருக்கிறது. அதற்கு அடுத்து தமிழ்நாடும், அதற்கு அடுத்தபடியாக ஆந்திரம், குஜராத், மேற்கு வங்காளம், கர்நாடகம், ஒரிசா, பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் வருகின்றன என்றும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போன்றே நிதிநிலை அறிக்கையில் சொல்லும்போது ஒவ்வொரு துறைக்கும் எந்த அளவுக்குத் தேவையோ அந்த அளவுக்கு நிதி ஒதுக்கிடு அதிகமாக ஆக்கப்பட்டிருக்கிற பாங்கினை நாம் தொடர்ந்து பார்த்துக்கொண்டு வரலாம். திட்டப்பணிகளை நிறைவேற்றுவதில் கூட 1987-88 ஆம் ஆண்டுத் திட்டப்பணிகளைப் பற்றி விளக்கமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. திட்டப் பணிகளை நிறைவேற்றுகின்றபோது வேலைவாய்ப்பு இல்லை, இல்லை என்று சொல்ல முடியாது. இவ்வளவு கோடி ரூபாய் அதிகமாகச் செலவழிக்கிறோம் என்றால் வேலைவாய்ப்புக்களை உருவாக்குகின்ற அடிப்படையில் தான் இந்தத் திட்டப்பணிகளை நிறைவேற்றுகிறோம். நாட்டில் இருக்கிற அத்தனை பேர்களுக்கும் அரசாங்கமே வேலை வாய்ப்பைத் தர முடியாது. திட்டங்களின் வாயிலாக தனியார் துறையிலும், பொதுத் துறையிலும், கூட்டுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும், கதர்-கிராமக் கைத்தொழில் மூலமும் இவை எல்லாவற்றிலும் சேர்ந்துதான் வேலைவாய்ப்பை உருவாக்கித் தர முடியும். அந்தவகையிலே பார்த்தால் வங்கிகள் தருகின்ற கடன் அடிப்படையில்தான் பல்வேறு தொழில் துறைகள், வேளாண்மைத் துறை, வியாபாரத்-துறை, சிறு தொழில்கள் துறை ஆகிய அத்தனையும் வேலைவாய்ப்பை அளித்து வருகின்றன.



1987 மார்ச் 31] [டாக்டர் இரா: நெடுஞ்செழியன்]

(பிற்பகல் 1-00)

இந்த வகையில் இந்த நடைமுறை ஆண்டில் மட்டும் 960 கோடி ரூபாய் தமிழகத்தில் இருக்கிற எல்லா வங்கிகளும் சேர்ந்து வேளாண்மைத் துறைக்கும், சிறு தொழில்களுக்கும், வியாபாரத்திற்கும் மற்றவைகளுக்கும் கடனாகத் தந்திருக் கின்றன. அதை வைத்துக்கொண்டுதான் சிறுதொழில்கள் வளருகின்றன. அந்தப் புள்ளிவிவரங்களை எல்லாம், தொழில் மானியக்கோரிக்கை வருகிறபோது மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்துச் சொல்வார்கள்.

நான் அடிக்கடி எடுத்துச் சொல்வது மாதிரி 1977-லே 18 ஆயிரத்துக்கு மேல் இருந்தது. இப்போது 76 ஆயிரத்துக்கு மேல் ஆகி இருக்கிறது. சிலபல இடங்களில் சிலபல தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன என்றாலும் மின்சாரப் பற்றாக்குறை மற்றும் வேறு பல காரணங்களால் தானே தவிர நாளுக்கு நாள் தொழில்கள் வளர்ந்துகொண்டிருக்கிற பாங்கினைக் காணலாம். இப்படி வேறு பல நல்ல நிலைமை களும் வளர்ந்து கொண்டிருக்கின்றன என்பதை நாம் நன்றாக அறியலாம்.

20 அம்சத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அதனை நிறைவேற்றுவதிலும் கூட மூன்று ஐட்டம்ஸ் தவிர மற்றவைகளை எல்லாம் மிகச் சிறப்பாக நிறைவேற்றி இருக்கிறோம். நீர்ப் பாசனத்தைப் பொறுத்தவரையில் 130 சதவீதம் நிறைவேற்றி இருக்கிறோம். பயறு வகைகளைப் பொறுத்த வரையில் 334 பெர்சன்ட்; எண்ணெய் வித்துக்கள் 100 பெர்சன்ட்; ஐ.ஆர்.டி.பி. 74 பெர்சன்ட்—இது ஒன்றுதான் சற்றுக் குறைவு—என்.ஆர்.இ.பி. 122 பெர்சன்ட்; ஆர்.எல்.இ.ஜி.பி. 144 பெர்சன்ட்; உபரி நிலம் ஒதுக்கீடு 103 பெர்செண்ட். கொத்தடிமை நீக்கி வாழ்வளித்தல் 101 பெர்சன்ட்; ஆதிதிராவிட குடும்பத்திற்கு நல்வாழ்வு அளித்தல் 104 சதவிகிதம்; பழங்குடி மக்களுக்கு வசதிகள் செய்தல் 108 பெர்சன்ட். குடிநீர் வழங்கல் 100 பெர்சன்ட்; வீட்டுமனைப்பட்டா 107 பெர்சன்ட்; வீடு கட்ட உதவி 106 பெர்சன்ட்; குடிசைவாழ் மக்களுக்கு உதவி 137 பெர்சன்ட்; இ.டபிள்யூ.எஸ். வீடுகள் 111 சதவிகிதம்; மின்மயமாக்கப்பட்ட சிற்றூர்கள் 167 பெர்சன்ட்; மின் இறவைகளுக்கு மின்வசதி செய்தல் 102 பெர்சன்ட்; ஆக மூன்று ஐட்டங்களைத் தவிர

மற்றவற்றைப் பொறுத்த வரையில் எல்லாம் அதாவது 20 அம்சத்தைப் பொறுத்தவரையில் தமிழகம் தான் முன்னணியில் இருக்கிறது என்பதை இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ரிசர்வ் வங்கிக் கடனை வாங்குவதிலும் நாம் ஆண்டுக்காண்டு சிறப்பான திட்டத்தைச் செய்து, 1979-80-ல் ரிசர்வ் வங்கி கொடுத்த வகையிலே நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகிற பாங்கினை இங்கே நன்றாகக் காணலாம். கடன் உதவி பெற்ற வகையில் கூட 1964-லிருந்து 1986 வரையில் கணக்கிட்டால் முதலிடம் மகாராஷ்டிரம், இரண்டாவது இடம குஜராத், மூன்றாவது இடம் தமிழகம் என்று வருகிறது. 1985-86-ல் மட்டும் கணக்கிட்டுப் பார்த்தால் கூட உத்தரப் பிரதேசம் முதலிடம், மகாராஷ்டிரம் இரண்டாவது இடம்; குஜராத் மூன்றாவது இடம்; தமிழ் நாடு நான்காவது இடம் என்று வருகிறது.

இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் கடன் உதவி தனியார் தாப்பில் எவ்வளவு என்று பார்த்தால் மகாராஷ்டிரம் முதலிடம், குஜராத் இரண்டாவது இடம்; உத்தரப்பிரதேசம் 3-வது இடம்; தமிழ் நாடு 4-வது இடம் என்று வருகிறது. இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் அதாவது ஐ.டி.பி.ஐ. என்பதன் கடன் உதவி பிற்பட்ட பகுதிகளுக்கு என்ற முறையில் 1986 வரையில் தொடர்ந்து கணக்கிட்டுப் பார்த்தால் குஜராத் முதலிடம்; தமிழ் நாடு இரண்டாவது இடம்; உத்தரப்பிரதேசம் 3-வது இடம்; ஆந்திரா நான்காவது இடம் என்று வருகிறது. Industrial Credit and Investment Corporation of India Limited என்பதைப் பொறுத்தவரையில் 31—12—1985 நிலவரப்படி பார்த்தால் மகாராஷ்டிரம் முதலிடம்; குஜராத் இரண்டாவது இடம்; தமிழ் நாடு மூன்றாவது இடம்; கர்நாடகம் நான்காவது இடம். ஏன் இவற்றை எல்லாம் நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன் என்றால் எதுவும் நடைபெறவில்லை, தமிழ் நாடு பின்தங்கிவிட்டது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் முற்போக்கே இல்லை என்ற குற்றச்சாட்டுக்கு இடம் இல்லை என்பதற்காகத்தான். அதற்காகத்தான் இவற்றை எல்லாம் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





1977-78-ல் ரூ. 1,017 ஆக இருந்த தனி நபர் வருமானம் 1985-86-ல் 2359 ஆக வளர்ந்து இருக்கிறது. இம்மாநிலத்தின் ஸ்டேட் இன்கம் 4,809 கோடி ஆக இருந்தது 1985-86-ல் 12,290 கோடி ஆக வளர்ந்திருக்கிறது. அதேபோன்று இன்டெக்ஸ். அதாவது அகில இந்திய ரீதிக்கும், தமிழகத்திற்கும் கணக்கிட்டுப் பார்த்தால் ஒவ்வொரு ஆண்டிலும் அகில இந்திய அளவை விட தமிழகத்தின் அளவு அதிகமாகத்தான் இருக்கிறது. இந்தப் புள்ளிவிவரங்களை எல்லாம் தொழில்துறை மானியம் வருகிறபோது . . . .

**திரு. கி. மனோகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசும்போது தனி நபர் வருமானம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் கூடி இருக்கிறது, வளர்ந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், நேஷனல் ஆவரேஜ் என்பதை விட தனி நபர் வருமானம் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் குறைவு; கேரளத்தை விடக் குறைவு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சரிபார்க்கப்பட வேண்டிய ஒன்று. என்னிடத்திலே இப்போது அந்தப் புள்ளிவிவரங்கள் இல்லை. சரிபார்த்துச் சொல்கிறேன்.

ஏழையெளியவர்களுக்கு இலவச வழக்கு உதவியைத் தருவதில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. மத்திய சட்ட மற்றும் நீதித் துறை இணை அமைச்சர் திரு. எச். ஆர். பரத்வாஜ் அவர்கள் 18—3—1987 அன்று பாராளுமன்ற மக்களவையில் ஒரு வினாவுக்கு விடையளித்தபோது தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 1985-ல் 55921 பேருக்கும், 1986-ல் 50633 பேருக்கும் இலவச வழக்கு உதவி செய்து முதலிடம் பெற்றிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவது இடத்தை மத்தியப் பிரதேசமும், மூன்றாவது இடத்தை ஒரிஸ்ஸாவும் பெற்றிருக்கிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டி இருக்கிறார்கள்.

மற்றொன்று, இங்கே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது, வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவினுடைய நுழைவுக் கட்டண வசூல் பற்றி, அதனுடைய கணக்கு வழக்குகள் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆகவே அதைப்பற்றிய புள்ளி விவரங்களை இங்கே அவை முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 31

25—7—1985 முதல் அங்கே அது திறந்து விடப்பட்டு உள்ளே நுழைவதற்கு நுழைவுச் சீட்டுத் தரப்பட்டு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. 1985-86-இல் நுழைவுக் கட்டணமாக ரூ. 4,92,397 வசூலாகி இருக்கிறது. 26—11—85 முதல் கேமிரா எடுத்துச் செல்வதற்கு கட்டணம் விதிக்கப்பட்டு அதன்மூலம் அந்த ஆண்டு ரூ. 7,719 வசூலிக்கப்பட்டிருக்கிறது. பாட்டரியினால் இயங்கும் வாகனங்கள் அங்கே பயன்படுத்தப்பட்டு 22—3—86 முதல் பயன்படுத்தப்பட்டது. அதன்மூலம் ரூ. 8,652 வசூலிக்கப் பட்டது. ஆக 85-86-ல் மட்டும், அந்த நிதி ஆண்டில் மட்டும் வசூல் ரூ. 5,09,768 ஆகும்.

1986-87-ல் நுழைவுக் கட்டணம் மூலம் ரூ. 6,76,876.50 காசு. கேமிரா கட்டணம் மூலம் வசூல் ரூ. 20,955, பாட்டரியினால் இயங்கும் வாகனங்கள் மூலமாக ரூ. 89,646 மொத்தம் 1986-87-ல் ரூ. 9,81,497.50 காசு. 1985-86, 1986-87 ஆகிய இரண்டு ஆண்டு களுக்கும் சேர்த்து ரூ. 14,91,265.50 காசு அங்கே வசூலாகி இருக்கிறது. வசூலாகும் தொகை அடுத்த பணி நாளில்—வொர்க்கிங் டேயில்—சைதாப்பேட்டை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் ஃபாரஸ்ட் ரெமிட்டன்ஸஸ் என்ற தலைப்பின்கீழ் வரவு வைக்கப்படுகிறது. ஆகவே அந்தப் பணம் ஒன்றும் மோசம் போகவில்லை என்றும், வசூல் செய்யப்பட்ட மறுநாளே வங்கியில் கட்டப்பட்டு வருகிறது என்றும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** பேரவையினுடைய தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நான் சொல்லிய குற்றச்சாட்டுக்கு பதில் சொல்லும் வகையில், முறையாக வசூலிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைச் சொன்னார்கள். ரிப்போர்ட் ஆப் தி கம்ப்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல் ஆப் இந்தியா பக்கம் 88-இல் தெளிவாகச் சொல்லப்படுகிறது.

"In September 1984, Government ordered the opening of the Vandalur Zoological Park to the public from the 1st October 1984. After its formal inauguration and charging of entrance fees at the rate of Re. 1 per adult and 50 paise per child, the staff sanctioned for sale of tickets and regulation of visitors was posted with effect from 1st October 1984 and also 2.39 lakh persons visited the park during the period from October 1984 to February 1985. But, no entrance fees was charged from them."



1987 மார்ச் 31] [திரு. அ. ரகுமான்கான்]

என்று ஆடிட் ரிப்போர்ட்டிலேயே குறிப்பிட்டிருக்கிறது என்பதை சுட்டிக் காட்டி, அரசாங்க உத்தரவுக்கு பிறகும் கூட இந்த என்டிரன்ஸ் ஃபீஸ் வசூலிக்கப்படவில்லை என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்ற ஆதாரத்தை மீண்டும் நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் தணிக்கை அறிக்கை மூலம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தணிக்கை அறிக்கையில் சொல்லப்படு வதற்கு துறையினர் பதில் சொல்லித் தீரவேண்டும். அது கணக்குக் குழுவிற்கு வந்து சேரவேண்டும். அதிலே தப்பு இருக்குமானால் முறைப்படி யார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்க வேண்டி வரும். என்னிடத்தில் இலாகாவினர் 85 லிருந்து கொடுத்த கணக்கை நான் சொன்னேன். 84-லே எடுத்த கணக்கை அவர் படித்துக் காட்டியிருக்கிறார்கள். அதிலே தவறு இருக்கு மானால் அதை உள்ளபடியே தணிக்கை கண்டுபிடித்துச் சொல்லி யிருக்குமேயானால் அதற்கு டிபார்ட்மெண்ட் பதில் சொல்லியே தீரவேண்டும். அது பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டிக்கு முன்னாலே வந்து சேர வேண்டும். துறையினர் பதில் சொல்லித் தீரவேண்டும். அப்படித் தவறுகள் நடைபெறுமானால் அந்தத் தவறுகள் மீது கட்டாயம் நடவடிக்கையெடுக்கப்படும்.

(பிற்பகல் 1-10)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இதை ரகுமான்கான் அவர்கள் அன்றையதினம் பேசும்போது 'யார் கொள்ளை அடித்தார்கள்' என்று சொன்னார்கள். நான் கூட 'கொள்ளை அடித்தார்கள்' என்ற அந்த வார்த்தை வேண்டாம் என்று சொன்னேன். இன்றைய தினம் அவர் படித்த ஆங்கிலப் புத்தகத்தில் அதைச் சார்ஜ் செய்யவில்லை, வசூலிக்கவே இல்லை என்று படித்தார். வசூலிக்காத போது கொள்ளையடித்ததாகச் சொன்னது எவ்வளவு பெரிய தவறான தகவல் என்பது தெரிகிறது. இப்போது தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள் கிறேன். இதுபோன்ற தவறான தகவல்களை அவைக்குக் கொடுப்பதை உறுப்பினர் தவிர்க்க வேண்டும். தவிர்ப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

[1987 மார்ச் 31

**திரு. அ. ரகுமான்கான்:** ஆடிட்டர் ரிப்போர்ட்டில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாதம் 25 ஆயிரம் ரூபாய் வரவேண்டிய வருமானம் வரவில்லை; வசூலிக்கப்படவில்லை; உத்தரவு போட்டதற்குப் பிறகும், ஸ்டாப் போட்டதற்குப் பிறகும் வசூலிக்கப்படவில்லை; அதற்கான காரணங்கள் தெரியவில்லையென்று எழுதியிருக்கிறார்கள். இதை நான் சுட்டிக் காட்டி இங்கே கேட்டேன். ரெக்கார்டிலே 25 ஆயிரம் ரூபாய் மாதாமாதம் வரவேண்டிய 'என்ட்ரன்ஸ் பீஸ்' வசூலிக்கப்படவில்லை என்று இருக்கிறதே, இது வசூலிக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டதா? அல்லது உண்மையில் வசூலிக்கப்படவில்லையா? இந்த விவரத்தை அரசாங்கத்திடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன் என்றுதான் குறிப்பிட்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் தெளிவாகப் புரிந்து கொண்டுதான் பேசுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் படித்தது மிகத் தெளிவாக இருக்கிறது. வசூலித்திருந்தால் 25 ஆயிரம் ரூபாய் வந்திருக்கும். வசூலிக்கப்படவில்லையென்று அதிலே இருக்கிறது. உறுப்பினர் படித்ததில் அந்த விவரம் இருக்கிறது. வசூலிக்காத போது கொள்ளையடிக்கப்பட்டதா என்று கேட்கும் வார்த்தைகளுக்கு அர்த்தமே இல்லை. ஆங்கிலத்தில் இருப்பதை நான் சரியாகப் புரிந்து கொண்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருவரும் பேசியதில் கொள்ளையென்ற வார்த்தைக்கே இங்கே இடமில்லை. கொள்ளையென்ற வார்த்தைக்கு அர்த்தமே வேறு. கொள்ளையென்றால் ஆங்கிலத்தில் 'டெகாய்ட்டி' என்று சொல்வார்கள்.
For dacoity, five or more persons are required and force also is necessary.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நான் சொல்வதைத் தவறாகப் புரிந்து கொண்டார்கள். ஆடிட்டர் ரிப்போர்ட்டில் இந்தத் தொகை வசூலிக்கப்படவில்லை என்று இருக்கிறது. அரசாங்கம் உத்தரவு போட்டதற்குப் பிறகு ஸ்டாப் போட்டதற்குப் பிறகு வசூலிக்கப்படவில்லையென்று ஆடிட்டர் ரிப்போர்ட்டில் சொல்லியிருந்தாலும் கூட நான் கேட்க விரும்புவது, வசூலிக்கப்படாததற்கு காரணம் என்னவென்று



1987 மார்ச் 31] [திரு. அ. ரகுமான்கான்]

தெரியவில்லையென்று சொல்வதால், வசூலிக்கப்பட்டு ரெக்கார்டில் கணக்கு காட்டாமல் மிஸ்-அப்ரோப்ரியேஷன் செய்யப்பட்டதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** வசூலிக்கப்படாததில் மிஸ்-அப்ரோப்ரியேஷன் என்பது எப்படி வரும்? எனக்கு ஒன்றும் புரியவில்லை. வசூலிக்கப்படவில்லை என்று சொல்கிறார். பிறகு எப்படி மிஸ்-அப்ரோப்ரியேஷன் வரும்? ஒன்றுக்கொன்று ஒத்துவரவில்லை. ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது. உறுப்பினர் தவறான தகவலை பத்திகையில் செய்தி வரவேண்டும் என்பதற்காகக் கொடுக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே வராது.
There should be an appropriation for misappropriation.

**திரு. அ. ரகுமான்கான்:** With the Chair's kind permission, I want to make a humble submission.
மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இங்கே நமது அமைச்சர் அவர்கள் பேசுகிற வாதம் எனக்குப் புரியவில்லை. வசூலிக்கப்படவில்லையென்று ரெக்கார்டிலே இருக்கிறபோது எப்படி காணாமல் போய் இருக்கும், தவறாக மிஸ்-அப்ரோப்ரியேஷன் பண்ணப்பட்டிருக்கும் என்று அவர்கள் கேட்கிறார்கள். நான் இங்கே சொல்ல விரும்புவது, அன்றைக்கும் சொன்னேன், இப்போதும் சொல்கிறேன், ஏன் வசூலிக்கப்படவில்லையென்பதற்கான காரணம் தெரியவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். கணக்கிலே காட்டாமல் மாயமாய் மறைந்து போய் விட்டதா? அரசாங்கம் விவரத்தைச் சொல்ல வேண்டும் என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, வசூலிக்கப்பட வேண்டிய ஒன்று வசூலிக்கப்படாமல் இருந்தால், ஏன் வசூலிக்கவில்லை, அதனால் அரசாங்கத்திற்கு இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டுவிட்டதே என்று தணிக்கை எப்போதும் சுட்டிக்காட்டும். அதற்குத் துறையினர் பதில் சொல்ல வேண்டும் ஏன் வசூலிக்கப்படவில்லை என்று. வசூலிக்கப்பட்டிருந்து, அதைக் கணக்கில் காண்பிக்காவிட்டால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதைப் போன்று, அது மோசடியாகப் பயன்படுத்தப்பட்டது என்று பொருள்படும். வசூலிக்கவில்லையென்றால் மோசடிக்கு இடமில்லை, ஏன்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 31

வசூலிக்கவில்லையென்பதற்குக் காரணம் சொல்லித் தீர வேண்டும். வசூலிக்கப்படாமல் இருந்தால் ஏன் வசூலிக்காமல் விட்டீர்கள், வசூலித்து இருந்தால் அரசாங்கத்திற்கு பணம் வந்திருக்கும், ஏன் இந்த நஷ்டத்தை ஏற்படுத்தினீர்கள் என்று தணிக்கையில் கேட்க அவர்களுக்கு உரிமை உண்டு. அதற்குத் துறையினர் பதில் சொல்ல வேண்டும். அதற்கு முறைப்படி அவர்கள் பதில் சொல்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து படித்து வேலையற்றவர்களுக்கு உதவித் தொகை வழங்குவது பற்றி உறுப்பினர்கள் சிலர் இங்கே குறிப்பிட்டார்கள். தற்போது வேலையற்றவர்களின் துயரைக் களையும் பொருட்டு, வேலையற்றவர்கள் உதவித் தொகை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு அரசாங்கம் அதனை நடைமுறைப்படுத்தி வருகிறது. 1—1—1986 முதல் 31—12—1986 வரையில் ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 38 நபர்களுக்கு ஏழு கோடியே 69 லட்சம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு இதே காலத்தில் 70,334 பேர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ. 5 கோடியே 61 லட்சம் ஆகும். இந்த நிதி ஆண்டு முடிவதற்குள், அதாவது 1—1—1987 முதல் 31—3—1987 வரை மேலும் ரூ. 1 கோடியே 55 லட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட உள்ளது. எனவே 1986-87 நிதியாண்டில் வேலைவாய்ப்பற்றோருக்கு உதவித் தொகையாக 9 கோடியே 24 லட்சம் ரூபாய் வழங்கப்படும். இதனால் பயன் பெறுவோர் எண்ணிக்கை 1,43,038 ஆக இருக்கும்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை பெறுபவர்களைப் பற்றிய விவரங்களை எல்லாம் கேட்டார்கள். அந்த வகையிலே 1987-ல் இது வரையிலும் பாம்பு கடித்ததினால் இறந்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை, இந்த ஆண்டு நிவாரணத் தொகை பெற்ற குடும்பங்களுடைய எண்ணிக்கை 2. வழங்கப்பட்ட தொகை 20 ஆயிரம் ரூபாய். சென்ற ஆண்டு 49 பேர்களுக்கு, 4 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய். 1985 ஆம் ஆண்டு 37 பேர்களுக்கு, 2 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய். கிணறு ஆழப்படுத்தும்போது, அதில் ஈடுபட்டு இருக்கும்போது, இறந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஈட்டுத் தொகை—19 பேர்கள்—1 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய். 1986 ஆம் ஆண்டு 29 பேர்கள், 2 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய்



1987 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இந்த ஆண்டு 4 பேர்கள், 40 ஆயிரம் ரூபாய் கட்டட வேலையில் ஈடுபட்டிருக்கும்போது, அல்லது மின்சாரம் தாக்கி இறந்த குடும்பங்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை—15 பேர்கள்—1 லட்சம் ரூபாய், 1986-லே 34 பேர்கள்; 3 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய். இந்த ஆண்டு 3 பேர்கள்; 25 ஆயிரம் ரூபாய்.

கண் பார்வை இழந்தவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை 1985-லே 8 பேர்கள், 28 ஆயிரம் ரூபாய். 1986-லே 2 பேர்கள், 6 ஆயிரம் ரூபாய். அந்த அளவிற்கு வழங்கப்பட்டு வருகிறது. இதைத் தவிர, விபத்தில் இறந்தவர்களுக்கு, விபத்துக்களால் உறுப்புக்களை இழந்தவர்களுக்கு ஈட்டுத் தொகை வழக்கம்போல் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் தெலுங்கு—கங்கைத் திட்டத்தைப் பற்றிக் கேட்டார்கள். நான் ஏற்கனவே ஆளுநர் உரைக்குப் பதில் சொல்லும் போது, தெளிவாகக் குறிப்பிட்டேன். அதற்குப் பிறகு சொன்ன கருத்துக்களை இங்கே பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். நம்மைப் பொறுத்தவரையிலும், நாம் நம்முடைய பங்கைச் செலுத்திக் கொண்டு வருகிறோம். ஆகவே, நாம் கொடுக்கிற அளவிற்கு அவர்கள் அவர்களுடைய பங்கையும் தரவேண்டும். 3 ஆண்டுக் காலத்திலே 200, 200 கோடி ரூபாய் செலவழிக்க வேண்டும். இதிலே நம்முடைய பங்கு முழுவதையும் தருவதற்கு நாம் தயாராக இருக்கிறோம். நம்முடைய யோசனை எல்லாம் அவர்கள், அவர்களுடைய பங்கைச் செலுத்த வேண்டும் என்பதுதான் இப்போதே நம்முடைய பங்கில் 8, 9 கோடி ரூபாயைக் கூடுதலாகத் தான் தந்திருக்கிறோம். அடுத்து அவர்களுடைய பங்கைத் தரவேண்டும் என்று நாம் சொல்கிறோம். அதை அந்த என்ஜினியர்களும் நம்மவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். உட்கார்ந்து பேசி, எவ்வளவு காலத்திலே முடிக்க வேண்டும் என்பதையும், அவர்களுடைய பங்கு என்ன, நம்முடைய பங்கு என்ன என்பதையும், பேசவேண்டும். அவர்கள் வற்புறுத்துவது, உங்களுடைய பங்கு முழுவதையும் தந்து விடுங்கள், எங்களுடைய பங்கை நாங்கள் மெதுவாகப் போடுகிறோம் என்று சொல்கிறார்கள். நாம் சொல்வது நிறைவேறுகிற அளவிற்கு உங்களுடைய பங்கை நீங்கள் தாருங்கள். எங்களுடைய பங்கை நாங்கள் தருகிறோம், நிறைவேற, நிறைவேற

உங்களுடைய பங்கைப் போடுங்கள், எங்களுடைய பங்கை நாங்கள் போடுகிறோம் என்று ஒரு நியாயமான அடிப்படையில் நாம் சொல்கிறோம். அதை அந்த என்ஜினியர்களும் ஒப்புக் கொண்டார்களே தவிர, கொடுக்க மாட்டோம் என்று சொல்லவில்லை. அந்த அடிப்படையிலேதான் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

**திரு. கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதி நீரைப் பொறுத்தவரையில், நாங்கள் கேட்ட தொகையை தமிழக அரசு தர மறுக்கிறது அல்லது தவறிக் கொண்டிருக்கிறது என்ற காரணத்தால் இந்தத் திட்டம் நிச்சயமாக நிறைவேறாது என்ற கருத்தை, ஆந்திர அமைச்சர், திரு. சீனிவாசலு ரெட்டி அவர்கள் அண்மையில் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(பிற்பகல் 1-20)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆந்திர அமைச்சர் அவர்கள் சொன்னது தேவையில்லாத ஒரு கூற்று. அது ஒரு நல்ல உறவை, நல்ல எண்ணத்தை வளர்க்காது. இதுபற்றி கருத்துக்களைப் பரிமாறுவதும் நல்லதல்ல. ஆகவே நல்ல உறவினுடைய அடிப்படையிலே தான் நாம் செய்ய வேண்டும். அவர்கள் எங்கெங்கோ போய் எதை எதையோ சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நம்முடைய பங்கு, ஏற்கனவே 48, 49 கோடி ரூபாயைத் தந்திருக்கிறோம். நாம் தரவேண்டியதற்கு மேலாகவே நம்முடைய பங்கு 9 கோடி ரூபாய் இருக்கிறது. மேற்கொண்டு பணிகள் ஆக ஆக நம்முடைய பங்கை தருகிறோம் என்று நாம் சொல்லியிருக்கிறோம். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் பணம் தராவிட்டால் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட தர மாட்டோம் என்று. அவர்களிடத்திலிருந்து வரவேண்டிய 5 டி.எம்.சி. தண்ணீர் மகாராஷ்டிராவில் இருந்து வரவேண்டிய 5 டி.எம்.சி. தண்ணீர் கர்நாடகாவில் இருந்து வரவேண்டிய 5 டி.எம்.சி. தண்ணீர் ஆக 15 டி.எம்.சி. தண்ணீரில், 10 டி.எம்.சி. ஆந்திரா தண்ணீர் அல்ல. மகாராஷ்டிராவும் கர்நாடகாவும் தரவேண்டியது ஆந்திரா மூலமாக அது வருகிறது. ஆனால் இருக்கிற பிரச்சினை வேறு வகையில் இருக்கிறது. நீர்ப்பாசனத் திட்டத்தைப் பொறுத்த வரையில் மகாராஷ்டிராவுக்கும் ஆந்திராவுக்கும் கர்நாடகத்திற்கும் ஆந்திராவுக்கும் தகராறு இருக்கிறது. அதைத் தீர்க்கத் தான் மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் வந்து உட்கார்ந்து பேச்சு வார்த்தை எல்லாம் நடத்தினார்கள். இந்தத் தண்ணீரை நமக்குத் தருவதிலே மகாராஷ்டிராவுக்கோ, அல்லது கர்நாடகத்திற்கோ ஏற்கனவே செய்த ஒப்பந்தத்தின்படி எந்தத் தகராறும் இல்லை. இப்போது உள்ள அந்த தகராறு தீர்க்கப்படுமானால் இந்தத்திட்டம் நிறைவேறும். அதில் ஒன்றும் தகராறு இல்லை என்று ஆந்திரா வாதாடிக்கொண்டு இருக்கிறது. இந்தப் பேச்சு வார்த்தைகள் சுமுகமாக முடிந்தால் தான் மத்திய அரசு அனுமதி அளிக்கும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். நடந்து கொண்டு இருக்கும் இந்தப் பேச்சு வார்த்தை சுமுகமாக முடிய வேண்டும் என்பதுதான் நம்முடைய எண்ணம். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கூறுவது போன்று விரைவில் அது நிறைவேற வேண்டும். நமக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பது தான் நம்முடைய பிரச்சினை.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெலுங்கு கங்கை திட்டத்திற்கு ஒப்பந்தம் செய்கிற போது இவ்வளவு ஆண்டு காலத்திற்குள் இது நிறைவேற்றப் படும் என்ற ஷரத்து ஏதாவது இடம் பெற்று இருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2, 3 ஆண்டு காலத்திற்குள்ளாக இதை முடிக்க வேண்டும் என்பது நம்முடைய எண்ணம். ஆகவே இந்தத் திட்டத்தின் மிக முக்கியமான பகுதி 600 கோடி ரூபாய் அளவுக்கு உள்ளது. இது கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய் அளவுக்கு போனாலும் கூட சில முக்கியமான பகுதிகளை மட்டும் எடுக்க வேண்டும், 3 ஆண்டு காலத்திற்குள்ளாக முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இப்போது பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

[1987 மார்ச் 31

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்காததற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகத்திற்கும், மகாராஷ்டிரத்திற்கும் இதிலே ஒரு பிரச்சினை இருக்கிறது. அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள். அந்தப் பிரச்சினை தீர்க்கப்படாத வரையில் மத்திய அரசு அந்த அனுமதியைத் தருவதற்கு இல்லை என்ற அளவுக்கு இருக்கிறார்கள். ஆகவே தான் மத்திய அரசின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் 3 மாநில அமைச்சர்களையும் கூட்டி வைத்து அதைத் தீர்ப்பதற்காக அண்மையில் ஒரு முயற்சியை எடுத்தார்கள். அது தீர்ந்து விடுமானால் இந்தப் பிரச்சினை எளிதாக முடியும். மத்திய அரசு அனுமதியைத் தரும்.

இந்தத் தெலுங்கு கங்கைத் திட்டத்தை, சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குகின்ற திட்டத்தைத் துவக்கி வைத்தவரே இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தான். ஆகவே கர்நாடகத்தில் இருந்தும், மகாராஷ்டிராவில் இருந்தும் ஆந்திராவில் இருந்தும் தலா 5 டி.எம்.சி. தண்ணீரைக் கொடுக்க வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்தவர்களும் அவர்கள் தான். அதிலிருந்து மத்திய அரசு பின் வாங்குவதற்கு இடம் இல்லை. ஆனால் அதிலே ஏற்படுகிற சங்கடத்தினால் இந்தப் பிரச்சினை நீடித்துக் கொண்டு இருக்கிறது.

**திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அம்மையார் அவர்கள் கேட்ட கேள்வி எத்தனை ஆண்டுக்குள்ளாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும், முடிக்கப்படும் என்பதைப் பற்றி ஒப்பந்தத்தில் அல்லது பேச்சுவார்த்தையில் ஏதாவது சரத்துக்கள் உண்டா என்பது. ஏற்கனவே ஆந்திரா அமைச்சர் சொன்ன கருத்தை நான் சொன்னபோது மிகச் சாதாரணமாக நமது நிதி அமைச்சர் அவர்கள், அவர்கள் போகிற இடத்தில் எல்லாம் ஒவ்வொன்றாகப் பேசிக் கொண்டு இருக்கிறார் என்று



1987 மார்ச் 31] [திரு. கி. மனோகரன்]

கருத்தை—அதற்கு தரவேண்டிய மதிப்பை தராமல் பேசினார்கள் என்பதற்காக நான் தினமணியில் வந்த செய்தி ஒன்றை * * அவருடைய கருத்துக்களை—வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவையில் பிரஸ் ரிப்போர்ட்டை வைத்து நாம் விவாதிப்பதே கிடையாது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கே அவர் நான் இப்படிச் சொல்லவில்லை என்று சொல்லிவிட்டால் இவருடைய நிலைமை என்ன ஆவது. ஆகவே, இப்படிச் சொல்வது சரி அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாம் கடைப்பிடித்து வருகின்ற மரபு, பிரஸ் ரிப்போர்ட்டை வைத்து நாம் விவாதிப்பதே இல்லை. ஆகவே, தினமணி பத்திரிகையை மேற்கோள் காட்டிப் பேசிய அந்த வாசகங்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தெலுங்கு கங்கைப் பிரச்சினையைப் பொறுத்த அளவிலே ஆந்திர மாநிலம் இங்கே தமிழகத்திற்குத் தண்ணீர் கொடுப்பதை விட அவர்களுடைய பகுதிகளில் விவசாயத்திற்குப் பயன்படுத்திவிட்டுத் தான், கடைசியாக நம்முடைய திட்டத்திற்குக் கொடுப்பதாக தற்போது அந்த அரசாங்கம் வேலை செய்துகொண்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய விருப்பம், நமக்கு உடனடியாக குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகத் தண்ணீர் வந்தாக வேண்டும் என்பது தான். அப்படி வருகிறபோது நம்முடைய பட்ஜெட்டிலே பணத்தை ஒதுக்க வேண்டுமென்று சொன்னால், எங்களுடைய பணத்தை எங்களுடைய பங்கை நாங்கள் செலுத்துகிறோம். எவ்வளவு செலவாகிறதோ அதிலே குறிப்பிட்ட பங்கைக் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று தான் நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் காரியத்தை முடித்த பிறகு தான், நமக்கு தண்ணீர் கொடுக்கக் கூடிய அளவிற்கு அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1987 மார்ச் 31

**திரு. கி. மனோகரன்:** தினமணிப் பத்திரிகையை மடித்து வைத்துவிட்டேன். இது வேறு விஷயம். மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசும்போது ஸ்ரீநிவாசலு ரெட்டி அவர்கள் அப்படிப் பேசினார் என்று நான் சொன்னதற்கு அவர் நாளைக்கு மறுத்தால் என்னுடைய கதி என்னவாகும் என்று அவர் கேட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது முழுமையாகப் போய்விட்டது. அது விவாதத்தில் இல்லை. திரும்ப அதை விவாதிக்க வேண்டாம்.

**திரு. கி. மனோகரன்:** அதைத்தான் நான் அவருக்குச் சொல்கிறேன். பேசிவிட்டு நான் பேசவில்லை என்று மறுக்கின்ற அளவிற்கு ஸ்ரீநிவாசலு ரெட்டி அவர்கள் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்கள் எப்போதுமே பந்தை ஆடச் சொன்னால் ஆளை இடித்துத் தள்ளுவதுதான் அவருக்கு வழக்கம். ஆகவே அதுபற்றி இப்போது ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் தெலுங்கு கங்கைத் திட்டத்தை அல்லது கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைப் பற்றி ஒரு வகையான குழப்பம் இருப்பதைத் தெளிவுபடுத்துவது அரசினுடைய கடமை என்று கருதுகிறேன்.

ஆந்திரம், கர்நாடகம், மராட்டியம் ஆகிய 3 மாநிலங்களும், 5 டி.எம்.சி. என்ற வகையில் 15 டி.எம்.சி. தண்ணீரைச் சென்னை மாநகரத்திற்குக் குடிநீராக வழங்க ஒப்புக்கொண்டுள்ளன. இந்தக் 15 டி.எம்.சி. தண்ணீரை, நாம் ஆந்திரத்திலுள்ள ஸ்ரீசைலத்திலிருந்து அல்லது எந்த இடத்திலிருந்து எடுத்துக் கொள்கிறோம் என்பதை நாமும் ஆந்திர அரசும் சேர்ந்து முடிவு செய்து கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் நாம் சேர்ந்து முடிவு செய்து 15 டி.எம்.சி. பெற்றுக் கொள்வதாக ஒப்பந்தம் போட்டிருக்கிறோம். பிரச்சினை என்னவென்றால், கடலில் வீணாகின்ற கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த ஆந்திர அரசு முயலுகிறது. ஆகவே அவர்கள் இதற்காக ஒரு கால்வாயை வெட்டுகிறார்கள். நாம் குடிநீருக்கு என்று தனியாக ஒரு கால்வாயை ஸ்ரீசைலத்திலிருந்து



1987 மார்ச் 31] [மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்]

வெட்டுவது என்றால் அது ரூ. 600 ரூ. 700 கோடிக்கு மேல் போகும். ஆக இரண்டையும் ஒன்றாக ஆக்கும்போது நமக்கு இரண்டுவிதமான நன்மைகள். ஒன்று நமக்கு தர வேண்டிய தண்ணீரின் அளவை ஆந்திர அரசு தனது எல்லை யிலே தருவதற்கு ஒப்புக் கொள்கிறது. இரண்டாவதாக நாம் தனியாக வாய்க்கால் வெட்டிக்கொண்டு வருவது என்றால், அந்தத் தண்ணீரை அங்கேயுள்ள விவசாயிகளோ, மற்றவர்களோ பயன்படுத்துவார்களேயானால், இங்கே வந்து சேர்வதற்கான உத்தரவாதம் இல்லை. இந்த 15 டி.எம்.சியினால் எந்த மாநிலத் திற்கும் எந்த விதமான இழப்பும் கிடையாது. ஏனென்றால், வெள்ளக் காலத்திலே அந்தத் தண்ணீரை நாம் பிரிக்கின்றோம். கிருஷ்ணா ஆற்றிலிருந்து அதைக் கொண்டுவந்து இங்கே சேர்த்து வைத்துக்கொண்டு, கோடை காலத்திலே பயன்படுத்து கின்றோம். ஆகையால் அவர்களுக்கு இதிலே எந்த விதமான பாதிப்பும் கிடையாது. இப்போது இருக்கின்ற பிரச்சினை கர்நாடகமும், மராட்டியமும், ஆந்திரா தண்ணீரை பயன்படுத்தி னால், தங்களுக்கு எதிர்காலத்தில் பாதிப்பு ஏற்படுமோ என்ற ஒரு சந்தேகத்தைக் கிளப்புகிறார்கள். ஆந்திர அரசு என்ன சொல்லு கிறது என்றால் கடலில் விழுகின்ற தண்ணீரை நாங்கள் பயன் படுத்துகிறோம். உங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட அளவை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று ஆந்திர அரசு சொல் கிறது. ஆக இந்தப் பிரச்சினையில் மத்திய அரசாங்கத்திடத்திலே அல்லது பிரதம மந்திரியிடத்திலே பேசி, கர்நாடகத்திற்கும், மராட்டியத்திற்கும் இருக்கக் கூடிய அச்சத்தைப் போக்கி, அவர் களுக்கே ஒதுக்கப்பட்ட, கிருஷ்ணா ஆற்றிலிருந்து ஒதுக்கப் பட்ட தண்ணீரை பாசனத்திற்காக என்று அவர்கள் பயன் படுத்திக் கொள்ளட்டும். அது இன்னும் 50 ஆண்டுகள், 100 ஆண்டுகள் ஆகலாம். அது வரையில் கடலில் போய் விழுகின்ற தண்ணீரை நாங்கள் பயன்படுத்திக் கொள்கிறோம். அதை உரிமையாக நாங்கள் பின்னாலே [illegible] மாட்டோம் என்று ஆந்திர அரசு சொன்னால், இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும். இந்தப் பிரச்சினை தீர்ந்தால்தான் இந்தத் திட்டத்திற்காக ஆகும் செலவிற்கு மத்திய அரசும் நிதி ஒதுக்கமுடியும். அல்லது உலக வங்கி போன்ற நிறுவனங்களிலிருந்தும் நிதி ஒதுக்கம் பெறமுடியும். நாம் கொடுக்கின்ற 30 கோடி 40 கோடி ரூபாயில் இந்தத்திட்டம் நிறைவேறாது. இதை இந்திய அரசாங்கத்திலே எடுத்துச் சொல்வதற்கு ஆந்திர முதல்வரும், அதே போல மா

[மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்] [1987 மார்ச் 31

(பிற்பகல் 1-30)

முதல்வர்களும் அங்கே போய்ப் பேச வேண்டும். ஆனால் என்ன காரணத்தினாலோ அங்கே பேசுவதற்கு அவர்களை அழைத்தாலும் கூட போகமாட்டேன் என்று சொல்லிவிட்டு ஏதோ ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்று சொல்வதைப் போல நம்மிடத்திலே 30 கோடி கொடுக்கவில்லை, 15 கோடி கொடுக்கவில்லை என்று அங்கேயுள்ள நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றார் என்றால், அவர் வேண்டுமென்றே பேசுகின்றார் என்றுதான் அதற்குப் பொருளே தவிர காரியம் நடக்க வேண்டும், அதற்கு மைய அரசைப் பார்த்து மற்ற மாநில முதல்வர்களிடத்திலே ஏற்பட்டிருக்கின்ற அச்சத்தைப் போக்குவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பதற்கு அவர்கள் முன்வரவில்லை என்பதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள்கூடச் சொன்னார்கள். கர்நாடக மாநிலத்திலே அந்த முதலமைச்சர்கூட இதைத்தான் சொல்லியிருக்கிறார் அந்தச் சந்தேகத்தைப் போக்குவதற்கு அவர்கள் வரவேண்டுமென்று. ஆனால் ஆந்திர அரசு போக மறுக்கிறது. இதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலை. ஏதோ மைய அரசுக்குப் பயந்து நாம் தராமல் இருக்கிறோம் என்பது அல்ல. அந்தத் திட்டம் உருப்படியாக நடக்க வேண்டுமானால் இந்திய அரசாங்கத்திலே, பாரதப் பிரதமரிடத்திலே அல்லது நீர்ப்பாசனத் துறை அமைச்சரிடத்திலே போய்ப் பேசி மற்றவர்களுக்கு இருக்கின்ற சந்தேகத்தையும் போக்கி திட்டத்திற்கு அனுமதி பெற்று நிதி ஆதாரங்களை மைய அரசு மூலமாகவோ அல்லது உலக வங்கி மூலமாகவோ அல்லது மற்ற இண்டர்நேஷனல் ஆர்கனைசேஷன்ஸ் மூலமாகவோ பெற்று, அதற்குப் பிறகு நாமும் பணம் கொடுத்தால்தான் அது நடக்குமே தவிர நம்முடைய பணத்திலே மட்டும் அந்தத் திட்டம் நிறைவேறாது என்ற காரணத்தினால்தான் இந்த நிலைமை. இதிலே யாருக்கும் யாரும் பயப்படவேண்டிய அவசியம் இல்லை. அஞ்சி நடக்க வேண்டிய அவசியமும் இல்லை. நம்முடைய மாநில முதல்வர் அவர்கள் கூட இது குறித்து தெளிவாக பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1987 மார்ச் 31]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே விளக்கியிருக்கிறேன். மீண்டும் விளக்க ஆசைப்படுகிறேன். ஆந்திர அரசு அறிவித்துள்ள விவகாரங்களின் அடிப்படையில் பல்வேறு இனங்களின் கீழ் செலவிடப்பட்ட தொகை ரூ. 112 கோடி. அந்தச் செலவுகளில் அடங்கியுள்ள இனங்களின் அடிப்படையில் நம்முடைய பங்கு ரூ. 31 கோடியே 50 இலட்சம் ஆகும். ஆந்திர அரசின் பங்கு ரூ. 80 கோடியே 50 இலட்சம் ஆகும். ஆனால் இதற்கு நாம் ரூ. 47 கோடி அளித்திருப்பதால், நாம் கொடுக்க வேண்டிய தொகைக்கு அதிகமாகத்தான் இப்போது நாம் கொடுத்திருக்கிறோம். நாம் கொடுக்க வேண்டியது 31½ கோடி ரூபாய் தான். ஆனால் நாம் கொடுத்திருப்பது ரூ. 47 கோடி. ஆகவே கூடுதலாகத்தான் நாம் தந்திருக்கிறோம். (குறுக்கீடு) ஆக நாம் சொல்வது ஒரு சுருக்கமான செலவுகளின் பட்டியலைத் தயார் செய்து அந்த இனங்களுக்கு குறிப்பிட்ட கால அட்டவணையை நிர்ணயித்து முடிக்க வேண்டுமென்று கேட்டுள்ளோம். இந்த அடிப்படையில் முக்கியம் அல்லாத சில இனங்களைத் தள்ளிவைத்து கிட்டத்தட்ட 600 கோடி ரூபாய்க்கு அவசியமான செலவினங்களை மட்டும் ஏற்றுக்கொண்டு தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் கொண்டுவரும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தலாம் என்று இரு அரசு தொழில் நுட்ப வல்லுநர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குறுகிய அளவில் செலவு செய்து, வரும் 3 ஆண்டுகளில் திட்டத்தை முடிப்பதாக இருந்தாலும் கூட ஏறத்தாழ 200 கோடி ரூபாய் அளவிற்கு ஆண்டு ஒன்றுக்கு செலவுகளை மேற்கொள்ள வேண்டும். நாம் கொடுத்தது போக பாக்கியுள்ள தொகை முழுவதுமே இந்த 3 ஆண்டுகளுக்குள் அளிப்பதாக இருந்தாலும், ஆந்திர அரசு இதற்கு 400 கோடி ரூபாய் மேலும் ஒதுக்க வேண்டியிருக்கும். இவ்வாறு ஒதுக்கீடு செய்வதாக ஆந்திர அரசினர் தெரிவிப்பார்களானால், அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு செய்ய செலவு செய்கின்ற தொகைக்கு ஈடாக நாம் கொடுக்க வேண்டிய பங்குத் தொகைகளையும் அதே ஆண்டில் கொடுப்பதற்கு தமிழக அரசு தயாராக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் பங்கு கொடுக்க, கொடுக்க நம்முடைய பங்கையும் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். ஆக இரு பகுதியினுடைய தொழில் நுட்ப வல்லுநர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில்

பணிகளை நிறைவேற்றலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தெரிவித்து இருக்கிறார்கள். இந்தக் கருத்துக்களின் அடிப்படையிலேதான் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு அவர்கள் தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். அடுத்து இங்கே பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும் காலத்தின் அருமை கருதி வேறு பல மானியக் கோரிக்கைகள் வருகின்றபோது பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அந்தந்தக் கருத்துக்களுக்கு விளக்கங்கள் தருவார்கள். இங்கே வரி விதிப்பு, வரி விலக்கு போன்றவைகளில் பல்வேறு வகைகளைச் செய்தோம் என்று சொன்னாலும், இந்த மாநிலத்தில் உற்பத்தியாகின்ற பொருள்களுக்கு ஊக்கம் தரவும் அண்டை மாநிலங்களுக்குச் சென்று அங்கே விற்பனையாகி அதன் மூலமாக நம்முடைய மாநிலத்தின் உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்று எந்தெந்த இனங்கள் கருதப்பட்டனவோ அந்தந்த இனங்களுக்கு மட்டும் நாம் ஓரளவிற்கு வரிச் சலுகைகள் தந்தும் அந்தந்த வரி இனங்களை ஓரளவுக்கு சரிபார்த்துக் குறைத்தும், ஓரளவுக்கு வரி விலக்கும், வரிச் சலுகையும் தந்து இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நிதிநிலை அறிக்கையின் மூலமாகத் தெளிவாக உணருவார்கள். இதற்கென்று மூவர் கொண்ட ஒரு குழுவை அமைத்து, குஜராத், மகாராஷ்டிரா, ஆந்திரா, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களுடைய வரி விதிப்பு அமைப்புகள், அங்கிருக்கின்ற வரித் தன்மைகள் ஆகியவற்றை ஆராய்ந்து ஒப்பிட்டுப் பார்த்ததற்கப்புறம்தான், அந்த வகையிலே, அந்த மாநிலங்களுக்குக் கூடாத வகையிலே, கிட்டத்தட்ட அந்த மாநிலங்களுக்குச் சரிசமமாக இருக்கிற வகையில், அல்லது அதற்கு உள்ளடங்கி இருக்கிற வகையிலேதான் நம்முடைய வரி விதிப்புக் கொள்கைகள் அமைந்து இருக்கின்றனவே தவிர பக்கத்து மாநிலங்களைவிடவும் பிற மாநிலங்களைவிடவும், கூடுதலாக எந்த வரி விதிப்பையும் நாங்கள் அமைக்கவில்லை; அனுமதிக்கவில்லை, என்பதை இந்த வாய்ப்பிலே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே கூடுதல் விற்பனை வரியைப்பற்றி எல்லோரும் எடுத்துச் சொல்கின்றபோது, இது கூடாது, கூடாது என்று எடுத்துச் சொல்கிறார்கள். இந்தக் கூடுதல் விற்ப

1987 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வரி இப்போது கர்நாடக மாநிலத்திலேயும் இருக்கிறது. மத்தியப் பிரதேசத்திலேயும் இருக்கிறது. குஜராத்திலேயும் இருக்கிறது. அது எல்லா இடங்களிலும் இருக்கிறது. நாம் ஏற்கனவே சென்னை மாநகருக்கு மட்டும் போட்டு இருந்தோம். இப்போது மதுரை, கோயம்புத்தூருக்கு மட்டும் அல்லாமல், எல்லா இடங்களுக்கும் சர்ச்சார்ஜ் போட்டிருக்கிறோம். (குறுக்கீடு) கூடுதல் டர்ன்-ஓவர் டாக்ஸ் என்று சொல்கிறேன். டர்ன்-ஓவர் டாக்ஸ் எல்லா மாநிலங்களிலேயும் இருக்கிறது. கர்நாடகம், மத்தியப் பிரதேசம், குஜராத் ஆகிய மூன்று மாநிலங்களிலேயும் இருக்கின்றது. அதைப்பார்த்துத்தான் நாம் இங்கே போட்டோம். இதிலே பாதிக்கப்படுகிறோம், பாதிக்கப் படுகிறோம் என்று சொல்கிறார்கள். ஏழு இலட்சத்திற்கு மேல் வாணிபம் செய்பவர்களுக்குத்தான் போட்டிருக்கிறோமே தவிர, ஏழு இலட்சம் ரூபாய்வரை வாணிபம் செய்கிற எந்தச் சிறு வியா பாரிகளையும், இது எந்த வகையிலேயும் பாதிக்காது.

ஆக, அப்படிப்பட்ட பதிவு செய்யப்பட்ட மொத்த வியாபாரி
கள் என்று புள்ளி விவரங்கள் கணக்கு எடுக்கின்றபோது,
தமிழகத்திலே ரெஜிஸ்டர்டு வியாபாரிகள் என்ற கணக்கை எடுக்
இப்போது, 2,72,195 பேர் வருகிறார்கள். அதிலே வரி செலுத்தும்
வணிகர்கள் மட்டும், இன்றைய நிலையில், 1,25,891 பேர் இருக்
கிறார்கள். மீதிப் பேர்கள் வரி செலுத்துகிற கட்டத்தில்
இல்லை. தற்போது இந்தக் கூடுதல் வரி செலுத்துகிறவர்கள்
5500 பேர்தான். அதாவது, அந்த 1,25,891 பேர் வரி செலுத்து
கிறவர்களில் கூடுதல் வரி செலுத்துகிறவர்கள் 5500 பேர்தான்.
இப்போது நாம் விதித்திருக்கிற கூடுதல் வரி கூட, கூடுதலாக 15
ஆயிரம் பேருக்குத்தான் வருகிறதே தவிர எல்லோரையும்
பாதிக்காது. சிறு வியாபாரிகளைப் பாதிக்காது. சாதாரணமான
வர்களைப் பாதிக்காது.

7 இலட்சம் ரூபாய்க்கு மேல் வாணிபம் செய்பவர்களுக்குத்
தான் 1.5 அளவுக்கு—அதுவும் 1.5 என்று இருந்தது 1.25-ஆக
மாற்றி இருக்கிறோம். 1.25 என்று இருந்ததை 1-ஆக மாற்றி
இருக்கிறோம். அதையும் குறைத்து இருக்கின்றோம். வசதி
படைத்தவர்கள் அதைத் தங்கள் கையிலிருந்து தரவேண்டும்.
என்ன சொல்கிறார்கள் என்றால், 'இதையும் எவேட்' பண்ணு

வதற்கு இடம் இருக்கும்' என்று. அப்படி என்றால் என்ன அர்த்தம்? வாங்குகிறவர்கள் தலையிலேதான் வைப்போம் என்கிறார்கள். லாபத்திலிருந்து அவர்கள்தான் தரவேண்டுமே தவிர, மக்கள் தலையில் வைக்கக்கூடாது என்ற நோக்கத்தில்தான் வைத்திருக்கிறோம். சாதாரண வியாபாரிகளை பாதிக்கக்கூடியது அல்ல. வசதி படைத்தவர்கள், இலாபம் சம்பாதிக்கிறவர்கள்— அப்படிப்பட்டவர்களுக்கு கூடுதலாகத் தருகின்ற இப்படிப்பட்ட பெரும் பொறுப்புகள் இருக்கும்போது, அந்த 15 ஆயிரம் பேர், இப்போது 5 ஆயிரம் பேர் ஆக, ஒரு 20 ஆயிரம் பெரும் வணிகர்களைத்தான் பாதிக்கும்.

மருந்து வியாபாரிகளில் 100 பேர்தான் மொத்த வியாபாரிகள். அவர்கள்தான் கூச்சலிடுகிறார்களே தவிர, எந்தவிதத்திலும் அவர்களைப் பாதிக்காது என்பதை இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாவலர் அவர்கள் அதிகமான விற்பனை செய்யக்கூடிய பெரிய வசதி படைத்தவர்களுக்குத் தான் இந்த வரித் திட்டங்கள் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு பத்திரிகைகளிலே பார்த்திருப்பீர்களேயானால், பெரிய, பெரிய ஓட்டல் முதலாளிகள் எல்லாம் தோசைக்கு, இட்லிக்கு விலை ஏற்றியிருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசு முன் வருமா? அதேபோல், மருந்தில் கூட உற்பத்தி செய்கின்ற வசதி படைத்தவர்களைத் தான் வரி பாதிக்கும் என்கிறார்கள். சாதாரண நடுத்தர மக்களைப் பாதிக்காது என்கிறார்கள். அப்படியானால், வரியேற்றத்தின் காரணமாக மருந்து விலை உயரக்கூடிய சூழ்நிலை இருக்கிறதே, அதைத் தடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு.)

(பிற்பகல் 1-40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாகக் கேளுங்கள். (குறுக்கீடு) நான்தான் ரகுமான்கானை அனுமதிக்கவில்லையே, உட்காருங்கள். ஒருவருக்கு அனுமதி கொடுத்தால், இன்னொருவருக்கும் கொடுக்க வேண்டும்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று கூடுதல் விற்பனை வரி கர்நாடகத்திலே இருக்கிறது. ஏற்கெனவே 5 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டவர்களுக்கு கூடுதல் விற்பனை வரி இருந்தது. ஓரளவுக்குச் சலுகை செய்யவேண்டும் என்பதற்காக கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்கள் இந்த இலக்கை 15 லட்சம் ரூபாய் வரையிலும் வியாபாரம் செய்பவர்களுக்கு என்று அளித்து, அதற்கு மேல் இருப்பவர்களுக்கு மட்டும் சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே போட்டார்கள். அதற்குப் பிறகும் வியாபாரிகள் என்ன தந்திரம் செய்தார்கள் என்றால், இரண்டு கிட்டத்தட்ட 12 லட்சம், 13 லட்சம் வரும்போது ஆக்கி, கம்பெனியாக்கி, 15 லட்சத்துக்கு வாாமலேயே ஏமாற்றினார்கள் என்ற உடனே, இந்த ஆண்டு பட்ஜெட்டிலே ஹெக்டே அவர்கள், அந்த 15 லட்சத்தை மறுபடியும் 5 லட்சம் ஆக்கி, 5 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் அத்தனைபேரும் கூடுதல் வரி செலுத்தவேண்டுமென்று, இந்த ஆண்டு பட்ஜெட் உரையிலே தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

பாரா 51 (2)-லே,

"In my last Budget I have raised the existing limit of Annual Turnover from Rs. 5 lakhs to Rs. 15 lakhs for exemption from turnover tax. Unfortunately, I find that this concession has been misused. The dealers have been resorting to splitting the Firm and creating additional Firms to avoid turnover tax. I therefore propose to lower the existing limit of Annual Turnover from Rs. 15 lakhs to Rs. 5 lakhs for exemption from turnover tax."

என்று மறுபடியும் 5 லட்சத்துக்குக் கொண்டு வந்துவிட்டார்கள். சென்ற ஆண்டு நாமும் 3 லட்சத்திலிருந்து 10 லட்சத்துக்குக் கொண்டு போனோம். அதே வேலையை இங்கேயும் காண்பித்தார்கள். ஆகையால்தான் 7 லட்சத்துக்கு இந்த ஆண்டு கொண்டு வந்திருக்கிறோம். மறுபடியும் இந்த வேலையை காண்பித்தார்களேயானால் நாமும் 5 லட்சத்துக்கு, அடுத்த ஆண்டு கொண்டுவர வேண்டி வரும். ஏனென்றால் வசதி படைத்தவர்களுக்குத்தான் போடுகிறோமே தவிர, ஏழைஎளிய வியாபாரிகளை எந்தவிதத்திலும் பாதிக்காது. ஆகவே, இங்கே கூக்குரல் இடுவதில் அர்த்தம் இல்லை என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே

பலரும் எடுத்துச் சொல்லிய வகையில், சிற்றுண்டிச் சாலைக்கு வரி போட்டிருக்கின்ற தன்மையை எடுத்துச் சொன்னார்கள். சிற்றுண்டிச் சாலைக்கு வரி போட வேண்டாம்; அவசியம் இல்லை என்றுதான் நாங்கள் கருதினோம்; ஆனால் மற்றைய மாநிலங்களின் வரி விதிப்பு தன்மைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கின்றபோது, அவர்கள் போட்டிருப்பதன் காரணமாக இங்கே இவ்வளவு பெரிய பற்றாக்குறை ஏற்படுகிறதே என்று சொல்லி, இந்தப் பற்றாக்குறையையொட்டி இங்கேயும் போடலாமா என்கிற தன்மையினுடைய அடிப்படையிலேதான், வரி போடுகின்ற சூழ்நிலை இருந்தது. மற்றைய மாநிலங்களுடைய நிலைமையை உங்களுக்குச் சொல்கிறேன். அந்தத் தன்மையினுடைய அடிப்படையிலே, ஆந்திர மாநிலத்தில், 5 லட்சத்துக்கு மேல் இருந்தால் 5 சதவீதம் வரி போட்டிருக்கிறார்கள். இரண்டு லட்சம் வரை அவர்கள் விற்பனைக்கு விலக்கு அளித்திருக்கிறார்கள். அதற்குமேல் இருக்கிற அத்தனை பேருக்கும் வரி இருக்கிறது. கர்நாடகத்திலே 1 லட்சம் வரையிலும் ஓட்டல்களுக்கு விலக்கு. 1 லட்சத்துக்கு மேல் 7½ லட்சம் வரையிலும் இணக்க வரி, 7,500, 10,000, 15,000 என்று. 1 லட்சம் வரைதான் விலக்கு கர்நாடகத்திலே, 7½ லட்சம் வரை இணக்க வரி. 7½ லட்சத்துக்கு மேலே பெர்சென்டேஜ் போட்டிருக்கிறார்கள். நட்சத்திர ஓட்டல்களுக்கெல்லாம் 10 பெர்சென்ட் வரி போடுகிறார்கள், குஜராத்திலே நட்சத்திர ஓட்டல்களுக்கு 8 பெர்சென்ட் வரி போட்டு இருக்கிறார்கள். மகாராஷ்டிர மாநிலத்திலே 8 பெர்சென்ட் வரி போட்டிருக்கிறார்கள். ஆந்திரா, கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களையெல்லாம் பார்த்த உடனேதான். 206 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்படும்போது, இதிலே போட்டு வைக்கலாமே, அதன்மூலம் 10 கோடி ரூபாய் வருகிறதே என்று கருதித்தான் போட்டோம். ஆனால், நாட்டில் இருக்கிற எல்லோரும், மன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிறவர்களும் எடுத்துச் சொன்னதன் காரணமாக, போட்ட வரியை எடுத்து விடுவது என்று அரசு முடிவு செய்கிறது என்பதை நான் இந்த வாய்ப்பிலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். (மேசையை தட்டும் ஒலி) ஏற்கெனவே அளிக்கப்பட்ட விலக்கு அப்படியே இருக்கிறது. இந்த ஓட்டல்களைப் பொறுத்தவரையில் அதற்கு இதன்மூலமாக 10 கோடி ரூபாய், போட்ட வரி. மற்றபடியும் இழப்பு ஏற்படுகிறது. இந்த இரண்டு மூன்று





நாட்களிலேயே இதுதான் சாக்கு என்று—0.05 காசு ஏற்றினால் நியாயம்—ஒவ்வொருவரும் 0.20 காசு ஏற்றிவிட்டிருக்கிறார்கள். ஆகவே, பழைய விலைக்கு வர வேண்டும், அப்படி வருகின்றபடி மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆக, அந்த அளவுக்கு வரிவிதிப்பிலிருந்து ஏற்கெனவே விலக்கு அளிக்கப்பட்டிருந்தது—ஆனால் இவைகளையெல்லாம் பார்த்துத்தான் போடப்பட்டது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், அதைப்போலவே நாட்டில் இருப்பவர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்துள்ளதன் காரணமாகவும், உணவுப் பண்டங்களின் விலையை அநியாயமாக உயர்த்தி விற்றதைக் கடந்த 5, 6 நாட்களாகப் பார்த்ததன் காரணமாகவும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே கேட்டுக் கொண்டதன் காரணமாகவும், போட்ட வரியை நீக்கியிருக்கிறோம். ஏற்கெனவே ஓட்டல்களைப் பொறுத்தவரையில் இருந்த விலக்கு அப்படியே இருக்கிறது. இதன் மூலமாக ஏற்படுகிற இழப்பு ரூ. 10 கோடி என்றாலும் கூட—இனி ரூ. 131 கோடி பற்றாக்குறை என்பது ரூ. 141 கோடி ஆக ஆகும் என்றாலும்—இதை ஏற்றுக் கொண்டிருக்கிறது இந்த அரசு. அடுத்து வேறு பல தன்மைகளைப்பற்றி, ஆங்காங்கே சிறு சிறு தன்மைகளைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மரம், செங்கல் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் 2 சதவீதம் தான் ஆக்கியிருக்கிறோம். அதிக கஷ்டம் வருமானால் பின்னால் ஆராய்கிற அளவுக்குச் சொல்லியிருக்கிறேன். அதனால் அதிகக் கஷ்டமில்லை என்றுதான் நினைக்கிறேன். வீடுகள், மற்றவைகள் விற்கிற தன்மை ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துப் பார்க்கிறபோது—மற்ற மாநிலங்களில் செங்கல், மரம் போன்றவைகளுக்கு 15 சதவீதம், 10 சதவீதம், 8 சதவீதம் என்று போட்டிருக்கிறார்கள். ஆனால் நாம் 2 சதவீதம்தான் போட்டிருக்கிறோம். அதிகம் கஷ்டமிருந்தால் அரசு மறுபடியும் அதை ஆராய்ந்து பார்த்து தக்க நடவடிக்கைகளை எடுக்கும். ஆனால் இப்போதிருக்கிற சூழ்நிலையில் உணவு மிக மிக முக்கியமானதாக இருப்பதன் காரணமாகவும் ஏழை எளியவர்கள் ஓட்டலுக்குப் போகிறவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்கிற காரணத்தினாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே எடுத்துச் சொன்ன வேண்டுகோளை ஏற்று போட்ட வரியை நீக்கியிருக்கிறோம். 10 கோடி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 31

ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டாலும் இனி 141 கோடிக்கு வழி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும்—மத்திய அரசு மது விலக்குக் கொள்கையை நாம் நிறைவேற்றுவதன் காரணமாக நஷ்ட ஈடு தருமானால் மாண்புமிகு உறுப்பினர் அப்துல் சமது சொன்னபடி—ஈடுசெய்கிற சூழ்நிலை ஏற்பட்டால் இந்தப் பற்றாக் குறையை ஓரளவுக்கு நாம் சரிக்கட்ட இயலும். அல்லது சிக்கன மான முறையில் கட்டுப்பாடான முறையில் சில முறைகளை மேற்கொள்வதன் மூலமாகவும் திட்டமில்லாத செலவினங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமாகவும் இதைச் சரிக்கட்டலாம். அல்லது மத்திய அரசு ஒரு ஸ்பெஷல் கன்சிடரேஷன் என்கிற அடிப் படையில் சில அசிஸ்டன்ஸ்களை சிலபல மாநிலங்களுக்குச் செய்கிற வகையில் நமக்குத் தந்தால்—அப்படிப்பட்ட வாய்ப்பு வசதிகள் ஏற்பட்டாலும் இதைச் சரிக்கட்டலாம். அப்படிச் சரிக்கட்டுகிற முயற்சியை எடுக்கும்போது இந்த அவை அதற்கு உறுதுணையாக—ஆதரவாக—ஒத்துழைப்புத் தந்து உதவும் என்று நம்புகிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல் வேறு கருத்துக்களை தங்கள் கொள்கைகளின் அடிப்படையில் எடுத்து வைத்தாலும் பணிகள் என்று வருகிறபோது அவை சிறப்புற நிறைவேற செம்மையான முறையில் நடைபெற உறு துணையாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு எல்லோருக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த நிதிநிலை அறிக்கையை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்த நிதித்துறைச் செயலர் அவர்களுக்கும், நிதித் துறையைச் சார்ந்த அதிகாரிகளுக்கும் மற்ற துறைகளைச் சார்ந்த அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் என்னுடைய நன்றி யைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மன்றத்தின் உறுப்பினர்கள் கடந்த 7 நாட்களாக இங்குப் பொது விவாதத்தில் கலந்துகொண்டு பல்வேறு கருத்துக்களைச் சிறப்பாக எடுத்துச் சொல்லியதற்காக அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக உணவுப் பண்டங்களின் மீது விதிக்கப்பட்ட வரியைக் குறைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் களும் வெளியில் பலரும் எடுத்துச் சொன்னதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் எடுத்துச் சொல்லியபோது சாப்



1987 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பாட்டுக்கு விலை ஏறுவதை அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும், விலை ஏறுவதைத் தடுக்க வேண்டு மென்றும் எடுத்துச் சொன்னதன் அடிப்படையில் அவருடைய சீரிய யோசனையின்பேரில் இந்த ரூ. 10 கோடி அளவுக்கு போடப் பட்ட வரியை நீக்கிவிடலாம் என்ற முடிவுக்கு இந்த அரசு வந்தது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்வதோடு, இதை நடைமுறைப்படுத்துவதில் அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** * *

(பிற்பகல் 1-50)

**திரு. அ. ரகுமான்கான்:** * *

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** * *

**திரு. அ. ரகுமான்கான்:** * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எடுத்துக்கூறிய குற்றச்சாட்டும், அமைச்சரவர்கள் சொன்ன பதிலும் அவைக் குறிப்பிலிருக்கத் தேவையில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** * *

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் ஓட்டல் பண்டங் களுக்கு வரி விலக்கு அளித்திருக்கிறார்கள். அதற்கு ஜனதா கட்சி சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, செகண்ட் சேல்ஸ் என்று, ஒருமுனை வரி கட்டிய சரக்குகளை வாங்கி விற்கும்போது, அதற்கு அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் என்று போடப்பட்டிருக்கிறது. வரியே இல்லாத சரக்குக்கு எப்படி வரி போட முடியுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பொருள் கள்மீது எப்படி வரி போட முடியும்? இதற்கும் விலக்கு

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அளிப்பார்களா? அடுத்து வரலாறு காணாத காலணி வழங்கும் திட்டம் பற்றிச் சொன்னார்கள். ஏழை தகப்பன்மார்களுக்கும் காலணி வழங்க வேண்டுமென்று சொன்னேன். அவர்களுக்கும் தருவார்களா?

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவரவர்களே, ஒரு முக்கியமான விஷயத்தை நிதி அமைச்சரவர்களிடமிருந்து பதிலாகப் பெற விரும்புகிறேன். இங்கே அவர்கள் பல்வேறு வரிச் சலுகைகளை அறிவித்த காலத்திலே, பிற மாநிலங்களோடு தமிழகத்தில் உற்பத்தியாகின்ற சரக்குகள் போட்டியிடுவதற்குரிய வாய்ப்பு அளிக்க இத்தகைய வரிச் சலுகை அளிப்பதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே பனியன் உற்பத்தி செய்வது திருப்பூர் நகரத்திலேதான். பலமுறை தொடர்ந்து திருப்பூர் நகர பனியன் உற்பத்தியாளர்கள் வலியுறுத்தியும்கூட, மேற்கு வங்கத்திலே, பஞ்சாபிலே, கர்நாடகத்திலே இல்லாத விற்பனை வரி திருப்பூர் நகரத்தில்—தமிழ்நாட்டில்—இருப்பதால், இந்திய மார்க்கெட்டைப் பிடிக்க தமிழ் நாட்டு பனியன்கள் வாய்ப்பு இழந்து தற்போது பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்திருக்கிறார்கள். எனவே தொடர்ந்து வலியுறுத்தப்படும் அந்தக் கோரிக்கையில் உள்ள நியாயத்தைக் கருதி மதிப்பிற்குரிய நிதி அமைச்சரவர்கள் பரிவோடு பனியன் மீதுள்ள விற்பனை வரியை ரத்து செய்ய முன்வருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை பற்றி, நான் கிட்டத்தட்ட ஓராண்டுக் காலத்திற்கு முன்பு திருப்பூர் போயிருந்தபோது, பனியன் தொழில் உற்பத்தியாளர் சங்கத்தினுடைய தலைவர் என்னைக் கண்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 2-00)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனியன் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் அவர்களிடம் இருக்கின்ற தன்மைகளை என்னிடத்திலே எழுதிக் கொடுங்கள், கவனிக்கிறோம் என்று சொன்னேன். இது





வரையிலும் எதுவும் வரவில்லை. அவர்கள் எழுதித் தரவும் இல்லை. புள்ளி விவரங்களை எழுதித் தந்தால் அதைப்பற்றி கவனிக்கலாம்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக தஞ்சை மாவட்ட மக்கள் எதிர் நோக்கிக்கொண்டிருப்பது காவிரி நதி நீர் பிரச்சினை. நம் அரசு சார்பில் மத்திய அரசுக்கு நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்ற அரசு கோரிக்கை இருக்கின்றது. அதற்கு மத்திய அரசு நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெரிய பிரச்சினை. ஏற்கனவே கேட்டாகிவிட்டது. விவாதம் முடிந்தாகிவிட்டது. இந்த விவாதத்திலேயே பதில் சொல்லிவிட்டார்கள். 1987-88 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதமும், பதிலுரையும் முடிவடைந்தன.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (1—4—1987) காலை 10 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

53. 1981-82 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956), 619-அ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

54. 1984-85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1987) 49 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ்).

55. 1984-85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

56. 1984-85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆண்டுக் கணக்குகள். [1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

88. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுக்கான அறிக்கைகளில் (வணிகம்) வேளாண்மைத்துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தொன்பதாவது அறிக்கை.

89. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) கைத்தறி, துணிகள், கதர்த்துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பதாவது அறிக்கை.

98796

D
V211,31 'N87
N82.35-4

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dhanamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 [illegible]ghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 28[illegible] and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |